# கோயம்புத்தூர் மாநகராட்சி

## வரவு செலவுத் திட்டம்
## 2026 - 2027



## திருக்குறள்

தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

குறள் – 399 அதிகாரம்–40

## விளக்கம்

தான் கற்றதைச் சொல்லக் கேட்ட உலகம் இன்பம் பெறும்.
அதைக் கண்ட கற்றவர் மேலும் கற்க விரும்புவார்.

–திருவள்ளுவர்



முத்தமிழறிஞர்

டாக்டர் **கலைஞர்** அவர்கள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்



மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்

திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்



மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்

திரு. **கே.என். நேரு** அவர்கள்



**திருமதி. கா. ரங்கநாயகி**

மாண்புமிகு மேயர்

## முகவுரை

வணக்கம்,

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்

அணிஎன்ப நாட்டிற்கிவ் வைந்து"

விளக்கம் :

நோய் இல்லாமை, செல்வவளம், நல்லவிளைச்சல், இன்பவாழ்க்கை, உரிய பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டிற்கு அழகு சேர்ப்பவை ஆகும்.

தன்னம்பிக்கை, உழைப்பு, ஒற்றுமை ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வருகிறது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்படும் தமிழ்நாடு அரசின் மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக்கான கொள்கைகள் மாநகர வளர்ச்சிக்கு வலுவான ஆதாரமாக அமைந்துள்ளன. அந்த வழிகாட்டுதலின் அடிப்படையில், மாநகராட்சி மக்களின் தேவைகளை மையமாகக் கொண்டு 2026–27 நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

"இளைய சமுதாயத்தினரின் அறிவு வளர்ச்சிக்கு கல்வி துணை நிற்பது போல், உடல் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் இன்றியமையாததாக விளங்குவது விளையாட்டு என்று சொன்னால் அது மிகையாகாது" என்ற மக்களின் முதல்வர், மற்றும் துணைமுதல்வர் அவர்களின் சிந்தனைக்கேற்ப கோவை மாநகரின் சர்வதேச தரம் வாய்ந்த ஹாக்கி மைதானம் உருவாக்கப்பட்டு சர்வதேச அளவிலான விளையாட்டு போட்டிகளில் அவர்கள் சிறந்த நிலையினை எய்திட இயலும்.

மேலும் கடந்த நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட செம்மொழிப் பூங்கா திட்டமானது சிறப்பான முறையில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டை அனைத்து துறைகளிலும் முன்னேற்றுவதற்காக இரவு பகல் பாராமல் சிந்தித்து திராவிட மாடல் என்ற மகத்தான புதிய திட்டத்தை வடிவமைத்து அதற்கு முழுமையாக செயல் வடிவம் கொடுத்து நிறைவேற்றிவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கோவை மாநகர மக்களின் மீதான அக்கறையினால் பல நூறு கோடி ரூபாய் மதிப்பிலான உட்கட்டமைப்பு மற்றும் நலத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

கல்வி என்பது சமுதாயத்தின் வலுவான அடித்தளம், மாநகராட்சி பள்ளிகளில் மாணவ மாணவியர்கள் தரமான கல்வி பெறும் வகையில் வகுப்பறை வசதிகள், விளையாட்டு உட்கட்டமைப்பு, தொழில்நுட்ப ஆதரவு மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் மேலும் விரிவுபடுத்தப்படும். திறன் மேம்பாடு, போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி, நூலக வசதிகள் போன்றவை தொடர்ந்து வலுப்படுத்தப்படும்.

சுகாதாரம் மற்றும் சுத்தம் ஒரு மாநகரின் உயிர்நாடியாகும். தமிழ்நாடு அரசின் சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கான திட்டங்களுடன் இணைந்து, திடக்கழிவு மேலாண்மை, கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் குடிநீர் விநியோகம் ஆகிய பணிகள் மேம்படுத்தப்படும். நகர்ப்புற பசுமை பரப்பை அதிகரிக்கும் நோக்கில் பூங்காக்கள், மரக்கன்றுகள் நடும் பணிகள் மற்றும் நீர்நிலைகள் பாதுகாப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப்படும்.

மகளிர் மேம்பாடு மற்றும் இளைஞர் நலன், நகர வளர்ச்சியின் முக்கிய தூண்களாகக் கருதப்படுகின்றன. தமிழ்நாடு அரசின் மகளிர் மற்றும் இளைஞர் மேம்பாடு திட்டங்களோடு இணைந்து, சுயஉதவி குழுக்கள், விளையாட்டு பயிற்சி, திறன் பயிற்சி மையங்கள் ஆகியவை நகர முன்னேற்றத்திற்கு துணைபுரியும் வகையில் செயல்படுத்தப்படும்.

மாநகராட்சியின் சாலைகள், தெருவிளக்குகள், பேருந்து நிறுத்தங்கள், மழைநீர் வடிகால் வசதிகள் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு பணிகள் மேம்படுத்தப்படும். நகர்ப்புற போக்குவரத்து ஒழுங்குமுறை, நடைபாதை வசதிகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பொதுமக்கள் நலன் கருதி செயல்படுத்தப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் வளர்ச்சிக்காக போதிய நிதியுதவி வழங்கி பல்வேறு திட்டங்கள் செவ்வனே செயல்படுத்த தொடர்ந்து வழி நடத்துகின்ற மாநில அரசுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன். நடப்பு ஆண்டு நிதிலை அறிக்கை திட்டங்களால் சிறப்பான வளர்ச்சிப்பாதையில் கோயம்புத்தூர் மாநகராட்சி தனி சிறப்பு பெற்ற மாநகரமாக திகழும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

கோயம்புத்தூர் மாநகரின் திட்டமிட்ட வளர்ச்சியை கருத்திற் கொண்டு அனைத்து நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள், துணை மேயர் அவர்கள், அனைத்து மண்டல தலைவர்கள், நிலைக்குழு தலைவர்கள், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நகராட்சி நிர்வாக இயக்குநர், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு மாநகர மன்றத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினை அன்புடன் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

அன்புடன்

திருமதி. கா. ரங்கநாயகி
மாண்புமிகு மேயர்



**திரு. மா. சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப.,**
**ஆணையாளர்**

## முகவுரை

கோயம்புத்தூர் மாநகராட்சியின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு, 2025–26 நிதியாண்டில் பல்வேறு துறைகளில் விரிவான வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ள மாநகராட்சி மக்களின் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன், உட்கட்டமைப்பு, சுற்றுச்சூழல், போக்குவரத்து, குடிநீர், கல்வி, நகர்நலம், மற்றும் பொது வசதிகள் ஆகிய துறைகளில் ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"செய்வது நமது கடமை,
செய்வதில் தான் பெருமை"

என்ற பாரதியின் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு மாநகராட்சியின் அழகையும், மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் செம்மொழி பூங்கா உருவாக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இப்பூங்கா பசுமைச் சூழலைப் பேணுவதோடு சமூக ஒற்றுமையையும் ஊக்குவிக்கும் ஒரு முக்கிய அடையாளமாக விளங்குகிறது.

கடந்த நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட செம்மொழி பூங்கா, ஹாக்கி விளையாட்டு மைதானம் மற்றும் சாலை வசதிகள் பல்வேறு திட்டங்கள், மக்களின் பயன்பாட்டில் கொண்டுவரப்பட்டு, கடந்த 2025–26ம் ஆண்டின் மாநகராட்சி நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களும் பெரும்பான்மையான அளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாலை மேம்பாட்டு பணிகள் முதற் கட்டமாக பல்வேறு திட்டங்களின் மூலம் ரூ.202.28 கோடியில் மொத்தமாக 457.08கி.மீ நீளத்திற்கு 3456 எண்ணிக்கையிலான சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது ,இதனை தொடர்ந்து இரண்டாம் கட்டமாக ரூ.123.05 கோடி மதிப்பீட்டில் 289.09கி.மீ நீளத்திற்கு 2112 எண்ணிக்கையிலான சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

நொய்யல் ஆற்றில் கழிவு நீர் செல்வதை தடுக்கும் வகையில் அமைக்கப்பட உள்ள கழிவு நீர் நிலையம் மற்றும் மாற்று திறனாளிகளுக்கான விளையாட்டு வீரர், வீராங்கனை பங்கேற்கும் வகையில் உலகதரம் வாய்ந்த பாரா ஒலிம்பிக் விளையாட்டு வளாகம் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

மாநகராட்சி மக்களுக்கு இடைவிடாத குடிநீர் வழங்கும் நோக்கில் செயல்படுத்தப்பட்டு வரும் 24x7 குடிநீர் வழங்கல் திட்டம் இந்நிதியாண்டில் பெரும்பகுதி நிறைவு பெற்று, குடிநீர் விநியோகத்தில் புதிய தரநிலையை உருவாக்கியுள்ளது.

" நீரின்றி அமையாது உலகு"

என்ற கருத்தை உணர்ந்து, குடிநீர் மேலாண்மை பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. போக்குவரத்து நெரிசலை குறைத்து, நகரம் போக்குவரத்து ஒழுங்குபடுத்தும் வகையில், மாநகராட்சியில் "பல அடுக்கு வாகன நிறுத்துமிடங்கள்" சீரமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும் முக்கிய சாலைகள் அகலப்படுத்தப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு, நடைபாதைகள் சீரமைக்கப்பட்டுள்ளன, இதன் மூலம் பயணவசதியும், போக்குவரத்து பாதுகாப்பும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

கல்வித் துறையில் பள்ளிகளுக்கு நவீன வசதிகள் ஏற்படுத்துதல், VR ஆய்வகங்கள், கண்காணிப்பு கேமராக்கள், விளையாட்டு வசதிகள், உளவியல் ஆலோசனை வகுப்புகள், தொழிற்சாலை பார்வையிடுதல், உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி, அறிவியல் கண்காட்சி, கல்விசார் மற்றும் கல்விசாரா செயல்பாடுகள், நீட், ஐ.ஐ.டி பயிற்சி வகுப்புகள் சதுரங்க பயிற்சி, கல்வி உதவித் தொகை மற்றும் திறன் தேர்வு பயிற்சி, போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, இதன் மூலம் எதிர்கால தலைமுறையை அறிவாற்றல் மிக்க சமூகமாக உருவாக்க அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது.

நகரின் சுற்றுச்சூழல் பாதுகாப்பை முன்னிறுத்தி சென்ற ஆண்டு மரக்கன்றுகள் நடப்பட்டது அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டும் சுமார் 150 இடங்களை பசுமையான பகுதியாக மாற்ற மரகன்றுகள் நடுதல் பணிகள் தொடர திட்டமிடப்பட்டுள்ளது. மகளிருக்கான பிரத்தியேகமாக "Pink" பூங்கா பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். சிறப்பு குழந்தைகளின் உடல், மன மற்றும் சமூக வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் "நம்ம சிறப்பு பூங்கா" பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். பசுமை சூழலை உருவாக்கிடும் நோக்கில் "மூங்கில் பூங்கா" நிறுவப்பட்டுள்ளது, மேலும், சுற்றுலா பயணிகள் பறவைகளை நெருக்கமாக ரசிக்கும் வகையில் நவீன தொழில்நுட்பத்துடன் பறவைகள் பூங்கா நிறுவப்படும் மற்றும் மூத்த குடிமக்களுக்கு பிரத்தியேகமாக புத்துணர்ச்சி மையம் அமைக்கப்படவுள்ளது. மேலும், சுத்தமான நகரம் திட்டங்கள், கழிவுநீர் மேலாண்மை மற்றும் நீர்நிலைகள் பாதுகாப்பு போன்ற பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெளியூர் சென்று வரும் பொதுமக்களுக்கு போக்குவரத்து வசதியினை மேம்படுத்திட காந்திபுரம் பகுதியில் ஆம்னி பேருந்து முனையம் சென்ற நிதியாண்டில் மேம்படுத்தப்பட்டுள்ளது. உக்கடம் பகுதியில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு பொதுமக்களின் வசதிக்கேற்றவாறு நகர மற்றும் புறநகர் பேருந்து

முனையங்கள் கட்டுமான பணி நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் நடைபெற்று வருகிறது. மேலும், இந்நிதியாண்டில் காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் மற்றும் சிங்காநல்லூர் பேருந்து நிலையம் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

இந்நிதியாண்டில் 6 எண்ணிக்கையிலான தினசரி மற்றும் வார சந்தைகள் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கு மண்டலத்திற்குட்பட்ட எம்.ஜி.ஆர். மார்கெட் மற்றும் புதியதாக தக்காளி மார்க்கெட் அமைத்தல் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்து பணிகள் மேற்கொள்ளப்படும்.

வரவிருக்கும் காலகட்டத்தில், மாநகராட்சியின் நீண்டகால வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு, நொய்யல் ஆற்றங்கரை மேம்பாட்டு திட்டம், கூடுதல் பூங்காக்கள் மற்றும் பெழுதுபோக்கு வளாகங்கள், புதிய குடிநீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டங்கள், மேலும் விரிவான சாலை மற்றும் போக்குவரத்து மேம்பாட்டுப் பணிகள் என பல்வேறு முக்கியத் திட்டங்கள் படிப்படியாக செயல்படுத்தப்பட உள்ளன.

மாநகராட்சி மக்களின் நலனை மையமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்ட பணிகள் இந்நிதியாண்டில் கோயம்புத்தூர் மாநகராட்சியை ஒரு மேம்பட்ட, பசுமையான நகரமாக மாற்றும் பாதையில் முக்கிய பங்காற்றும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

திரு. மா. சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப.,

| வ.எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | ஒட்டு மொத்த நிதி நிலைமை | 1 |
| | கல்விப்பிரிவு | |
| | கல்விப்பிரிவு வளர்ச்சி பணிகள் முன்னுரை | 2 |
| 1. | வகுப்பறைகள் கட்டுதல் / கூடுதல் வகுப்பறைகள் மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 5 |
| 2. | 100 ஆண்டுகள் பழமையான பள்ளிகளை புனரமைத்தல் | 8 |
| 3. | அனைத்து பள்ளிகளுக்கும் கழிப்பறை வசதி மேம்படுத்துதல் | 9 |
| 4. | மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாலை சிற்றுண்டி வழங்குதல் . | 9 |
| 5. | விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் | 10 |
| 6. | அங்கன்வாடி மையங்கள் புதுப்பித்தல் | 11 |
| 7. | மாநகராட்சி பள்ளி எல்கேஜி –யுகேஜி வகுப்புகள் செயல்பாடு, ஆசிரியர்கள் மற்றும் உதவியாளர்கள் நியமித்தல் | 12 |
| 8. | கூரையுடன் கூடிய உள் விளையாட்டு அரங்கம் அமைத்தல் | 13 |
| 9. | கோயம்புத்தூர் மாநகராட்சிப் பள்ளிகளில் குப்பைத் தொட்டிகள் வழங்கல் | 14 |
| 10. | மாநகராட்சி பள்ளிகளில் அரங்கம் (Auditorium) அமைத்தல். | 15 |
| 11. | மாநகராட்சி பள்ளிகளில் 8–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை உள்ள பள்ளி மாணவர்களுக்கு வழிகாட்டுதல் (Mentoring) வழங்குதல். | 16 |
| 12. | சூரிய மின்சக்தி அமைப்பு (Solar Panel) நிறுவுதல் | 17 |
| 13. | பசுமை பள்ளிகள் (Green Schools) அமைத்தல். | 18 |
| 14. | மொழி ஆய்வகம் (Language Lab) அமைத்தல் | 18 |
| 15. | பொது உணவருந்தும் பகுதி (Common Dinning Area) அமைத்தல் | 19 |

| வ.எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 16. | தேசிய / சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு காலணிகள் வழங்குதல் | 19 |
| 17. | மாணவர்களை கல்விச் சுற்றுலா (Educational Trips ) அழைத்துச் செல்லுதல் | 20 |
| 18. | LKG மற்றும் UKG மாணவர்களுக்கு விளையாட்டு பகுதி (Play Area ) அமைத்தல் | 21 |
| 19. | 10 மற்றும் 12-ம் வகுப்பு தேர்வு முடிவுகள் பகுப்பாய்வு (Result Analysis ) மேற்கொள்ளுதல் | 22 |
| 20. | மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் திறன் தேர்வு பயிற்சி வகுப்புகள் நடத்துதல் | 22 |
| 21. | மண்டல, மாநில, தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு மாநகராட்சி சின்னம் (Corporation Logo ) பதிக்கப்பட்ட விளையாட்டு டி-ஷர்ட் வழங்குதல் | 22 |
| 22. | விளையாட்டு மைதானங்கள் உட்பட விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் | 23 |
| 23. | Smart class அமைத்து தருதல் | 24 |
| 24. | மேல்நிலை மற்றும் உயர் நிலைப் பள்ளிகளில் ஆய்வகங்கள் மேம்பாடுசெய்தல் | 25 |
| 25. | மாநகராட்சிப் பள்ளிகளில் Public Address System அமைத்து தருதல் | 26 |

| வ.எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 26. | மாநகராட்சி பள்ளி 10 மற்றும் 12-ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி வழங்கும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் விதமாக கல்விச் சுற்றுலா அழைத்து செல்லுதல் | 27 |
| 27. | கல்விசார் மற்றும் கல்விசாரா செயல்பாடுகள் விரிவுபடுத்துதல் | 27 |
| 28. | பள்ளி மாணவர்களுக்கான தொழிற்சாலைகள் பார்வையிடுதல் (Industrial Visit ) | 28 |
| 29. | மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனை வழங்குதல் | 29 |
| 30. | சதுரங்க பயிற்சி வழங்குதல் | 30 |
| 31. | 12-ம் வகுப்பு முடித்து ஐ.ஐ.டி., என்.ஐ.டி., மற்றும் மருத்துவக் கல்வி பெறும் மாணவர்களுக்கு கட்டண உதவி மற்றும் நுழைவுத் தேர்வு பயிற்சி | 31 |
| 32. | மாநகராட்சி பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பாடங்களில் 100 விழுக்காடு மதிப்பெண்கள் பெரும் மாணவ மாணவியருக்கு ஊக்கத் தொகை மற்றும் 100 விழுக்காடு மதிப்பெண்கள் பெறச் செய்யும் வகுப்பாசிரியர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல் | 32 |
| 33. | கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி (Career Guidance ) நடத்துதல் | 33 |
| 34. | அறிவியல் கண்காட்சி நடத்துதல் | 33 |
| 35. | இருக்கையுடன் கூடிய மேசைகள் (Desk, Bench ) வழங்குதல் | 34 |
| 36. | அனைத்து பள்ளிகளுக்கும் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்குதல் | 35 |

| வ.எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 37. | கற்றல் கற்பித்தல் பயிற்சி கையேடு, வரை கட்டத்தாள் மற்றும் வரைபடம் வழங்குதல் | 36 |
| 38. | அனைத்து பள்ளி மாணவர்களுக்கு Interactive Learning மற்றும் Sustainability திட்டம் வழங்குதல் | 36 |
| 39. | அனைத்து பள்ளிகளுக்கும் லேப்டாப் / கம்ப்யூட்டர், யூபிஎஸ் மற்றும் இன்வெர்ட்டர் பேட்டரி வழங்கல் | 37 |
| 40. | பள்ளிக்கு வருகை குறைவான மாணவர்களுக்கு பெற்றோர்களுடன் ஆலோசனை வழங்குதல் . | 37 |
| 41. | மாநகராட்சி பள்ளிகளில் 95 விழுக்காடுக்கு மேல் தேர்ச்சி பெறும் பள்ளிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குதல். | 38 |
| 42. | மாணவர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்த நாளிதழ்கள் வழங்குதல் . | 38 |
| 43. | மிதிவண்டிகள் நிறுத்த மேற்கூரையுடன் கூடிய இடம் அமைத்து தருதல் . | 39 |
| 44. | தட்டச்சு பயிற்சி அளித்தல் | 39 |
| 45. | வினாடிவினா போட்டிகள் நடத்துதல் | 40 |
| 46. | கிரிக்கெட் பயிற்சி அளித்தல் | 41 |
| 47. | எரியூட்டும் இயந்திரம் (Incinerator ) வழங்குதல் | 41 |
| 48. | பள்ளி மேலாண்மைக்குழு மூலம் ஆசிரியர்கள் நியமித்தல். | 42 |
| 49. | மாநகராட்சி பள்ளிகளில் CCTV அமைத்தல் | 42 |
| 50. | மாணவர் படைப்புகள் புத்தகமாக வெளியிடுதல் | 43 |
| 51. | மாணவர்களின் பற்கள் சீரமைப்பு – மலரும் புன்னகைத் திட்டம் | 43 |

| வ.எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 52. | மாணவர் தொடர்கல்வி திட்டம் கண்காணித்தல் | 43 |
| 53. | மாநகராட்சி பள்ளி தரம் உயர்த்துதல் | 44 |
| 54. | மாநகராட்சி பள்ளிகளில் NCC திட்டம் செயல்படுத்துதல் | 44 |
| 55. | கலை திருவிழா மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பித்த மாணவர்களுக்கு பரிசுத்தொகை வழங்குதல் | 45 |
| 56. | ரோபோட்டிக்ஸ் ஆய்வகம் அமைத்தல் – 4 பள்ளிகள் | 45 |
| 57. | விளையாட்டு மைதானம் அமைத்தல் | 46 |
| | பொது சுகாதாரப்பிரிவு | |
| 1. | பொது சுகாதார ஆய்வகங்களுக்கு தைராய்டு பரிசோதனை கருவிகள் கொள்முதல் செய்தல் | 47 |
| 2. | நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் LED பலகைகள் பொருத்துதல் | 47 |
| 3. | அறுவை சிகிச்சை அரங்குகள் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு Generator வசதி ஏற்படுத்தி தருதல் | 47 |
| 4. | நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் CCTV கண்காணிப்பு கேமரா வசதி ஏற்படுத்துதல் | 48 |
| 5. | நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு NASG மருத்துவ உபகரணங்கள் வழங்குதல் | 48 |
| 6. | பொது சுகாதாரப் பிரிவிற்கு கணினி உள்ளிட்ட தளவாடப் பொருட்கள் வாங்குதல் | 48 |

| வ.எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 7. | நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கணினி வழங்குதல் | 49 |
| 8. | சீதாலட்சுமி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாதிரி மகப்பேறு சிகிச்சை மையம் ஏற்படுத்துதல் (Model Primary Maternity Care Center ) | 49 |
| 9. | தாய்சேய் நல கண்காணிப்பு அழைப்பு மையம் ஏற்படுத்துதல் (Maternal Child Health Call Centre ) | 49 |
| 10. | டயாலிசிஸ் மையங்கள் அமைத்தல் (Dialysis Centre ) | 50 |
| 11. | நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பொதுமக்களுக்கு இலவசமாக பல்சிகிச்சை வழங்குதல். | 51 |
| 12. | பொது சுகாதார ஆய்வகங்களில் நோய் கண்டறியும் பரிசோதனைகள் மேற்கொள்ளுதல் | 52 |
| 13. | நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேசிய தரஉறுதி (NQAS ) சான்றிதழ் பெறுதல் | 53 |
| 14. | நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டிடம் மற்றும் கூடுதல் கட்டிடம் கட்டுமான பணிகள் | 53 |
| 15. | நான்கு புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல் | 55 |
| 16. | இயன்முறை சிகிச்சை மையங்கள் அமைத்தல் | 55 |
| 17. | நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் செவிலியர்கள், நகர சுகாதார செவிலியர்கள் , மருந்தாளுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் | 55 |
| 18. | நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு (UPHC ) தூய்மைப்பணியாளர்கள் மற்றும் காவலாளிகள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் | 56 |

| வ.எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 19. | நகர்ப்புற நல்வாழ்வு மையங்கள் (U–HWC) மற்றும் பொது சுகாதார ஆய்வகங்களுக்கு (U–CPHL) இரவு காவலாளிகளை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் | 56 |
| 20. | ஒப்பந்த அடிப்படையில் கொசு ஒழிப்பு பணியாளர்களை பணியமர்த்துதல் | 57 |
| 21. | நிரந்தர தூய்மைப்பணியாளர்களுக்கு சீருடைகள் வழங்குதல் | 58 |
| 22. | நிரந்தர தூய்மைப்பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குதல் | 58 |
| 23. | நிரந்தர தூய்மைப் பணியாளர்களுக்கு தளவாட பொருட்கள் வழங்குதல் | 59 |
| 24. | பிளிச்சிங் பவுடர் மற்றும் நீர்த்த சுண்ணாம்புதூள் வாங்கி வழங்குதல் | 60 |
| 25. | கொசு ஒழிப்பு பணிகளுக்காக பைரத்திரம் புகை மருந்துகள் வாங்கி வழங்குதல் | 61 |
| 26. | கொசு ஒழிப்பு பணிகளுக்காக மாலத்தியான் புகை மருந்துகள் வாங்கி வழங்குதல் | 61 |
| 27. | கொசுபுழு அழிப்பு பணிகளுக்காக டெமிபாஸ் மருந்துகள் வாங்கி வழங்குதல் | 62 |
| 28. | கொசுபுழு அழிப்பு பணிகளுக்காக பேசில்லஸ் துரஞ்சியன்சிஸ் மருந்துகள் வாங்கி வழங்குதல் | 62 |
| 29. | வெள்ளலூர் உரக்கிடங்கிற்கு கிருமி நாசினி மருந்துகள் வாங்கி வழங்குதல் | 62 |
| 30. | மாநகராட்சியில் (Single Window Service Centre)) ESI / EPF புகார் உதவி மையம் அமைப்பது | 63 |

| வ.எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 31. | தனியார் கழிவுநீர் வாகன உரிமையாளர்கள்,ஓட்டுநர்கள் மற்றும் துலக்குநர்களுக்கான பயிற்சி நடத்துதல் | 64 |
| 32. | பூங்கா பராமரிப்பு பணிகள் | 65 |
| 33. | தூய்மைப்பணியாளர்களுக்கென உணவு வழங்கும் திட்டம் செயல்படுத்துதல் | 66 |
| 34. | ஒப்பந்த அடிப்படையில் சாக்கடை பணி தூய்மை பணியாளர்களை பணியமர்த்தி பணிகள் மேற்கொள்வது | 67 |
| 35. | சாலைகளின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள மையத்தடுப்பு சுவர் பகுதிகளில் உள்ள மணல் மற்றும் குப்பைகளை அகற்றும் பணிக்கு தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் பணியமர்த்தியது | 67 |
| 36. | சாலைகளின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள மையத்தடுப்பு சுவர் பகுதிகளில் அகற்றப்படும் மணல் மற்றும் குப்பைகளை சேகரிக்க இரண்டு Mini Tipper வாகனங்களை தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்வது | 68 |
| 37. | மழை நீர் வடிகாலில் மண் (Silt) தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளுதல் | 68 |
| 38. | திடக்கழிவு அகற்றும் வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள ஜி.பி.எஸ். கருவிகளை கணினி மூலம் கண்காணிக்கும் பணிக்கு 50 கணினி இயக்கும் வெளிக்கொணர்வு முறையில் பணியாளர்களை பணியமர்த்தல் | 69 |
| 39. | தெற்கு மண்டல வார்டு எண்.99–க்குட்பட்ட வெள்ளலூர் குப்பை கிடங்கிற்கு ஒப்பந்த அடிப்படையில் காவலர்களை பணியமர்த்தல் | 69 |

| வ.எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 40. | திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளுக்கு ஒப்பந்ததாரர் மூலம் அனைத்து மண்டலங்களில் தூய்மைப்பணிகளை மேற்கொண்டது | 69 |
| 41. | மாநகர் பகுதிகளில் சுற்றித்திரியும் வீடில்லா நாய்களுக்கு வெறிநோய் தடுப்பு ஊசிகள் (ARV) செலுத்தும் திட்டம் | 70 |
| 42. | மாநகர் பகுதிகளில் சுற்றித்திரியும் வீடில்லா நாய்களுக்கு இனப்பெருக்க கருத்தடை (ABC) மேற்கொள்ளும் திட்டம் | 71 |
| 43. | நிறுவனங்களில் பிடிபடும் வீடில்லா நாய்களை காப்பகத்தில் (Stray Dog Shelters ) வைத்து பராமரித்தல் திட்டம் | 72 |
| 44. | ஒப்பந்த தூய்மை பணியாளர்களுக்கு SUY திட்டத்தின்கீழ், கழிவு நீர் வாகனங்கள் கொள்முதல் செய்யும் திட்டம் | 72 |
| 45. | NULM திட்ட நிதியின் மூலம் மாநகராட்சி பகுதிகளில் மூன்று ஆதரவற்றோர் இல்லங்கள் செயல்படுத்தும் திட்டம் | 73 |
| | பொறியியல் பிரிவு | |
| 1. | சாலை மேம்பாட்டு பணிகள் முதற் கட்டம் | 74 |
| 2. | சாலை மேம்பாட்டு பணிகள் இரண்டாம் கட்டம் | 75 |
| 3. | புதிய சாலை மேம்பாட்டு பணிகள் | 75 |
| 4. | அவிநாசி சாலை சந்திப்பில் மேல்மட்ட நடைபாதை (ஸ்கை வாக் ) அமைத்தல் | 76 |
| 5. | காந்திபுரம் கிராஸ்கட் சாலை மேல்மட்ட நடைபாதை (ஸ்கை வாக் ) அமைத்தல் | 77 |
| 6. | உக்கடம் பேருந்து நிலையம் பகுதியில் மேல்மட்ட நடைபாதை (ஸ்கை வாக் ) அமைத்தல் | 78 |

| வ.எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 7. | சாலை ஓர வாகன நிறுத்துமிடம் | 79 |
| | அ)K.G. தியேட்டர் சாலையில் பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்தல் | 79 |
| | ஆ)கிராஸ்கட் சாலையில் பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்தல் | 80 |
| | இ)கோணியம்மன் கோவில் எதிர்புறம் வாகன நிறுத்துமிடம் அமைத்தல் | 80 |
| | ஈ)உக்கடம் பேருந்து நிலையத்திற்கு எதிரில் வாகனம் நிறுத்துமிடம் : | 81 |
| | உ)லங்கா கார்னர் பகுதியில் மேம்பாட்டுப்பணிகள் | 81 |
| 8. | பேருந்து நிலையம் | 82 |
| | அ) உக்கடம் பேருந்து நிலையம் மறு சீரமைத்தல் | 82 |
| | ஆ) காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் மறு சீரமைத்தல் | 83 |
| | இ) சிங்காநல்லூர் பேருந்து நிலையம் மறுசீரமைத்தல் | 84 |
| 9. | வணிக வளாகம் | 86 |
| | அ) கிராஸ்கட் சாலையில் வணிக வளாகம் கட்டுதல் | 86 |
| | ஆ) டி.பி சாலையில் உணவுக்கூடம் கட்டுதல் | 87 |
| | இ) கிருஷ்ணசாமி சாலையில் வணிக வளாகம் அமைத்தல் | 88 |
| 10. | இரத்தினபுரி பகுதியிலிருந்து திருச்சி சாலை வரை உள்ள சங்கனூர் பள்ளத்தின் இருபுறமும் தடுப்புச்சுவர் கட்டி மேம்பாடு செய்தல் | 88 |
| 11. | நமக்கு நாமே திட்டம் | 89 |
| 12. | நீர் நிலைகளை பராமரித்தல் | 90 |
| 13. | நொய்யல் ஆற்றினை மேம்படுத்துதல் | 92 |
| 14. | முனிசிபல் பத்திரம் (Municipal Bond ) | 96 |

| வ.எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 15. | சுய உதவி குழுக்கள் மூலம் பூங்காக்கள் பராமரித்தல் | 97 |
| 16. | பராமரிப்பு பணிகள் | 97 |
| | அ) பிரதான அலுவலகம் மற்றும் மண்டலம் / வார்டு அலுவலக வளாகங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 97 |
| | ஆ)இயக்குதல் மற்றும் பராமரித்தல் | 98 |
| | இ) தெரு விளக்குகள் புதிதாக அமைத்தல் மற்றும் பராமரித்தல் : | 98 |
| | ஈ) தெருவிளக்கு பராமரித்தல் | 104 |
| 17. | மழைநீர் வடிகால்களை தூர்வாருதல் | 105 |
| 18. | மரக்கன்று நடுதல் | 105 |
| 19. | மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலங்கள் திரும்பக் கட்டுதல் | 106 |
| 20. | கட்டட மேம்பாட்டுப்பணிகள் | 107 |
| 21. | குடிநீர் குழாய்களை பராமரித்தல் | 108 |
| 22. | குழந்தைகளுக்கான நம்ம சிறப்பு பூங்கா | 109 |
| 23. | குழந்தைகள் விளையாட்டு மைதானம் | 110 |
| 24. | தெரு பெயர் பலகைகள் அமைத்தல் | 110 |
| 25. | பேருந்து நிழற்குடை அமைத்தல் | 111 |
| 26. | புதியதாக வணிக வளாகம் கட்டுதல் | 112 |
| 27. | சமுதாயக் கூடம் அமைத்தல் | 113 |
| 28. | STEM பூங்காவில் அறிவியல் சார்ந்த வகையில் கூடுதல் மேம்பாடு | 113 |
| 29. | மூங்கில் பூங்கா விரிவாக்கம் | 114 |
| 30. | பறவைகள் பூங்கா | 115 |
| 31. | நாய்கள் கருத்தடை மற்றும் பாதுகாப்பு மையம் (ABC) | 116 |

| வ.எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 32. | மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு | 116 |
| 33. | பணி நிலையம் (Work Station ) அமைத்தல் | 117 |
| 34. | நீச்சல் குளம் அமைத்தல் | 117 |
| 35. | சந்தை அமைத்தல் | 118 |
| 36. | புதிய நூலகம் அமைத்தல் | 119 |
| 37. | மயானம் அமைத்தல் | 120 |
| 38. | புதிய வாகனங்கள் | 121 |
| 39. | விளையாட்டு மைதானம் | 122 |
| 40. | பாரா ஒலிம்பிக் பல் விளையாட்டு வளாகம் கூடுதல் அபிவிருத்தி பணி (கட்டம் II) | 123 |
| 41. | ஸ்பான்ச் பார்க் | 124 |
| 42. | சாலை பாதுகாப்பு பூங்கா | 124 |
| 43. | நடைபாதை | 125 |
| 44. | மின்வாகன சார்ஜ் நிலையம் | 126 |
| 45. | போக்குவரத்து தீவு (Traffic Island ) | 126 |
| 46. | இறைச்சி கூடம் | 128 |
| 47. | நீர்நிலைகள் மேம்பாடு | 128 |
| 48. | மையத் திட்டு (Centre Median ) அமைத்தல் | 129 |
| 49. | அங்கன்வாடி மையம் | 130 |
| 50. | புதிய பூங்காக்கள் | 131 |
| 51. | மகளிர் பூங்கா (Pink Park ) | 132 |
| 52. | புதிய கழிப்பிடங்கள் மற்றும் பராமரித்தல் | 133 |
| 53. | உடற்பயிற்சி கூடம் | 134 |
| 54. | உயர்மட்ட பாலங்களின் கீழ்ப்பகுதியில் மேம்பாடு பணிகள் | 136 |
| 55. | பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான பாதுகாப்பான பாதை அமைத்தல் | 138 |

| வ.எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 56. | ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் | 139 |
| 57. | பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் – இயக்குதல் மற்றும் பராமரித்தல் | 140 |
| 58. | அறிவு சார் மையம் திறன் மேம்பாட்டு பயிற்சி | 141 |
| 59. | செம்மொழி பூங்கா – மலர் கண்காட்சி | 142 |
| 60. | மூத்த குடிமக்களுக்கான புத்துணர்ச்சி மையம் | 143 |
| 61. | வெள்ளலூர் குப்பை கிடங்கு மேம்பாட்டு பணி | 144 |
| 62. | முதல்வர் படைப்பகம் கூடுதல் அபிவிருத்தி பணி மேற்கொள்ளுதல் | 145 |
| 63. | நூலகத்தில் உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்துதல் | 146 |
| | பாதாள சாக்கடை திட்ட பணிகள் | |
| 1. | குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (அம்ரூத்திட்டம்) | 147 |
| 2. | வடவள்ளி, வீரகேரளம், கவுண்டம்பாளையம் மற்றும் துடியலூர் பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம். (மண்டலம் 5,7) | 148 |
| 3. | கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதியான சின்னவேடம்பட்டி சரவணம்பட்டி (பகுதி) மற்றும் வெள்ளக்கிணறு உள்ளடக்கிய ஒன்பது வார்டுகளில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் (மண்டலம் 6) | 149 |
| 4. | ஒண்டிப்புதூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குட்பட்ட விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் | 150 |
| 5. | புதிய பாதாள சாக்கடை திட்ட பணிகள் | 151 |

| வ.எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | குடிநீர் விநியோக பணிகள் | |
| 1. | 24 மணி நேர குடிநீர் திட்டம் | 153 |
| 2. | துடியலூர், சரவணம்பட்டி, சின்னவேடம்பட்டி, வெள்ளக்கிணறு, விளாங்குறிச்சி, காளப்பட்டி, குறிச்சி மற்றும் குனியமுத்தூர் ஆகிய எட்டு பகுதிகளுக்கு குடிநீர் பகிர்மான அபிவிருத்தி பணி | 154 |
| 3. | புதிய குடிநீர் திட்ட பணிகளின் விவரம் | 154 |
| 4. | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் – குடிநீர் கட்டணம் | 155 |
| | பருவநிலை நிதிஅறிக்கை (City – Climate Budget) – திட்ட வரைவு | |
| 1. | நீர்வள மேலாண்மை மற்றும் புத்துயிரூட்டுதல் | 155 |
| 2. | நகர்ப்புற பசுமையாக்குதல் மற்றும் பல்லுயிர் பெருக்கம் | 156 |
| 3. | பருவநிலை தழுவல் மற்றும் வெப்பத்தைத் தணித்தல் | 156 |
| | திடக்கழிவு மேலாண்மை திட்டம் | |
| 1. | இயற்கை எரிவாயு மையம் (Bio CNG ) | 157 |
| 2. | குப்பையிலிருந்து மின் உற்பத்தி செய்தல் (Waste to Energy) | 158 |
| 3. | Bio–Mining திட்டம் | 159 |
| 4. | வெள்ளலூர் குப்பைக் கிடங்கு சுற்றுச்சுவர் அமைத்தல் | 160 |
| 5. | குப்பை மாற்று நிலையங்கள் | 160 |
| 6. | திடக்கழிவு வாகனங்கள் நிறுத்துமிடம் | 161 |
| | புவியியல் தகவல் பிரிவு பணிகள் | 162 |
| | நகரமைப்புப்பிரிவு | |
| 1. | மாநகராட்சிக்கு சொந்தமான பொது ஒதுக்கீடு இடங்கள், நிலங்கள் மற்றும் நீர் நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கைகள் | 163 |

| வ.எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 2. | பொது ஒதுக்கீடு இடங்களில் பசுமை தோட்டம் ஏற்படுத்துதல் | 164 |
| 3. | அனுமதியற்ற விளம்பரங்கள்அகற்றுதல் | 165 |
| 4. | சாலையோர ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் | 165 |
| 5. | அனுமதியற்ற / விதிமீறல் கட்டுமானங்களை டிரோன் மூலம் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் | 165 |
| | மாமன்ற பிரிவு | 166 |
| | வருவாய் பிரிவு | |
| 1. | புதிய மார்க்கெட் மற்றும் வணிக வளாகம் அமைத்தல் | 167 |
| 2. | ஒரு வார்டுக்கு ஒரு வரிவசூல் மையம் அமைத்தல் | 168 |
| 3. | உணவு அரங்கு (Food Court ) | 168 |
| 4. | உணவு வழங்கும் திட்டத்திற்கு சமையல் அறை கட்டி வாடகைக்கு விடுதல் | 168 |
| 5. | வாகன நிறுத்துமிட வசதியுடன் பேருந்து நிழற்குடை அமைத்தல் | 169 |
| 6. | வாகன நிறுத்துமிடம் | 169 |
| 7. | பல அடுக்கு வாகனங்கள் நிறுத்துமிடம் (Multi level Car Parking ) | 170 |
| 8. | மாடு அறுவைமனை அமைத்தல் | 170 |
| 9. | நவீன கட்டண கழிப்பிடம் | 170 |
| 10. | திறந்தவெளி விளையாட்டு மைதானம் (Turf) | 171 |
| 11. | செம்மொழி பூங்கா | 171 |
| | பொதுப்பிரிவு | |
| 1. | மாநகராட்சி பணியாளர்களுக்கான பயிற்சி | 172 |
| 2. | பணியாளர்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளுதல் | 172 |

# ஒட்டுமொத்த நிதி நிலைமை

2026–27ம் நிதியாண்டில் வருவாய் வரவினம் மற்றும் மூலதன வரவினம் மொத்தம் ரூ.4915.50 கோடி எனவும், வருவாய் செலவினம் மற்றும் மூலதன செலவினம் மொத்தம் ரூ.5041.71 கோடி எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் 2026–27ம் நிதியாண்டில் நிகரப் பற்றாக்குறை ரூ.126.21 கோடி ஆகும்.

| *Rs. In Crore – ரூ. கோடியில்* | | | | |
|---|---|---|---|---|
| **Details –விபரம்** | Revenue Fund - பொது நிதி | Water Supply and Drainage Fund – குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி | Elementary Education Fund - ஆரம்பக் கல்வி நிதி | Total - மொத்தம் |
| Revenue Receipts - வருவாய் வரவினம் | 1,254.08 | 725.23 | 113.00 | 2,092.31 |
| Capital Receipts - மூலதன வரவினம் | 1,940.36 | 881.13 | 1.70 | 2,823.19 |
| **Total - மொத்தம்** | **3,194.44** | **1,606.36** | **114.70** | **4,915.50** |
| Revenue Expenditure - வருவாய் செலவினம் | 1,010.64 | 642.72 | 60.75 | 1,714.11 |
| Capital Expenditure - மூலதன செலவினம் | 2,301.09 | 974.86 | 51.65 | 3,327.60 |
| **Total – மொத்தம்** | **3,311.73** | **1,617.58** | **112.40** | **5,041.71** |
| **SURPLUS - உபரி / (DEFICIT) (பற்றாக்குறை)** | **(117.29)** | **(11.22)** | **2.30** | **(126.21)** |

# கல்விப் பிரிவு

## முன்னுரை

2025–2026 ஆம் நிதியாண்டில் கோயம்புத்தூர் மாநகராட்சி கல்விப் பிரிவு மூலம் மாநகராட்சி பள்ளி மாணவர்களின் கல்வித் தரம், மனநலம், உடல்திறன், தொழில்நுட்ப அறிவு மற்றும் சமூக பொறுப்புணர்வு ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

மாணவர்களின் அறிவுசார் திறனை மேம்படுத்தும் வகையில், ரூ.23,42,240/– செலவில் 150 மாணவர்களுக்கு AI அடிப்படையிலான சதுரங்க பயிற்சி வழங்கப்பட்டு, தர்க்கரீதியான சிந்தனை, கவனம் மற்றும் தீர்வு காணும் திறன் வளர்க்கப்பட்டது. இத்திட்டத்தின் பயனாக, மாநகராட்சி பள்ளிகளைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் சர்வதேச அளவில் FIDE மதிப்பெண் பெற்ற வீரர்களாக உருவாகியுள்ளது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

மாணவர்களின் மனநல பாதுகாப்பை உறுதி செய்ய ரூ.20,00,000/– செலவில் 10 முதல் 17 வயது வரையிலான மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனை மற்றும் மனநல மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு, மனஅழுத்தம் குறைப்பு மற்றும் தன்னம்பிக்கை உயர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மேம்படுத்த ரூ.23,17,500/– செலவில் 15 மாநகராட்சி பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு நிலைத்த வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பள்ளி மட்டத்தில் பசுமை குழுக்கள் உருவாக்கப்பட்டன.

மாணவர்களின் உடல் மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்காக ரூ.92,16,500/- செலவில் 64 மாநகராட்சி பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு விளையாட்டு, சுய பாதுகாப்பு மற்றும் கலைப் பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன், இப்பயிற்சிகளின் தொடர்ச்சியாக மாணவர்கள் பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்று பரிசுகள் பெற்றுள்ளனர். இச்செயல்பாடுகளின் கீழ் கலைத் திருவிழா (Kalai Thiruvizha) நிகழ்வுகளில் மொத்தம் 130 மாணவர்கள் பங்கேற்றுள்ளனர். அதேபோல், Inter School Level போட்டிகளில் மொத்தம் 144 மாணவர்கள், State Level போட்டிகளில் மொத்தம் 6 மாணவர்கள் பங்கேற்றுள்ளனர்.

மேலும், ரூ.7,04,312/- செலவில் 7 மாநகராட்சி பள்ளிகளுக்கு பேண்ட் இசைக்கருவிகள் வழங்கப்பட்டு, தேசிய மற்றும் மாநகராட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்பு அதிகரிக்கப்பட்டது.

பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கில், ரூ.16,67,777/- செலவில் 25 மாநகராட்சி பள்ளிகளைச் சேர்ந்த 500 மாணவர்களுக்கு உதவித்தொகைத் தேர்வு பயிற்சி வழங்கப்பட்டது. மேலும், ரூ.7,29,400/- செலவில் 15 மாநகராட்சி பள்ளிகளைச் சேர்ந்த 126 மாணவர்களுக்கு NEET தேர்வுக்கான பயிற்சி வழங்கப்பட்டு, மருத்துவக் கல்விக்கான சமவாய்ப்பு உருவாக்கப்பட்டது. 17 மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு ரூ.49,56,777/- செலவில் தொழில் வழிகாட்டல் மற்றும் மேற்படிப்பு ஆலோசனை வழங்கப்பட்டு, உயர்கல்வி மற்றும் தொழில் தேர்வுகளில் தெளிவு உருவாக்கப்பட்டது.

மாணவர்களின் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் ரூ.41,25,990/- செலவில் அனைத்து மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கும் தமிழ் மற்றும் ஆங்கில செய்தித்தாள்கள் வழங்கப்பட்டு, மொழித்திறன் மற்றும் பொதுஅறிவு மேம்படுத்தப்பட்டது.

மேலும், 28 மாநகராட்சி பள்ளிகளைச் சேர்ந்த 8 முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு AI மற்றும் டிஜிட்டல் திறன் பயிற்சி வழங்கப்பட்டு, எதிர்கால தொழில்நுட்பத் துறைகளுக்கான அடிப்படை அறிவு ஏற்படுத்தப்பட்டது.

முன்பள்ளி கல்வியை வலுப்படுத்தும் நோக்கில் 63 மாநகராட்சி பள்ளிகளில் LKG மற்றும் UKG வகுப்புகள் விரிவாக்கம் செய்யப்பட்டு, விளையாட்டு முறை கற்றல், குழந்தை நட்பு வகுப்பறை அமைப்பு மற்றும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் அடிப்படை கல்வித் தரம் மேம்படுத்தப்பட்டது. மேலும், விருதுநகர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்ட கல்வித் திட்டங்களை ஆய்வு செய்வதற்காக கல்வித் துறை குழு நேரில் பயணம் செய்து, சிறந்த நடைமுறைகளை கோயம்புத்தூரில் செயல்படுத்தும் வகையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட திட்டங்கள் மாநகராட்சி பள்ளி மாணவர்களின் கல்வி மற்றும் முழுமையான வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளதால், இத்திட்டங்களை 2026–2027 ஆம் நிதியாண்டிலும் தொடர்ந்து விரிவாக்கத்துடன் செயல்படுத்த முன்மொழியப்படுகிறது.

# 2026–2027ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டங்கள்

## 1. வகுப்பறைகள் கட்டுதல் / கூடுதல் வகுப்பறைகள் மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்

மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கும் அனைத்து பள்ளிகளிலும் மாணவர் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு கூடுதல் வகுப்பறைகள் கட்டவும், பழுதடைந்த கட்டிடங்களில் தேவையான மராமத்து பணிகளை மேற்கொள்ளவும் கடந்த ஆண்டுகளில் மேற்கொண்ட பணிகளின் தொடர்ச்சியாக, இந்நிதியாண்டிலும் ஐந்து மண்டலங்களிலும் ஏற்கனவே செயல்பட்டு வரும் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டவும், பழுதடைந்த கட்டிடங்களில் தேவையான மராமத்து பணிகளை மேற்கொள்ளவும், மாணவர்களின் பாதுகாப்பிற்காக சுற்றுச்சுவர் மற்றும் வளைவு (Arch) அமைக்க ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பள்ளிகளில் பணிகள் மேற்கொள்ளப்படும்.



| வ. எண் | மண்டலம் | பள்ளியின் இடம் | மதிப்பீட்டுத் தொகை ரூ.கோடியில் |
|---|---|---|---|
| 1 | கிழக்கு | 1. வார்டு எண் .6 க்குட்பட்ட கருப்பராயன் பாளையம் மாநகராட்சி துவக்கப்பள்ளி | 1.00 |
| | | 2. வார்டு எண் 58, ஒண்டிப்புதூர் தெற்கு பகுதியில் உள்ள மாநகராட்சி தொடக்கப் பள்ளி | 0.90 |
| | | 3. வார்டு எண் 59,கிருஷ்ணபுரம் பகுதியில் உள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளி | 1.50 |
| 2 | வடக்கு | 1. வார்டு எண். 10 க்குட்பட்ட ஷாஜகான் நகர் | 0.50 |
| | | 2. வார்டு எண். 21 எல்ஜிபி நகர் மாநகராட்சி ஆரம்பப் பள்ளி | 0.45 |
| | | 3. வார்டு எண். 3 அஞ்சுகம் நகர் | 0.30 |
| | | 4. வார்டு எண் .4 கந்தசாமி நகர் மாநகராட்சி ஆரம்பப் பள்ளி | 0.30 |
| | | 5. வார்டு எண் .19 மணியகாரம்பாளையம் மாநகராட்சி துவக்கப்பள்ளி | 0.50 |
| | | 6. வார்டு எண். 12 உடையம்பாளையம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | 1.00 |
| 3 | மேற்கு | 1. வார்டு எண். 39–க்குட்பட்ட சுண்டப்பாளையம் மாநகராட்சி ஆரம்பப்பள்ளி | 0.75 |
| | | 2.வார்டு எண். 38– க்குட்பட்ட கல்வீரம்பாளையம் மாநகராட்சி ஆரம்பப்பள்ளி | 1.50 |
| | | 3. வார்டு எண். 72–க்குட்பட்ட ஆர்.எஸ்.புரம் மாதிரிப்பள்ளி | 3.00 |



| வ. எண் | மண்டலம் | பள்ளியின் இடம் | மதிப்பீட்டுத் தொகை ரூ.கோடியில் |
|---|---|---|---|
| 4 | தெற்கு | 1. வார்டு எண் 93 க்குட்பட்ட வெங்கட்ராமன் காலனி மாநகராட்சி பள்ளி | 0.80 |
| | | 2.வார்டு எண் 96 க்குட்பட்ட சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் 2 கூடுதல் கட்டிடங்கள் | 0.30 |
| | | 3.வார்டு எண் 100 க்குட்பட்ட மேட்டூர் அரசு மாநகராட்சியில் கூடுதல் பள்ளி கட்டிடம் | 0.97 |
| 5 | மத்தியம் | 1.வார்டு எண் .31 ரத்தினபுரி ஆரம்பப்பள்ளி | 1.00 |
| | | 2.வார்டு எண் .46 மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி நேரு வீதி | 0.50 |
| | | 3.வார்டு எண் .49 பாப்பநாயக்கன்பாளையம் நடுநிலைப்பள்ளி கூடுதல் வகுப்பறை மற்றும் கலையரங்கம் கட்டுதல் | 0.50 |
| | | 4.வார்டு எண் .63 இராமநாதபுரம் ஆரம்பப்பள்ளி வகுப்பறை மற்றும் கலையரங்கம் கட்டுதல் | 0.50 |
| | | 5.வார்டு எண் .63 இராமநாதபுரம் மேல்நிலை பள்ளி வகுப்பறை மற்றும் கலையரங்கம் கட்டுதல் | 0.50 |
| | | 6.வார்டு எண் .63 இராமகிருஷ்ணாபுரம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வகுப்பறை மற்றும் கலையரங்கம் கட்டுதல் | 0.50 |
| | | 7. வார்டு எண் .63 இராமகிருஷ்ணாபுரம் ஆரம்பப்பள்ளி வகுப்பறை மற்றும் கலையரங்கம் கட்டுதல் | 0.50 |
| | | 8. வார்டு எண் .67 ரங்கநாதபுரம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வகுப்பறை மற்றும் கலையரங்கம் கட்டுதல் | 0.75 |
| | | 9. வார்டு எண் .80 செல்வபுரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி வகுப்பறை மற்றும் கலையரங்கம் கட்டுதல் | 0.70 |

## 2.100 ஆண்டுகள் பழமையான பள்ளிகளை புனரமைத்தல்

மேலும், 100 ஆண்டுகள் பழமையான பள்ளிகளில் கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். பழுதடைந்த கட்டிடங்கள் சீரமைக்கப்பட்டு, பாதுகாப்பான வகுப்பறைகள் உருவாக்கப்படும். இதன் மூலம் மாணவர்கள் பாதுகாப்பான மற்றும் வசதியான சூழலில் கல்வி பயில ஏற்ற உட்கட்டமைப்பு உருவாக்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 3. அனைத்து பள்ளிகளுக்கும் கழிப்பறை வசதி மேம்படுத்துதல்

மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சுகாதாரமான சூழலில் பள்ளி வளாகத்தை பயன்படுத்தும் வகையில், கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் தொடர்ச்சியாக, இந்நிதியாண்டிலும் புதிய கழிப்பறைகள் கட்டுதல் மற்றும் தேவையான இடங்களில் பழைய கழிப்பறைகளின் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்படும். இது பள்ளி வளாகங்களில் சுகாதார நிலையை மேம்படுத்தும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4. மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாலை சிற்றுண்டி வழங்குதல்.

மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 10, 11 மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவர்கள் பொதுத்தேர்வை சிறப்பாக எதிர்கொள்ளும் வகையில், கடந்த ஆண்டுகளில் மாலை நேர சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இச்சிறப்பு வகுப்புகளின் போது மாணவர்களின் சோர்வை குறைத்து, கவனத்துடன் பயில உதவும் வகையில், கடந்த ஆண்டில் வழங்கப்பட்ட மாலை சிற்றுண்டித் திட்டத்தின் தொடர்ச்சியாக, இந்நிதியாண்டிலும் மாலை சிற்றுண்டி வழங்கப்படும். இதன் மூலம் மாணவர்களின் உடல் நலமும் கற்றல் திறனும் மேம்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 5. விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்

மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் உடல் ஆரோக்கியத்தையும் குழு உணர்வையும் வளர்க்கும் நோக்கில், கடந்த நிதியாண்டில் கிரிக்கெட், பால் பேட்மிண்டன், சதுரங்கம், கேரம் மற்றும் ஓட்டப்பந்தயம் போன்ற விளையாட்டுப் போட்டிகள் மண்டல வாரியாக நடத்தப்பட்டன. அதுபோலவே, இந்நிதியாண்டிலும் மண்டல வாரியாக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும். இப்போட்டிகள் மாணவர்களின் விளையாட்டு திறனை வெளிக்கொணரவும், ஆரோக்கியமான போட்டித் தன்மையை உருவாக்கவும் உதவும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.40.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 6. அங்கன்வாடி மையங்கள் புதுப்பித்தல்

மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கும் பள்ளிகளில் செயல்பட்டு வரும் 20 அங்கன்வாடி மையங்களில் குழந்தைகள் பாதுகாப்பாகவும் வசதியாகவும் பயில்வதற்கான சூழலை மேம்படுத்தும் நோக்கில், அவற்றை முழுமையாக புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். இம்மையங்களில் உள்ள கட்டிட அமைப்புகள், வகுப்பறை வசதிகள், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள், மின்சார வசதி உள்ளிட்ட அடிப்படை உட்கட்டமைப்புகள் சீரமைக்கப்பட்டு மேம்படுத்தப்படும். இதன் மூலம் சிறார்களின் உடல் நலமும் கற்றல் ஆர்வமும் அதிகரிக்கும். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக இந்நிதியாண்டில் ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 7. மாநகராட்சி பள்ளி எல்கேஜி-யுகேஜி வகுப்புகள் செயல்பாடு, ஆசிரியர்கள் மற்றும் உதவியாளர்கள் நியமித்தல்

மாநகராட்சி ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் நடப்பு நிதியாண்டில் துவங்கப்பட்ட எல்கேஜி மற்றும் யுகேஜி வகுப்புகள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. இவ்வகுப்புகளில் பணிபுரியும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு ஊதியம் வழங்கவும், தேவையான கற்பித்தல் பாடக்குறிப்பேடுகள் மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கவும், தேவைப்படும் பள்ளிகளில் வகுப்பறை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், இந்நிதியாண்டில் ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 8. கூரையுடன் கூடிய உள் விளையாட்டு அரங்கம் அமைத்தல்

மாநகராட்சி பள்ளிகளில், வெளிப்புற விளையாட்டு வசதி இல்லாத பள்ளிகளில், வகுப்பறைகளின் மேற்பகுதியில் கூரையுடன் கூடிய உள் விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்படும். இதன் மூலம் மழை அல்லது வெயிலின் பாதிப்பில்லாமல் மாணவர்கள் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டில் ஈடுபட முடியும். பல்வேறு உள் விளையாட்டு நடவடிக்கைகள் நடைபெறுவதன் மூலம் மாணவர்களின் உடல் ஆரோக்கியம், குழுவாக செயல்படும் திறன் மற்றும் மனச்சார்பு வளர்ச்சி மேம்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.20.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 9. கோயம்புத்தூர் மாநகராட்சிப் பள்ளிகளில் குப்பைத் தொட்டிகள் வழங்கல்

மாநகராட்சி அனைத்து பள்ளிகளுக்கும் பள்ளி வளாகங்களில் குப்பைத் தொட்டிகள் வழங்கப்படும். இதன் மூலம் சுற்றுப்புற சுத்தம் பராமரிக்கப்படும் மற்றும் மாணவர்களுக்கு சுகாதாரமான, பாதுகாப்பான கல்வி சூழல் ஏற்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 10. மாநகராட்சி பள்ளிகளில் அரங்கம் (Auditorium) அமைத்தல்

போதுமான இட வசதியுள்ள மாநகராட்சி பள்ளிகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளி நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக அரங்கம் (Auditorium) அமைக்கப்படும். இதன் மூலம் கல்வி, கலாச்சாரம் மற்றும் விளையாட்டு சார்ந்த நிகழ்வுகள் ஒரே இடத்தில் நடத்தி மாணவர்களின் திறன்கள் வெளிப்படுவதை ஊக்கப்படுத்தலாம். அரங்கத்தில் ஒளி, ஒலி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படும். இதன் மூலம் பள்ளியின் கல்வி மற்றும் சமூக நிகழ்ச்சிகள் துல்லியமாகவும், அமைதியாகவும் நடைபெறும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



11. மாநகராட்சி பள்ளிகளில் 8-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை உள்ள பள்ளி மாணவர்களுக்கு வழிகாட்டுதல் (Mentoring) வழங்குதல்.

மாநகராட்சி பள்ளிகளில் 8-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை உள்ள பொருளாதார ரீதியாக பின்தங்கிய பின்னணியிலுள்ள மாணவர்களுக்கு, கடந்த நிதியாண்டில் 11 மற்றும் 12-ம் வகுப்பு மாணவர்களுக்கு 17 பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்ட அனுபவ வழிகாட்டல் (Mentoring) திட்டம், இந்நிதியாண்டிலும் தொடரப்படும். இந்த நிகழ்ச்சி மாணவர்களின் கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை எடுத்துரைத்து, அவர்களுக்கு வாழ்க்கையில் வலுவான நோக்கம், தெளிவு மற்றும் திசை உருவாக்க உதவும். மாணவர்கள் தங்கள் திறன்களை உணர்ந்து, அர்த்தமுள்ள பாதையில் முன்னோக்கி நகர வழிகாட்டல் பெறுவர். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.6.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 12. சூரிய மின்சக்தி அமைப்பு (Solar Panel) நிறுவுதல்

மாநகராட்சி பள்ளிகளில் மின்சார செலவினத்தை குறைக்கும் நோக்கில் சூரிய மின்சக்தி அமைப்புகள் நிறுவப்படும். இதன் மூலம் பள்ளிகளுக்கு தொடர்ச்சியான மின்சாரம் கிடைப்பதுடன், சுற்றுச்சூழலுக்கும் பாதுகாப்பாக இருக்கும். மாணவர்களுக்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் குறித்து விழிப்புணர்வு ஏற்படும். மின்சாரம் தடைபடும் நேரங்களிலும் வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் அலுவலகப் பணிகள் பாதிக்கப்படாமல் நடைபெற உதவும். இந்தத் திட்டம் மூலம் பள்ளிகளின் செயல்பாடுகள் தடையின்றி நடைபெறுவதுடன், எதிர்கால தலைமுறைக்கு பசுமை ஆற்றல் குறித்த அறிவும் வளர்க்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 13. பசுமை பள்ளிகள் (Green Schools) அமைத்தல்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை வளங்களை பாதுகாக்கும் நோக்கில் 5 மாநகராட்சி பள்ளிகள் பசுமை பள்ளிகளாக மாற்றப்படும். இப்பள்ளிகளில் மரக்கன்றுகள் நடுதல், மழைநீர் சேமிப்பு, கழிவுநீர் மறுசுழற்சி, பிளாஸ்டிக் பயன்பாடு குறைத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, அவர்களிடையே இயற்கையை பாதுகாக்கும் மனப்பாங்கு வளர்க்கப்படும். பள்ளி வளாகம் பசுமையாகவும் தூய்மையாகவும் பராமரிக்கப்படும். இந்தத் திட்டம் மூலம் மாணவர்களின் சமூக பொறுப்புணர்வு அதிகரிக்கும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 14. மொழி ஆய்வகம் (Language Lab) அமைத்தல்

மாநகராட்சி 10 பள்ளிகளில் மாணவர்களின் மொழித் திறனை மேம்படுத்த மொழி ஆய்வகங்கள் அமைக்கப்படும். இவ்வாய்வகங்களில் ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளில் பேசும் திறனை வளர்க்கும் வகையில் ஒலி–ஒளி சாதனங்கள் பயன்படுத்தப்படும். மாணவர்கள் சரியான உச்சரிப்பு, இலக்கணம் மற்றும் சொல் பயன்பாடு குறித்து பயிற்சி பெறுவார்கள். போட்டித் தேர்வுகள் மற்றும் மேற்கல்வி வாய்ப்புகளில் மாணவர்கள் சிறப்பாக செயல்பட இது உதவும். கல்வித் தரத்தை உயர்த்துவதில் இந்தத் திட்டம் முக்கிய பங்கு வகிக்கும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 15. பொது உணவருந்தும் பகுதி (Common Dinning Area) அமைத்தல்

மாநகராட்சி பள்ளிகளில் மாணவர்கள் சுகாதாரமான முறையில் உணவு அருந்துவதற்காக பொது உணவருந்தும் பகுதிகள் அமைக்கப்படும். இதன் மூலம் மாணவர்கள் தரையில் அமராமல், சீரான இடத்தில் உணவருந்தும் வசதி ஏற்படும். சுத்தம் மற்றும் ஒழுங்கு கடைப்பிடிக்கப்படும். உணவு நேரத்தில் குழப்பம் குறைந்து, ஒழுங்கான பழக்கம் மாணவர்களுக்கு உருவாகும். பள்ளி வளாகத்தில் சுகாதார நிலை மேம்படும். மாணவர்களின் உடல் நலத்தையும் ஒழுக்கத்தையும் மேம்படுத்தும் வகையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 16. தேசிய / சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு காலணிகள் வழங்குதல்

தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு காலணிகள் வழங்கப்படும். இதன் மூலம் மாணவர்கள் பாதுகாப்பாகவும் வசதியாகவும் போட்டிகளில் பங்கேற்க முடியும். விளையாட்டு திறனை மேம்படுத்தும் வகையில் தேவையான அடிப்படை வசதிகள் வழங்கப்படுகின்றன.

மாணவர்களுக்கு விளையாட்டில் ஆர்வம் அதிகரிக்கும். மாநகராட்சி பள்ளிகளின் விளையாட்டு சாதனைகள் வெளிப்படும். மாணவர்களின் தன்னம்பிக்கை உயர்ந்து, போட்டிகளில் சிறப்பாக செயல்பட இந்தத் திட்டம் உதவும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 17. மாணவர்களை கல்விச் சுற்றுலா (Educational Trips) அழைத்துச் செல்லுதல்

மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை உள்ள 500 மாணவர்களை பொருநை அருங்காட்சியகம் – திருநெல்வேலி, கீழடி அருங்காட்சியகம் – சிவகங்கை, கொடுமணல் தொல்லியல் மையம் – ஈரோடு, தமிழ்நாடு அரசு அருங்காட்சியகம் – மதுரை மற்றும் திருச்சி தொல்லியல் அருங்காட்சியகம் போன்ற தொல்லியல் மற்றும் கல்வி முக்கியத்துவம் வாய்ந்த 5 இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படும். இதன் மூலம் மாணவர்கள் புத்தக அறிவுடன் கூடுதலாக நேரடி அனுபவ அறிவு பெறுவார்கள். வரலாறு, பண்பாடு மற்றும் அறிவியல் தொடர்பான அறிவு வளர்ச்சி பெறும். மாணவர்களின் ஆர்வமும் கவனமும் அதிகரிக்கும். கல்வி சுற்றுலா மூலம் கற்றல் செயல்முறை எளிமையாகவும் பயனுள்ளதாகவும் அமையும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 18. LKG மற்றும் UKG மாணவர்களுக்கு விளையாட்டு பகுதி (Play Area) அமைத்தல்

மாநகராட்சி பள்ளிகளில் LKG மற்றும் UKG வகுப்புகளில் பயிலும் சிறார்களுக்கு தனியான விளையாட்டு பகுதிகள் அமைக்கப்படும். இப்பகுதிகளில் குழந்தைகளுக்கு ஏற்ற பாதுகாப்பான விளையாட்டு உபகரணங்கள் நிறுவப்படும். இதன் மூலம் சிறார்களின் உடல் வளர்ச்சி மற்றும் மன வளர்ச்சி மேம்படும். விளையாட்டு வழியாக கற்றல் திறன் அதிகரிக்கும். குழந்தைகள் மகிழ்ச்சியுடன் பள்ளிக்கு வர ஆர்வம் கொள்வார்கள். ஆரம்பக் கல்வி நிலை வலுவடைய இந்தத் திட்டம் உதவும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 19. 10 மற்றும் 12-ம் வகுப்பு தேர்வு முடிவுகள் பகுப்பாய்வு (Result Analysis) மேற்கொள்ளுதல்

மாநகராட்சி பள்ளிகளில் 10 மற்றும் 12-ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாணவர்களின் தேர்ச்சி நிலை, பாடப்பிரிவு வாரியாகவும், பள்ளி வாரியாகவும் மற்றும் ஆசிரியர் செயல்திறன் அடிப்படையிலும் (Staff Performance) விரிவாக பகுப்பாய்வு செய்யப்படும். இவ்வாய்வு மூலம் கல்வித் தரத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 20. மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் திறன் தேர்வு பயிற்சி வகுப்புகள் நடத்துதல்

மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்கள் தமிழ்நாடு அரசின் கல்வி உதவித் தொகைத் திட்டங்கள் (TN Scholarship Program) மற்றும் தமிழ்நாடு முதலமைச்சரின் திறன் தேடல் தேர்வு (Tamil Nadu Chief Minister's Talent Search Examination) ஆகியவற்றில் சிறப்பாக தேர்ச்சி பெறும் வகையில் சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். இப்பயிற்சிகள் மூலம் மாணவர்களின் போட்டித் தேர்வு திறனும், தன்னம்பிக்கையும் மேம்படுத்தப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 21. மண்டல, மாநில, தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு மாநகராட்சி சின்னம் (Corporation Logo) பதிக்கப்பட்ட விளையாட்டு டி-ஷர்ட் வழங்குதல்

மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்கள் மண்டல, மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் போது, மாநகராட்சி சின்னம் (Corporation Logo) பதிக்கப்பட்ட ஒரே மாதிரியான விளையாட்டு டி-ஷர்ட்கள்

வழங்கப்படும். இது மாணவர்களில் ஒருமைப்பாடு, தன்னம்பிக்கை மற்றும் மாநகராட்சி பள்ளிகளின் அடையாளத்தை வெளிப்படுத்த உதவும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 22. விளையாட்டு மைதானங்கள் உட்பட விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்.

மாநகராட்சி பள்ளிகளில் 100க்கும் கூடுதலாக மாணவர் எண்ணிக்கை உள்ள பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு, விளையாட்டு மைதானங்கள் உட்பட அனைத்து விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இதில் நீளம் தாண்டும் குதிப்பு குழி (Long Jump Pit) அமைத்தல், மைதான சமப்படுத்தல், ஓட்டப்பாதை மற்றும் விளையாட்டு தொடர்பான அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

மேலும் மாநகராட்சி அனைத்து பள்ளிகளிலும் மாணவ, மாணவியரிடையே விளையாட்டில் ஆர்வத்தையும், திறனையும் ஊக்குவிக்கும் வகையில் அனைத்து பள்ளிகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் மொத்தம் ரூ.20.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 23. Smart class அமைத்து தருதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உலகத் தரத்துக்கு இணையான கல்வி வாய்ப்புகளை வழங்கும் நோக்கில், நவீன தகவல் தொழில்நுட்ப வசதிகளை அடிப்படையாகக் கொண்டு கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்காக, ஒவ்வொரு மண்டலத்திலும் தலா ஒரு பள்ளி தேர்வு செய்யப்பட்டு, மொத்தம் 5 மண்டலங்களில் Smart Class வசதிகள் அமைக்கப்படும். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக, இந்நிதியாண்டில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் ரூ.1.00 கோடி வீதம், மொத்தமாக ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 24. மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் ஆய்வகங்கள் மேம்பாடு செய்தல்.

மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் செயல்படும் 17 மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 10 உயர் நிலைப் பள்ளிகளில் பயிலும் 10, 11 மற்றும் 12-ம் வகுப்பு மாணவர்களின் அறிவியல் செய்முறைத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில், அப்பள்ளிகளில் உள்ள அறிவியல் ஆய்வக வசதிகள் மேம்படுத்தப்படுவதுடன், கற்றல்-கற்பித்தல் செயல்முறைக்கு தேவையான நவீன அறிவியல் உபகரணங்களும் வழங்கப்படும். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக, இந்நிதியாண்டில் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 25. மாநகராட்சிப் பள்ளிகளில் Public Address System அமைத்து தருதல்.

மாநகராட்சி கட்டுப்பாட்டில் செயல்படும் பள்ளிகளில் அடிப்படை மற்றும் கல்வி சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகின்றன. பள்ளி நலன் தொடர்பான அறிவிப்புகள் மற்றும் நிர்வாக தகவல்கள் ஒரே நேரத்தில் அனைத்து மாணவர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் அவரவர் வகுப்பறைகளிலேயே எளிதாக கிடைக்கும் வகையில், தலைமை ஆசிரியர் அறையிலிருந்து அறிவிக்கக்கூடிய Public Address System வசதி பள்ளிகளில் அமைக்கப்படும். கடந்த 2025-26 நிதியாண்டில் இவ்வசதி 4 பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்நிதியாண்டில் மீதமுள்ள மற்றும் கூடுதல் பள்ளிகளில் இத்திட்டம் விரிவாக்கமாக நடைமுறைப்படுத்தப்படுவதற்காக ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 26. மாநகராட்சி பள்ளி 10 மற்றும் 12-ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் 100 % தேர்ச்சி வழங்கும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் விதமாக கல்விச் சுற்றுலா அழைத்து செல்லுதல்

மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், 10 மற்றும் 12-ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் தாம் கற்பிக்கும் பாடங்களில் முழுமையான தேர்ச்சி விகிதம் பெற்ற மாணவர்களை உருவாக்கிய ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில், விடுமுறை நாட்களை பயன்படுத்தி நாட்டின் முன்னணி கல்வி நிறுவனங்களான ஐ.ஐ.டி. சென்னை, ஐ.ஐ.எம். பெங்களூர் மற்றும் டெல்லி பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்கு கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்படும். இதற்காக இந்நிதியாண்டில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 27. கல்விசார் மற்றும் கல்வி சாரா செயல்பாடுகள் விரிவுபடுத்துதல்

மாநகராட்சி 64 மேல்நிலை, உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 2025-26 கல்வியாண்டில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்காக கல்விசார் மற்றும் கல்விசாரா



செயல்பாடுகளுக்கான பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டு திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது. நடப்பு நிதியாண்டின் தொடர்நடவடிக்கையாக, இந்நிதியாண்டில் இத்திட்டம் 83 ஆரம்பப் பள்ளிகளிலும் மற்றும் 64 மேல்நிலை, உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும் தொடர்ந்து மற்றும் விரிவுபடுத்தி செயல்படுத்தப்படும். இதற்காக யோகா மேட், சிலம்பம் குச்சி போன்ற தேவையான உபகரணங்கள் வழங்கப்படும். கூடுதலாக நீச்சல், ஸ்கேட்டிங், ஜிம்னாஸ்டிக், டேக்வாண்டோ மற்றும் ஜூடோ போன்ற பயிற்சிகளும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.2.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 28. பள்ளி மாணவர்களுக்கான தொழிற்சாலைகள் பார்வைத் திட்டம் (Industrial Visit) – தொடர் நடவடிக்கை

மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு கல்வியுடன் இணைந்து தொழில்துறை சார்ந்த நடைமுறை அறிவை பெறும் வாய்ப்பு வழங்கும் வகையில், நடப்பு நிதியாண்டில் "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகள் பார்வைத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் பயனாக மாணவர்கள் உற்பத்தி முறைகள், தொழில்நுட்ப செயல்பாடுகள் மற்றும் தொழில் வாய்ப்புகள் குறித்து நேரடி அனுபவம் பெற்றனர். நடப்பு ஆண்டின் தொடர்நடவடிக்கையாக, இந்நிதியாண்டிலும் மாணவர்களை தொழிற்சாலைகளுக்கு அழைத்துச் சென்று பயிற்சி மற்றும் பார்வை நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்படும். இதற்கென ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 29. மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனை வழங்குதல் – தொடர் நடவடிக்கை

வளர் இளம் பருவத்தில் மாணவர்கள் சந்திக்கும் மனஅழுத்தம், பயம், கவனக்குறைவு போன்ற சிக்கல்களுக்கு தீர்வு காணும் நோக்கில் கடந்த நிதியாண்டில் பயிற்சி பெற்ற உளவியல் ஆலோசகர்கள் மூலம் ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் மாணவர்களின் கற்றல் ஆர்வமும் மனநிலையும் மேம்பட்டுள்ளது. கடந்த ஆண்டின் தொடர்ச்சியாக, இந்நிதியாண்டிலும் தேவையுள்ள பள்ளி மாணவ, மாணவியருக்கு உளவியல் ஆலோசனை வழங்கப்படும். இது அவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் ஆதரவாக அமையும். இதற்கென ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 30. சதுரங்க பயிற்சி வழங்குதல்

மாநகராட்சி பள்ளி மாணவர்களில் சதுரங்க விளையாட்டில் ஆர்வம் மற்றும் திறனுடைய மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு, சதுரங்க பயிற்சி வழங்கி அவர்களின் கணக்குப் பிரிவுகள், யோசனை திறன் மற்றும் தீர்மானம் எடுத்தல் போன்ற திறன்களை மேம்படுத்தும் வகையில் பயிற்சிகள் நடக்கின்றன. இந்த நடவடிக்கையின் மூலம் மாணவர்கள் போட்டித் திறன், நினைவாற்றல் மற்றும் கருத்து திறன் ஆகியவற்றில் முன்னேற்றம் அடையும். அதேசமயம் குழுவாக செயல்படும் திறனும் வளர்ச்சி அடையும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, மேலும் தேவையான சதுரங்க பொருட்கள் மற்றும் பயிற்சியாளர் வசதிகளும் வழங்கப்படும்.



## 31. 12-ம் வகுப்பு முடித்து ஐ.ஐ.டி., என்.ஐ.டி., மற்றும் மருத்துவக் கல்வி பெறும் மாணவர்களுக்கு கட்டண உதவி மற்றும் நுழைவுத் தேர்வு பயிற்சி – தொடர்நடவடிக்கை

மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பன்னிரெண்டாம் வகுப்பு முடித்து உயர்கல்வி நிறுவனங்களான ஐ.ஐ.டி., என்.ஐ.டி., மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் சேரும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், கடந்த நிதியாண்டில் அவர்களின் முதல் ஆண்டு கல்விக் கட்டணத்திற்கு நிதியுதவி வழங்கப்பட்டது. மேலும், நீட் உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளுக்கான பயிற்சியும் வழங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் தொடர்ச்சியாக, இந்நிதியாண்டிலும் தகுதி பெறும் மாணவர்களுக்கு தலா ரூ.25,000-க்கு மிகாமல் கல்விக் கட்டணம் செலுத்தப்படும். கூடுதலாக நுழைவுத் தேர்வு பயிற்சிகளும் வழங்கப்படும். இதற்கென ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**32. மாநகராட்சி பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பாடங்களில் 100 விழுக்காடு மதிப்பெண்கள் பெரும் மாணவ மாணவியருக்கு ஊக்கத்தொகை மற்றும் 100 விழுக்காடு மதிப்பெண்கள் பெறச் செய்யும் வகுப்பாசிரியர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்.**

மாநகராட்சி பள்ளிகளில் பயின்று வரும் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு மாணவ, மாணவியர்கள் பள்ளி இறுதி அரசு பொதுத்தேர்வில் சிறந்த கல்வித் திறன் வெளிப்படுத்தி, குறைந்தபட்சம் ஒரு பாடத்தில் முழு மதிப்பெண்கள் பெறும் வகையில் ஊக்குவிக்கும் நோக்கில் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் தகுதி பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் ரூ.10,000 வீதம் வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் மாணவர்களின் கல்வி ஆர்வமும் சாதனை உணர்வும் அதிகரிக்கும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், மாநகராட்சி பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் மாணவர்களை சிறந்த முறையில் தேர்ச்சி பெறச்செய்த வகுப்பு ஆசிரியர்களின் பங்களிப்பை மதிப்பிடும் வகையில் அவர்களுக்கும் ஊக்கத்தொகை வழங்கப்படும். தேர்ச்சி விகிதத்தை உயர்த்தி மாணவர்களை சிறந்த முடிவுகள் பெறச் செய்த ஆசிரியருக்கு தலா ரூ.10,000 வீதம் வழங்கப்படும். இது ஆசிரியர்களின் அர்ப்பணிப்பை ஊக்குவித்து கல்வித் தரத்தை மேலும் மேம்படுத்த உதவும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.40.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 33. கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி (Career Guidance) நடத்துதல்

மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் 12–ம் வகுப்பிற்குப் பிறகு தங்களுக்கேற்ற மேல்கல்வி மற்றும் தொழில் பாதையைத் தேர்வு செய்ய உதவும் வகையில், அவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இணைந்து கல்வி வழிகாட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படும். இந்நிகழ்ச்சிகளில் அனுபவம் வாய்ந்த கல்வியியல் நிபுணர்கள் மற்றும் துறைசார் வல்லுநர்கள் கலந்து கொண்டு, பாடப்பிரிவுகள், தொழில்நுட்பக் கல்வி, மருத்துவம் மற்றும் பிற உயர்கல்வி வாய்ப்புகள் குறித்து விளக்கமளிப்பார்கள். இதன் மூலம் மாணவர்களும் பெற்றோர்களும் தெளிவான முடிவெடுக்க முடியும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.15.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 34. அறிவியல் கண்காட்சி நடத்துதல்.

மாநகராட்சி பள்ளி மாணவர்களின் அறிவியல் சிந்தனை திறனை மேம்படுத்தவும், அவர்களது படைப்பாற்றலை வெளிப்படுத்தவும், பள்ளி மாணவர்களின் அறிவியல் திட்டங்கள் மற்றும் புதுமையான முயற்சிகளை பொதுமக்கள் முன்னிலையில்



காட்சிப்படுத்தும் வகையில் அறிவியல் கண்காட்சி நடத்தப்படும். இந்நிகழ்ச்சியின் மூலம் மாணவர்கள் அறிவியல் சார்ந்த ஆய்வுகள் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கு ஆர்வம் பெறுவார்கள். இது அவர்களது நடைமுறை அறிவையும் ஆராய்ச்சி மனப்பாங்கையும் வளர்க்கும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 35. இருக்கையுடன் கூடிய மேசைகள் (Desk, Bench) வழங்குதல்

மாநகராட்சி கட்டுப்பாட்டில் செயல்படும் ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் எல்கேஜி, யுகேஜி வகுப்புகள் முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு, கடந்த ஆண்டுகளில் வழங்கப்பட்ட வசதிகளின் தொடர்நடவடிக்கையாக, இந்நிதியாண்டிலும் தேவையான அளவில் இருக்கையுடன் கூடிய மேசைகள் (Desk, Bench) வழங்கப்படும். இதன் மூலம் மாணவர்கள் சீரான அமர்வு வசதியுடன் பாதுகாப்பான மற்றும் கற்றலுக்கு ஏற்ற சூழலில் கல்வி பயில முடியும். இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்துவதற்காக இந்நிதியாண்டில் ரூ.3.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 36. அனைத்து பள்ளிகளுக்கும் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்குதல் – தொடர் நடவடிக்கை

கடந்த ஆண்டு 35 பள்ளிகளுக்கு குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக மாநகராட்சி கட்டுப்பாட்டில் செயல்படும் ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வசதி வழங்கும் நோக்கில், இந்நிதியாண்டிலும் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் கொள்முதல் செய்து வழங்கப்படும். இதன் மூலம் மாணவர்களின் உடல்நலம் பாதுகாக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் உயர் தர RO குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள் 20 பள்ளிகளில் நிறுவப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



## 37. கற்றல் கற்பித்தல் பயிற்சி கையேடு, வரை கட்டத்தாள் மற்றும் வரைபடம் வழங்குதல் – தொடர் நடவடிக்கை.

மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் நோக்கில், கடந்த ஆண்டுகளில் வழங்கப்பட்ட கற்றல் கற்பித்தல் பயிற்சி கையேடு (Minimum Learning Material), வரை கட்டத்தாள் மற்றும் வரைபடம் (Graph & Map) ஆகியவற்றின் தொடர்ச்சியாக, இந்நிதியாண்டிலும் இவ்வகை கல்வி உதவி பொருட்கள் வழங்கப்படும். இதன் மூலம் பாடப்பிரிவுகளை எளிதில் புரிந்து கொள்ளும் வாய்ப்பு மாணவர்களுக்கு கிடைக்கும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 38. அனைத்து பள்ளி மாணவர்களுக்கு Interactive Learning மற்றும் Sustainability திட்டம் வழங்குதல் – தொடர் நடவடிக்கை

மாநகராட்சி அனைத்து பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ஆற்றல்மிக்க, ஈடுபாட்டுடன் கூடிய கற்றல் அனுபவத்தை வழங்கும் நோக்கில், கடந்த நிதியாண்டில் செயல்படுத்தப்பட்ட Interactive Learning மற்றும் Sustainability திட்டம், இந்நிதியாண்டிலும் தொடர்ந்து வழங்கப்படும். இந்த நடவடிக்கையின் மூலம் மாணவர்கள் பாடங்களுடன் நேரடி தொடர்பு கொண்டு சிந்தனை திறனை மேம்படுத்தி, சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வையும் பெறுவர். மாணவர்களின் ஆர்வம், கற்றல் திறன் மற்றும் பசுமை சார்ந்த விழிப்புணர்வை வளர்க்கும் வகையில் இந்த திட்டம் தொடரும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 39. அனைத்து பள்ளிகளுக்கும் லேப்டாப் / கம்ப்யூட்டர், யூபிஎஸ் மற்றும் இன்வெர்ட்டர் பேட்டரி வழங்கல்

மாநகராட்சி அனைத்து பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களுக்கு கணினி பயிற்சி மற்றும் டிஜிட்டல் கல்வி வசதிகள் வழங்க, லேப்டாப் / கம்ப்யூட்டர், யூபிஎஸ் மற்றும் இன்வெர்ட்டர் பேட்டரி வழங்கப்படும். இதன் மூலம் மாணவர்கள் கணினி திறனை மேம்படுத்தி, பாடங்களை தொழில்நுட்பம் மூலம் பயிற்சி செய்ய முடியும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 40. பள்ளிக்கு வருகை குறைவான மாணவர்களுக்கு பெற்றோர்களுடன் ஆலோசனை வழங்குதல்.

பள்ளிக்கு தொடர்ந்து வருகை குறைவாக காட்டும் மாணவர்களுக்கு, அவர்களது பெற்றோர்களுடன் இணைந்து கல்வியின் முக்கியத்துவம் மற்றும் பயன்களை உணர்த்தும் வகையில் ஆலோசனைகள் வழங்கப்படும். இதற்காக தன்னார்வலர்கள் மற்றும் தனியார் அமைப்பினர்கள் ஒத்துழைத்து, மாணவர்கள் பள்ளிக்கு முறையாக வருவதை உறுதிசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



41. மாநகராட்சி பள்ளிகளில் 95 விழுக்காடுக்கு மேல் தேர்ச்சி பெறும் பள்ளிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்.

மாநகராட்சி பள்ளிகளில் 10 மற்றும் 12–ம் வகுப்பு பொதுத்தேர்வில் 95 விழுக்காடிற்கு மேல் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும். இதன் மூலம் மாணவர்களின் கல்வி முயற்சிகளை ஊக்குவித்து, சாதனை விளைவிக்க உதவப்படுகிறது. இதற்கென இந்நிதியாண்டில் ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

42. மாணவர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்த நாளிதழ்கள் வழங்குதல்.

மாநகராட்சி பள்ளி மாணவர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்தவும், பொது அறிவை வளர்க்கவும், கடந்த நிதியாண்டில் வழங்கப்பட்டதை போலவே, இந்நிதியாண்டிலும் மாநகராட்சி பள்ளிகளில் தினமலர், தினகரன், தினமணி மற்றும் இந்து போன்ற நாளிதழ்கள் வழங்கப்படும். இதன் மூலம் மாணவர்கள் தினசரி நிகழ்வுகள், சமூக விவரங்கள் மற்றும் அறிவியல், கல்வி சார்ந்த தகவல்களை தெரிந்து கொண்டு வாசிப்பு திறனை மேம்படுத்தி, அறிவுசார் ஆர்வத்தை வளர்க்கலாம். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 43. மிதி வண்டிகள் நிறுத்த மேற்கூறையுடன் கூடிய இடம் அமைத்து தருதல்.

மாநகராட்சி 10 மேல்நிலை மற்றும் உயர்நிலை பள்ளிகளில் மாணவர்கள் மிதி வண்டிகளை பயன்படுத்தும் போது பாதுகாப்பாக நிறுத்தவும், அமைதியான மற்றும் ஒழுங்கான சூழலை உருவாக்கவும், குறிப்பிட்ட இடங்களில் மிதி வண்டி நிறுத்தங்கள் அமைக்கப்படும். இந்த நடவடிக்கையின் மூலம் மாணவர்கள் பள்ளிக்கு செல்லும் போது வசதியாக வண்டிகளை நிறுத்தி பாதுகாப்புடன் பயணிக்க முடியும். பள்ளி வளாகத்தில் மாணவர்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகரிக்கும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 44. தட்டச்சு பயிற்சி அளித்தல்

மாநகராட்சி 10 மேல்நிலை மற்றும் உயர்நிலை பள்ளிகளில் மாணவர்களின் தட்டச்சு திறனை மேம்படுத்தும் நோக்கில், தட்டச்சு இயந்திரங்கள் வழங்கப்படும். இதற்காக தகுதியான தனியார் பயிற்றுநர்கள் நியமிக்கப்பட்டு மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும். தட்டச்சு திறன் அதிகரிப்பதால், மாணவர்கள் கணினி பயன்பாட்டில் திறமை பெறுவார்கள், கல்விசார் மற்றும் தொழில்நுட்ப திறன்களிலும் முன்னேற்றம் காண்பார்கள். இத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் வேலைவாய்ப்பு மற்றும் உயர் கல்வி வாய்ப்புகளுக்கு தயாராகிறார்கள். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.18.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 45. வினாடி வினா போட்டிகள் நடத்துதல்

மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு பாட அறிவு, பொது அறிவு மற்றும் நினைவாற்றலை மேம்படுத்தும் வகையில், அனைத்து பள்ளிகளுக்கிடையேயான வினாடி வினா போட்டிகள் நடத்தப்படும். இந்த போட்டிகள் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தி, போட்டித்திறனை வளர்க்கும், குழுவாக செயல்படவும் உதவும். மாணவர்கள் விரிவான அறிவை கற்று, தீர்மானிக்கும் திறனையும் மேம்படுத்திக் கொள்வார்கள். இதன் மூலம் மாணவர்களின் பாட அறிவு மட்டுமின்றி பொது அறிவும் வளர்ச்சி அடையும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 46. கிரிக்கெட் பயிற்சி அளித்தல்

மாநகராட்சி 5 மேல்நிலைப் பள்ளிகளில் கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வம் மற்றும் திறனை உடைய மாணவர்கள் தேர்வு செய்யப்படுவர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு கிரிக்கெட் பயிற்சிகள் வழங்கப்படும். தேவையான கிரிக்கெட் உபகரணங்கள், கேப்கள் மற்றும் பந்துகள் ஆகியவையும் வழங்கப்படுவதால் பயிற்சிகள் முழுமையாக நடைபெறும். இந்த நடவடிக்கை மூலம் மாணவர்களின் விளையாட்டு திறன் மேம்படும், ஆரோக்கியம் அதிகரிக்கும் மற்றும் குழுவாக செயல்படும் திறன் வளர்ச்சி அடையும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.60.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 47. எரியூட்டும் இயந்திரம் (Incinerator) வழங்குதல்

மாநகராட்சி 64 மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் நலனையும் சுகாதாரத்தையும் பாதுகாக்கும் நோக்கில், மாணவியரின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு 71 எரியூட்டும் இயந்திரங்கள் (Incinerator) வழங்கப்படும். இதன் மூலம் பள்ளி வளாகங்களில் கழிவுகள் முறையாக செயலாக்கப்படுவதால் சுகாதார சூழல் மேம்படும். மேலும், ஆண்டுதோறும் பராமரிப்பு கட்டணமும் இணைந்து மேற்கொள்ளப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 48. பள்ளி மேலாண்மைக்குழு மூலம் ஆசிரியர்கள் நியமித்தல்.

மாநகராட்சி பள்ளிகளில் காலியான ஆசிரியர் பணியிடங்கள் மாணவர் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு நிரந்தர ஆசிரியர்கள் நியமிக்கப்படும்வரை, கடந்த நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் தொடர்ச்சியாக, சம்பந்தப்பட்ட பள்ளி மேலாண்மைக் குழு தேர்வு செய்து வெளிமுகமை (Outsourcing) மூலம் தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நியமிக்கும் நடவடிக்கை தொடரும். நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மதிப்பூதியம் வழங்கப்படும், இதன் மூலம் மாணவர்களுக்கு தொடர்ச்சியான கல்வி மற்றும் மாணவர் நலனுக்கு ஏற்ற கல்வி சூழல் உறுதி செய்யப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 49. மாநகராட்சி பள்ளிகளில் CCTV கேமரா அமைத்தல்

மாநகராட்சி பள்ளிகளில் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கில், 500 மாணவர்களுக்கு மேற்பட்டோர் பயிலும் 20 மாநகராட்சி பள்ளிகளில் CCTV கேமராக்கள் பொருத்தப்பட உள்ளன. இந்த நடவடிக்கை பள்ளி வளாகத்தில் பாதுகாப்பான சூழலை உருவாக்கி, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாதுகாப்புடன் கல்வி மற்றும் செயல்பாடுகளை தொடர வழிவகுக்கும். நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தி, இதன் மூலம் குற்றச்செயல்களை தடுக்கும் முயற்சியும், பள்ளி சூழலில் கண்காணிப்பு வசதியும் ஏற்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.15.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும் பராமரிப்பு மற்றும் செயல்திறன் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் இணைந்து மேற்கொள்ளப்படும்.

### 50. மாணவர் படைப்புகள் புத்தகமாக வெளியிடுதல்.

மாநகராட்சி பள்ளி மாணவர்களின் கட்டுரைகள், ஓவியங்கள் மற்றும் இதர படைப்புகளை வெளிப்படுத்த, ஆண்டுதோறும் புத்தகம் வெளியிடப்படும். இதன் மூலம் மாணவர்கள் படைப்பாற்றலை வெளிப்படுத்தி கலை மற்றும் எழுத்துத் திறனில் மேம்பாடு அடைவர். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 51. மாணவர்களின் பற்கள் சீரமைப்பு சிகிச்சை திட்டம் (மலரும் புன்னகைத் திட்டம்)

மாநகராட்சி பள்ளி மாணவர்களின் வாய்சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், பற்கள் சரியாக ஒழுங்குபடுத்தப்படாமல் (Misaligned Teeth) உள்ள மாணவர்கள் சிறப்பு மருத்துவ பரிசோதனை மூலம் கண்டறியப்படுவர். இவ்வாறு அடையாளம் காணப்படும் மாணவர்களுக்கு தேவையான பற்கள் சீரமைப்பு (Orthodontic) சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் மாணவர்களின் பல் ஆரோக்கியம் மேம்பட்டு, பேசும் திறன், உணவு உட்கொள்ளும் வசதி மற்றும் தன்னம்பிக்கை ஆகியவை உயர்வடையும். இத்திட்டம் செயல்படுத்த இந்நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 52. மாணவர் தொடர் கல்வி திட்டம் கண்காணித்தல்

மேல்நிலைக் கல்வி முடித்த, தேர்ச்சி பெறாத அல்லது இடைநிறுத்திய மாணவர்கள் உயர்கல்வியில் தொடர்ந்து பயிற்சியில் சேருவதை கண்காணித்து உறுதி செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கென ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 53. மாநகராட்சி பள்ளிகளை தரம் உயர்த்துதல்

மாநகராட்சி பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை மற்றும் தேவைகளின் அடிப்படையில் நடுத்தர பள்ளிகளை உயர்நிலை பள்ளிகளாக மேம்படுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பள்ளிகளின் செயல்திறன் மதிப்பீடு, மாணவர் தேவைகள் மற்றும் கற்றல் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் கூடுதல் பாடப் பிரிவுகள் அங்கீகரிக்கப்படும். இதன் மூலம் மாணவர்கள் மேல்நிலை கல்வி பயிற்சியில் சிறந்த முன்னேற்றம் காண, பாடங்கள் திறம்பட நடைபெற, மாணவர் திறன்கள் விருத்தி அடையும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 54. மாநகராட்சி பள்ளிகளில் NCC திட்டம் செயல்படுத்துதல்

மாநகராட்சி பள்ளி மாணவர்களில் ஒழுக்கம், நாட்டுப்பற்று மற்றும் சேவை மனப்பாங்கை வளர்க்கும் நோக்கில், 10 மாநகராட்சி பள்ளிகளில் NCC (National Cadet Corps) திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கு அணிவகுப்பு பயிற்சி, உடற்பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி மற்றும் சமூக சேவை நடவடிக்கைகள் வழங்கப்படும். NCC முகாம்கள், போட்டிகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளில் மாணவர்கள் பங்கேற்க ஏற்பாடு செய்யப்படும். இதன் மூலம் மாணவர்களின் உடல் திறன், மனத் திடத்தன்மை மற்றும் குழு உணர்வு மேம்படும். பள்ளிகளில் NCC செயல்பாடுகள் திட்டமிட்ட முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு, மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு இத்திட்டம் உதவும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 55. கலை திருவிழா மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பித்த மாணவர்களுக்கு பரிசுத்தொகை வழங்குதல்

மாநகராட்சி பள்ளி மாணவர்களின் கலை மற்றும் விளையாட்டு திறமைகளை ஊக்குவிக்கும் நோக்கில், மாநில அளவில் நடைபெறும் கலை திருவிழா (Kalai Thiruvizha) போட்டிகளிலும், மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கேற்று வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசுத்தொகை வழங்கப்படும். இசை, நடனம், நாடகம், ஓவியம் போன்ற கலைப் போட்டிகள் மற்றும் தடகளம் உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பாக செயல்பட்டு வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ.50,000, இரண்டாம் பரிசாக ரூ.25,000 மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.10,000 வழங்கப்படும். இதன் மூலம் மாணவர்களின் தன்னம்பிக்கை உயர்ந்து, தொடர்ந்து சாதிக்க ஊக்கம் பெறுவர். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 56. ரோபோட்டிக்ஸ் ஆய்வகம் அமைத்தல் – 4 பள்ளிகள்

மாநகராட்சி 4 பள்ளிகளில் மாணவர்களின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தும் நோக்கில் ரோபோட்டிக்ஸ் ஆய்வகங்கள் அமைக்கப்படும்.



இவ்வாய்வகங்களில் ரோபோக்கள் உருவாக்கம், நிரலாக்கம் மற்றும் தானியங்கி கருவிகள் தொடர்பான செய்முறை கற்றல் வழங்கப்படும். இத்திட்டம் திறம்பட செயல்படுவதற்காக தேவையான பயிற்றுநர்கள் நியமிக்கப்படுவர். இதன் மூலம் மாணவர்களின் கணினி அறிவு, சிந்தனைத் திறன் மற்றும் புதுமை சிந்தனை மேம்படும். எதிர்காலத்தில் அறிவியல் மற்றும் பொறியியல் துறைகளில் உயர்கல்வி பெற இது உறுதியான அடித்தளமாக அமையும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 57. விளையாட்டு மைதானம்

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்தில் ரூ. 7.20 கோடி மதிப்பீட்டில் நான்கு விளையாட்டு மைதானங்களும், மேற்கு மண்டலத்தில் ரூ. 3.80 கோடி மதிப்பீட்டில் நான்கு விளையாட்டு மைதானங்களும் மற்றும் தெற்கு மண்டலத்தில் ரூ. 6.03 கோடி மதிப்பீட்டில் ஒன்பது விளையாட்டு மைதானங்களும் மற்றும் மத்திய மண்டலத்தில் ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் மூன்று விளையாட்டு மைதானங்களும் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.68–க்குட்பட்ட வடகோவை மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் விளையாட்டு மைதானம் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



# பொது சுகாதாரப் பிரிவு

## 1. பொது சுகாதார ஆய்வகங்களுக்கு தைராய்டு பரிசோதனை கருவிகள் கொள்முதல் செய்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வருடந்தோறும் பதிவு செய்யப்படும் 22 ஆயிரம் கர்ப்பிணி பெண்களுக்கும் தைராய்டு பரிசோதனை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் 3 தைராய்டு பரிசோதனை கருவிகள் ரூ.15.00 இலட்சம் (தலா 5 இலட்சம் மதிப்பீடு) மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு மாநகர பொதுசுகாதார ஆய்வகங்களில் நிறுவப்பட்டு தைராய்டு பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2. நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் LED பலகைகள் பொருத்துதல்

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு பகுதிகளில் இயங்கி வரும் 33 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழங்கப்படும் சேவைகள் மற்றும் விழிப்புணர்வு செய்திகளை மக்களுக்கு தெரிவிக்கும் வகையில் LED பலகைகள் ரூ.6.60 இலட்சம் (தலா ரூ.20 ஆயிரம்) மதிப்பீட்டில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3. அறுவை சிகிச்சை அரங்குகள் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு Generator வசதி ஏற்படுத்தி தருதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் இயங்கி வரும் அறுவை சிகிச்சை அரங்குகள் உள்ள பீளமேடு, ஆர்.கே. பாய், வி.வி.எம். ஹோம், சிங்காநல்லூர் மற்றும் எம்.எம். ஹோம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் அறுவை சிகிச்சை நடைபெறும் போது மின்தடையின்றி செயல்படுத்த ஏதுவாக ரூ.5.00 இலட்சம் (தலா ரூ.1 இலட்சம்) மதிப்பீட்டில் Generator வசதியினை ஏற்படுத்தி தர நடவடிக்கை எடுக்கப்படும்.

### 4. நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் CCTV கண்காணிப்பு கேமரா வசதி ஏற்படுத்துதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் இயங்கி வரும் 33 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பாதுகாப்பு நலன் கருதி ரூ.16.50 இலட்சம் (தலா ரூ.50 ஆயிரம்) மதிப்பீட்டில் CCTV கண்காணிப்பு கேமரா வசதி ஏற்படுத்தி தர நடவடிக்கை எடுக்கப்படும்.

### 5. நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு NASG மருத்துவ உபகரணங்கள் வழங்குதல்

கோயம்புத்தூர் மாநகராட்சியின் கீழ் செயல்பட்டு வரும் 33 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறின்போது ஏற்படும் இரத்தக்கசிவு காரணமாக ஏற்படும் பாதிப்புகளை குறைக்கும் விதத்தில் நியூமேடிக் ஆண்டிசாக் ஆடை (Non–pneumatic Anti–Shock Garment) ரூ.3.30 இலட்சம் மதிப்பீட்டில் (தலா ரூ.10 ஆயிரம்) கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

### 6. பொது சுகாதாரப் பிரிவிற்கு கணினி உள்ளிட்ட தளவாடப் பொருட்கள் வாங்குதல்

மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் உள்ள பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்படும் கணினிகள், பிரிண்டர்கள் ஆகியவை பழுதடைந்துள்ளதால் 10 எண்ணிக்கையிலான கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் ஜெராக்ஸ் (ம) ஸ்கேனர் வசதி கொண்ட ஒரு பிரிண்டர் (பெரியது) ஆகியன ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

### 7. நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கணினி வழங்குதல்

33 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான தலா ஒன்று என்ற வீதத்தில் கணினி, பிரிண்டர் ஆகியவை ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

### 8. சீதாலட்சுமி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாதிரி மகப்பேறு சிகிச்சை மையம் ஏற்படுத்துதல் (Model Primary Maternity Care Center)

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட சீதாலட்சுமி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தினை 24 மணி நேரமும் செயல்படும் மாதிரி மகப்பேறு மருத்துவ மையமாக மேம்படுத்த கடந்த ஆண்டு வரவு செலவு அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. முதற்கட்டமாக ரூ.12.00 கோடி மதிப்பீட்டில் விரிவான அறிக்கை தயார் செய்யப்பட்டு நிதி கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரசிடமிருந்து நிதி பெற்றவுடன் மாதிரி மகப்பேறு மருத்துவ மையம் அமைக்கப்பட்டு மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட பணியாளர்கள் நியமிக்கப்பட்டு 24 மணி நேரமும் மருத்துவர்கள் மேற்பார்வையில் பிரசவம் நடைபெறும் வகையில் மேம்படுத்தப்படும்.

### 9. தாய்சேய் நல கண்காணிப்பு அழைப்பு மையம் ஏற்படுத்துதல் (Maternal Child Health Call Centre)

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட சீதாலட்சுமி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் தாய்சேய் நலம் கண்காணிப்பு அழைப்பு மையம் அமைக்க கடந்த ஆண்டு வரவு செலவு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு தற்போது கட்டிட மராமத்து பணிகள் நடைபெற்று வருகிறது. பணிகள் முடிவடைந்தவுடன் தாய்சேய் அழைப்பு மையம் (Call Centre) அமைக்கப்பட்டு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு கர்ப்பிணி பெண்களுக்கான

சேவைகள், குழந்தைகளுக்கு தடுப்பூசி தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு சேவைகள் வழங்குவது உறுதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்நிதியாண்டில் ரூ.60.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

### 10. டயாலிசிஸ் மையங்கள் அமைத்தல் (Dialysis Centre)

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட சீதாலட்சுமி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ஒரு டயாலிசிஸ் மையம் அமைப்பதற்கு கடந்த ஆண்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு தற்போது பணிகள் முடிவடைந்து திறக்கப்பட்டு தனியார் பங்களிப்புடன் நோயாளிகளுக்கு டயாலிசிஸ் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இரண்டாம் கட்டமாக கோயம்புத்தூர் மாநகராட்சி போத்தனூர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.4.00 கோடி செலவில் இரண்டாவது டயாலிசிஸ் மையம் அமைக்கும் வகையில் கட்டிட பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், டயாலிசிஸ் சிகிச்சை பெறும் நோயாளிகள் பயன்பெறும் வகையில் கோயம்புத்தூர் மாநகராட்சியில்



கிழக்கு மண்டலம் சிங்காநல்லூர் மற்றும் வடக்கு மண்டலம் சரவணம்பட்டி பகுதியில் தலா ரூ.4.00 கோடி செலவில் இரண்டு டயாலிசிஸ் மையம் ரூ.12.00 கோடி செலவில் அமைக்கப்பட்டு தனியார் பங்களிப்புடன் நோயாளிகளுக்கு டயாலிசிஸ் சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 11. நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பொதுமக்களுக்கு இலவசமாக பல்சிகிச்சை வழங்குதல்.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள 7 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் (சிங்காநல்லூர், எம்.எம். ஹோம், பீளமேடு, துடியலூர், செல்வபுரம், சி.டி.எம். ஹோம் மற்றும் எஸ்.எல்.எம். ஹோம்) பொதுமக்களுக்கு இலவசமாக பல்மருத்துவ சிகிச்சை வழங்க கடந்த ஆண்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு தற்போது தனியார் பங்களிப்புடன் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த வருடம் மேலும் 3 மையங்களுக்கு (கணபதி, போத்தனூர் மற்றும் விளாங்குறிச்சி) இந்த பல் மருத்துவ சிகிச்சை வசதி விரிவுபடுத்தப்பட்டு மொத்தம் 10 இடங்களில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுமக்களுக்கு பல் சிகிச்சை இலவசமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



## 12. பொது சுகாதார ஆய்வகங்களில் நோய் கண்டறியும் பரிசோதனைகள் மேற்கொள்ளுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 3 பொது சுகாதார ஆய்வகங்களில் நுண்ணுயிரியிலாளர், ஆய்வகநுட்புநர் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு இரத்த பரிசோதனை, கல்லீரல் பரிசோதனை, சிறுநீரக பரிசோதனை, இரத்த அணுக்கள், இரத்தத்தில் சர்க்கரை அளவு, யூரியா, கொலஸ்ட்ரால், டெங்கு, எச்.ஐ.வி, மலேரியா, மஞ்சள் காமாலை, சளி பரிசோதனை உள்ளிட்ட ஆய்வக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த சேவை இந்த ஆண்டும் ரூ.21.00 இலட்சம் செலவில் பொதுமக்களுக்கு தொடர்ந்து வழங்கப்படும்.



## 13. நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேசிய தரஉறுதி (NQAS) சான்றிதழ் பெறுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள 10 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு (வி.வி.எம் ஹோம், எம்.எம்.ஹோம், சி.டி.எம் ஹோம், செல்வபுரம், கணபதி மாநகர், பீளமேடு, நஞ்சுண்டாபுரம், இராமநாதபுரம், இரத்தினபுரி, உப்பிலிபாளையம்) தேசிய தரஉறுதி சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டும் 4 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு (ஆர்.கே. பாய், எஸ்.எல்.எம். ஹோம், சிங்காநல்லூர், துடியலூர்) தேசிய தரமதிப்பீட்டு சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

இந்த வருடம் சீரநாயக்கன்பாளையம், கல்வீரம்பாளையம், வெள்ளக்கிணறு, விளாங்குறிச்சி, பட்டுநூல் மற்றும் கணபதி ஆகிய 6 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தலா ரூ.4.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய தரச்சான்றிதழ் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 14. நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டிடம் மற்றும் கூடுதல் கட்டிடம் கட்டுமான பணிகள்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள கே.கே புதூர், சீரநாயக்கன்பாளையம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.2.70 கோடி செலவில் புதிய கட்டிடப்பணிகள் மற்றும் உப்பிலிபாளையம், விளாங்குறிச்சி ஆகிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.1.20 கோடி செலவில் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு கடந்த வருடம் நிதி பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

தற்போது நஞ்சுண்டாபுரம் மற்றும் சௌரிபாளையம் ஆகிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு ரூ.3.00 கோடி செலவில் புதிய கட்டிடம் மற்றும் கல்வீரம்பாளையம், இராமநாதபுரம் மற்றும் குறிச்சி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு ரூ.2.25 கோடி செலவில் நிதி பெறப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளது. மேலும், போத்தனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மாநகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.85.00 இலட்சம் செலவில் கூடுதல் கட்டிடம் கட்டும் பணிகள் துவங்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் கணபதி மாநகர், வெள்ளக்கிணறு, இராஜவீதி, செல்வபுரம், பீளமேடு மற்றும் பட்டுநூல் ஆகிய 6 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தலா ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.



### 15. நான்கு புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் கடந்த ஆண்டு மணியகாரம்பாளையம் பகுதியில் ஒரு புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் ரூ.2.50 கோடி செலவில் தோற்றுவித்து கட்டிடப்பணிகள் முடிந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த வருடம் சரவணம்பட்டி, காளப்பட்டி, மேட்டூர் மற்றும் வேலாண்டிபாளையம் ஆகிய பகுதிகளில் மக்கள் தொகையின் அடிப்படையில் புதிதாக நான்கு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூ.10.00 கோடி செலவில் தோற்றுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### 16. இயன்முறை சிகிச்சை மையங்கள் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 5 மண்டலங்களிலும் தலா ரூ.2.00 கோடி செலவில் மனவளர்ச்சி, மூளை குறைபாடு, எலும்பு மற்றும் நரம்பு பாதிப்புகள் உள்ள நபர்களுக்கு மறுவாழ்வு ஏற்படுத்தும் வகையில் ஐந்து இயன்முறை சிகிச்சை மையங்கள் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

### 17. நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் செவிலியர்கள், நகர சுகாதார செவிலியர்கள், மருந்தாளுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள 33 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பொது மக்களுக்கு தங்குதடையின்றி சேவைகள் வழங்கும் விதத்தில் காலியாக உள்ள பணியிடங்களில் செவிலியர்கள், நகர சுகாதார செவிலியர்கள், மருந்தாளுநர்கள் ரூ.74.00 இலட்சம் செலவினத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். மேற்கண்ட பணியாளர்கள் இந்த வருடமும் ரூ.86.00 இலட்சத்தில் பணிகளை தொடர அனுமதிக்கப்பட்டு பொதுமக்களுக்கு தங்குதடையின்றி சேவைகள் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

## 18. நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு (UPHC) தூய்மை பணியாளர்கள் மற்றும் காவலாளிகள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள 33 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தூய்மை பணியாளர்கள் மற்றும் காவலாளிகள் ரூ.2.50 கோடி செலவினத்தில் ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். இந்த வருடமும் ரூ.2.80 கோடி செலவினத்தில் மேற்கண்ட இரவு காவலாளிகள் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து பணிபுரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 19. நகர்ப்புற நல்வாழ்வு மையங்கள் (U–HWC) மற்றும் பொது சுகாதார ஆய்வகங்களுக்கு (U–CPHL) இரவு காவலாளிகளை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் உள்ள நகர்ப்புற நல்வாழ்வு மையங்கள் (U–HWC) மற்றும் பொது சுகாதார ஆய்வகங்களுக்கு (U–CPHL) இரவு காவலாளிகள் ரூ.1.39 கோடி செலவினத்தில் ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். இந்த வருடமும் ரூ.1.40 கோடி செலவினத்தில் மேற்கண்ட இரவு காவலாளிகள் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து பணிபுரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 20. ஒப்பந்த அடிப்படையில் கொசு ஒழிப்பு பணியாளர்களை பணியமர்த்துதல்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ரூ.29.35 கோடி செலவினத்தில் 1209 கொசு ஒழிப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். இந்த வருடமும் ரூ.32.00 கோடி செலவினத்தில் மேற்கண்ட இரவு காவலாளிகள் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து பணிபுரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



## 21. நிரந்தர தூய்மை பணியாளர்களுக்கு சீருடைகள் வழங்குதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் பணிபுரியும் 1946 நிரந்தர தூய்மை பணியாளர்களுக்கு கடந்த வருடம் ரூ. 80.00 இலட்சம் செலவில் சீருடைகள், காலணிகள் வாங்கி வழங்கப்பட்டது. இந்த வருடமும் நிரந்தர தூய்மை பணியாளர்களுக்கு ரூ.92.00 இலட்சம் செலவினத்தில் சீருடைகள், காலணிகள் வாங்கி வழங்கப்படும்.




## 22. நிரந்தர தூய்மைப்பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் பணிபுரியும் 1946 நிரந்தர தூய்மை பணியாளர்களுக்கு கடந்த வருடம் ரூ.85.00 இலட்சம் செலவில் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்கப்பட்டது. இந்த வருடமும் ரூ.1.00 கோடி செலவில் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்கப்படும்.

## 23. நிரந்தர தூய்மைப் பணியாளர்களுக்கு தளவாட பொருட்கள் வழங்குதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் பணிபுரியும் 1946 நிரந்தர தூய்மை பணியாளர்களுக்கு கடந்த வருடம் ரூ.85.00 இலட்சம் செலவில் தளவாடங்கள் வாங்கி வழங்கப்பட்டது. இந்த வருடமும் ரூ.1.00 கோடி செலவில் தளவாடங்கள் வாங்கி வழங்கப்படும்.



## 24. பிளிச்சிங் பவுடர் மற்றும் நீர்த்த சுண்ணாம்புத்தூள் வாங்கி வழங்குதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் பிளிச்சிங் பவுடர் மற்றும் நீர்த்த சுண்ணாம்புத்தூள் ஆகிய கிருமி நாசினிகள் கடந்த ஆண்டு ரூ.75.00 இலட்சம் செலவில் வாங்கி பயன்படுத்தப்பட்டது. இந்த வருடமும் கிருமி நாசினி பணிகளுக்காக ரூ.1.00 கோடி செலவில் பிளிச்சிங் பவுடர் மற்றும் நீர்த்த சுண்ணாம்புத்தூள் ஆகிய கிருமி நாசினிகள் கொள்முதல் செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.



### 25. கொசு ஒழிப்பு பணிகளுக்காக பைத்திரம் புகை மருந்துகள் வாங்கி வழங்குதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் டெங்கு, மலேரியா போன்ற நோய்களை பரப்பும் கொசுக்களை அழிக்க புகைமருந்து அடிப்பதற்காக கடந்த ஆண்டு ரூ.75.00 இலட்சம் செலவினத்தில் பைத்திரம் புகை மருந்துகள் வாங்கி பயன்படுத்தப்பட்டது. இந்த வருடமும் ரூ.1.00 கோடி செலவினத்தில் கொசுக்களை அழிக்க புகைமருந்து வாங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 26. கொசு ஒழிப்பு பணிகளுக்காக மாலத்தியான் புகை மருந்துகள் வாங்கி வழங்குதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் டெங்கு, மலேரியா, போன்ற நோய்களை பரப்பும் கொசுக்களை அழிக்க புகை மருந்து அடிப்பதற்காக ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் மாலத்தியான் புகை மருந்துகள் வாங்கி பயன்படுத்தப்பட்டது. இந்த வருடமும் ரூ.40.00 இலட்சம் செலவினத்தில் கொசுக்களை அழிக்க புகைமருந்து வாங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.



## 27. கொசுபுழு அழிப்பு பணிகளுக்காக டெமிபாஸ் மருந்துகள் வாங்கி வழங்குதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் டெங்கு, மலேரியா போன்ற நோய்களை பரப்பும் கொசுப்புழுக்களை அழிக்க டெமிபாஸ் மருந்து ரூ.30.00 இலட்சம் செலவீட்டில் வாங்கி பயன்படுத்தப்பட்டது. இந்த வருடமும் ரூ.40.00 இலட்சம் செலவினத்தில் கொசுபுழுக்களை அழிக்க டெமிபாஸ் மருந்து வாங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 28. கொசுபுழு அழிப்பு பணிகளுக்காக பேசில்லஸ் துரஞ்சியன்சிஸ் மருந்துகள் வாங்கி வழங்குதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கழிவுநீர் கால்வாய்களில் வளரும் கொசுப்புழுக்களை அழிப்பதற்கு பேசில்லஸ் துரஞ்சியன்சிஸ் (BT 5%) மருந்துகள் ரூ.62.00 இலட்சம் செலவில் வாங்கி பயன்படுத்தப்பட்டது. இந்த வருடமும் ரூ.90.00 இலட்சம் செலவினத்தில் கழிவுநீர் கால்வாய்களில் வளரும் கொசுப்புழுக்களை அழிப்பதற்கு பேசில்லஸ் துரஞ்சியன்சிஸ் வாங்கப்பட்டு இந்த பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 29. வெள்ளலூர் உரக்கிடங்கிற்கு கிருமி நாசினி மருந்துகள் வாங்கி வழங்குதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்தில் அமைந்துள்ள வெள்ளலூர் உரக்கிடங்கிலிருந்து வரும் துர்நாற்றத்தினை தடுக்கும் விதமாக Lemon Cross oil,



Black Phenyl, Cented Phenyle மற்றும் EM Solution மருந்துகள் ரூ.12.00 இலட்சம் செலவில் வாங்கி பயன்படுத்தப்பட்டது. இந்த வருடமும் மேற்கண்ட மருந்துகள் ரூ.15.00 இலட்சத்தில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்படும்.

### 30. மாநகராட்சியில் (Single Window Service Centre) ESI / EPF புகார் உதவி மையம் அமைப்பது

மாநகராட்சி அனைத்து மண்டலங்களில் ஒப்பந்ததாரர் மூலம் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் ESI/EPF தொடர்பாக (Single Window Service Centre) புகார் உதவி மையம் அமைக்க தேவையான பணியாளர்கள் பணியமர்த்தல் மற்றும் உபகரணங்கள் வாங்க ரூ.30.00 இலட்சத்தில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்படும்.



### 31. தனியார் கழிவுநீர் வாகன உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் துலக்குநர்களுக்கான பயிற்சி நடத்துதல்

கழிவு நீர் முறையாக சுத்தம் செய்து வாகனம் மூலம் கொண்டு செல்லுதல் கழிவுநீர் பண்ணையில் கொட்டுதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு உரிய பயிற்சியாளர்களை கொண்டு பயிற்சி வகுப்புகள் நடத்திட இந்நிதியாண்டில் ரூ.3.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 32. பூங்கா பராமரிப்பு பணிகள்

கோயம்புத்தூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மத்திய மண்டல வார்டு பகுதியில் புதியதாக திறந்து வைக்கப்பட்ட செம்மொழி பூங்காவிற்கு சுகாதார பணியாளர்கள் மற்றும் காவலர்கள், எலக்ட்ரீசியன்கள், பிளம்பர்கள் மற்றும் BOV வாகன ஓட்டுநர்கள் போன்ற பணியாளர்களை பணியமர்த்துவது மற்றும் பராமரிப்பு பொருட்கள் வாங்குவதற்கு ஒரு மாதத்திற்கு ரூ.56.00 இலட்சம் வீதம் வருடத்திற்கு ரூ.6.72 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 33. தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் செயல்படுத்துதல்

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் குறிப்பின்படி, கோயம்புத்தூர் மாநகராட்சி, பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூய்மை பணியாளர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உணவு திட்டத்தை நடைமுறைபடுத்தும் வகையில் மாநகராட்சியில் பணிபுரியும் நிரந்தர தூய்மை பணியாளர்கள், ஒப்பந்த தூய்மை பணியாளர்கள், ஓட்டுநர்கள், கொசு ஒழிப்பு பணியாளர்கள், சாக்கடை சுத்தம் செய்யும் பணியாளர்கள், பள்ளிகள் மற்றும் வார்டுகளில் கழிவறை பராமரிக்கும் பணியாளர்கள் உட்பட 9454 பணியாளர்களுக்கு, உணவு வழங்குவது ஒரு வருடத்திற்கு ரூ.14.00 கோடி வீதம் மூன்று வருடத்திற்கு ரூ.42.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**34. ஒப்பந்த அடிப்படையில் சாக்கடை பணி தூய்மை பணியாளர்களை பணியமர்த்தி பணிகள் மேற்கொள்வது**

கோயம்புத்தூர் மாநகராட்சி அனைத்து மண்டல வார்டு பகுதிகளில் ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணியாளர்களை பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள இந்நிதியாண்டில் ரூ.22.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**35. சாலைகளின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள மையத்தடுப்பு சுவர் பகுதிகளில் உள்ள மணல் மற்றும் குப்பைகளை அகற்றும் பணிக்கு தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் பணியமர்த்தியது**

கோயம்புத்தூர் மாநகராட்சி – அனைத்து மண்டல வார்டு பகுதிகளில் சாலைகளின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள மையத்தடுப்பு சுவர் பகுதிகளில் உள்ள மணல் மற்றும் குப்பைகளை அகற்றும் பணிக்கு தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள இந்நிதியாண்டில் ரூ.5.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



36. சாலைகளின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள மையத்தடுப்பு சுவர் பகுதிகளில் அகற்றப்படும் மணல் மற்றும் குப்பைகளை சேகரிக்க இரண்டு Mini Tipper வாகனங்களை தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்வது

கோயம்புத்தூர் மாநகராட்சி அனைத்து மண்டல வார்டு பகுதிகளில் சாலைகளின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள மையத்தடுப்பு சுவர் பகுதிகளில் அகற்றப்படும் மணல் மற்றும் குப்பைகளை சேகரிக்க இரண்டு Mini Tipper வாகனங்களை தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள இந்நிதியாண்டில் ரூ.2.11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

37. மழை நீர் வடிகாலில் மண் (Silt) தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி அனைத்து மண்டல சாலைகளில் ஒரு TATA 407 Tipper வாகனம் மூலம் மழை நீர் வடிகாலில் மண் (Silt) தூர்வாரும் பணிகள் மேற்கொள்ள இந்நிதியாண்டில் ரூ.2.21 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**38. திடக்கழிவு அகற்றும் வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள ஜி.பி.எஸ் கருவிகளை கணினி மூலம் கண்காணிக்கும் பணிக்கு 50 கணினி இயக்கும் பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையில் பணியாளர்களை பணியமர்த்தியது**

கோயம்புத்தூர் மாநகராட்சி திடக்கழிவு அகற்றும் வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள ஜி.பி.எஸ் கருவிகளை கணினி மூலம் கண்காணிக்கும் பணிக்கு 50 கணினி இயக்கும் பணியாளர்கள் வெளிக்கொணர்வு முறையில் பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள இந்நிதியாண்டில் ரூ.1.95 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**39. தெற்கு மண்டல வார்டு எண்.99-க்குட்பட்ட வெள்ளலூர் குப்பை கிடங்கிற்கு ஒப்பந்த அடிப்படையில் காவலர்களை பணியமர்த்தி பணிகள் மேற்கொண்டது**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டல வார்டு எண்.99-க்குட்பட்ட வெள்ளலூர் குப்பை கிடங்கிற்கு ஒப்பந்த அடிப்படையில் காவலர்களை பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள இந்நிதியாண்டில் ரூ.40.27 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**40. திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளுக்கு ஒப்பந்ததாரர் மூலம் அனைத்து மண்டலங்களில் தூய்மை பணிகளை மேற்கொண்டது**

கோயம்புத்தூர் மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூய்மை பணிகளை மேற்கொள்ள இந்நிதியாண்டில் ரூ.169.21 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 41. மாநகர் பகுதிகளில் சுற்றித்திரியும் வீடில்லா நாய்களுக்கு வெறிநோய் தடுப்பு ஊசிகள் (ARV) செலுத்தும் திட்டம்

மாநகரில் சுற்றித்திரியும் சுமார் 98,000 வீடில்லா நாய்களில், 2025–26ம் நிதியாண்டில் சுமார் ரூ.30.00 இலட்சம் செலவில் 33,000 வீடில்லா நாய்களுக்கு வெறிநோய் தடுப்பு ஊசிகள் (ARV) செலுத்தப்பட்டுள்ள நிலையில், வரும் 2026–27ம் நிதியாண்டில் மீதமுள்ள சுமார் 60,000 வீடில்லா நாய்களுக்கு வெறிநோய் தடுப்பு ஊசிகள் (ARV) செலுத்தும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இதற்காக இந்நிதியாண்டில் ரூ.60.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 42. மாநகர் பகுதிகளில் சுற்றித்திரியும் வீடில்லா நாய்களுக்கு இனப்பெருக்க கருத்தடை (ABC) மேற்கொள்ளும் திட்டம்

மாநகரில் செயல்படும் நான்கு வீடில்லா நாய்களுக்கான கருத்தடை மையங்களில் 2025-26ம் ஆண்டில் ரூ.235.00 இலட்சம் செலவினத்தில், 14296 வீடில்லா நாய்களுக்கு இனப்பெருக்க கருத்தடை சிகிச்சைகள் (ABC) மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வரும் 2026-27ம் நிதியாண்டில் நடவடிக்கைகளை துரிதப்படுத்தி சுமார் 36000 வீடில்லா நாய்களுக்கு இனப்பெருக்க கருத்தடை சிகிச்சைகள் (ABC) மேற்கொள்ளும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இதற்காக இந்நிதியாண்டில் ரூ.6.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





### 43. நிறுவனங்களில் பிடிபடும் வீடில்லா நாய்களை காப்பகத்தில் (Stray Dog Shelters) வைத்து பராமரித்தல் திட்டம்

மாநகர பகுதிகளில் உள்ள கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், வழிப்பாட்டு தளங்கள், பேருந்து மற்றும் புகை வண்டி நிலையங்கள் போன்ற பொதுமக்கள் அதிகமாக கூடுகின்ற பகுதிகளில் பிடிபடும் வீடில்லா நாய்கள் கொண்டு சென்று, காப்பகங்களில் (Stray Dog Shelters) வைத்து பராமரிக்கின்ற வகையில், மாநகராட்சி பகுதியில் காப்பகம் அமைக்கப்பட்டு வருகின்றன. 2026–27ம் நிதியாண்டில், குறைந்தது 1000 நாய்களை காப்பகத்தில் வைத்து பராமரிக்க திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இதற்காக இந்நிதியாண்டில் ரூ.7.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 44. ஒப்பந்த தூய்மை பணியாளர்களுக்கு SUY திட்டத்தின் கீழ், கழிவு நீர் வாகனங்கள் கொள்முதல் செய்யும் திட்டம்

ஒன்றிய அரசின் Swachhta Udyami Yojana (SUY) திட்டத்தின் கீழ், NSKFDC மூலம் கடந்த 2024–25ம் நிதியாண்டில், 15 ஒப்பந்த தூய்மை பணியாளர்களின் பெயர்களில் ரூ.132.00 இலட்சத்தில் 3 கழிவுகள் அகற்றும் வாகனங்கள் வங்கி கடனுதவி மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, அதனை மாநகராட்சிக்கு மாத வாடகை அடிப்படையில் வழங்கி, அதன் மூலம் கிடைக்கப் பெறும் மாத வாடகை தவணையினை வங்கிகளுக்கு செலுத்தியது நீங்கலாக ஒவ்வொரு பணியாளர்களுக்கும் மாதந்தோறும் சுமார் ரூ.2000/– வருவாய் கிடைக்கப்பெற்று வருகின்றது. மேலும், வரும் 2026–27ம் நிதியாண்டில் சுமார் 35 ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் பயன்பெறும் வகையில். கூடுதலாக 8 கழிவுகள் அகற்றும் வாகனங்கள் வங்கி கடனுதவி மூலம் கொள்முதல் செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்காக இந்நிதியாண்டில் ரூ.3.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 45. NULM திட்ட நிதியின் மூலம் மாநகராட்சி பகுதிகளில் மூன்று ஆதரவற்றோர் இல்லங்கள் செயல்படுத்தும் திட்டம்

நடப்பு 2025-26ம் நிதியாண்டில், ஒன்றிய அரசின் NULM திட்ட நிதியின் மூலம் மாநகராட்சியின் கிழக்கு, வடக்கு மற்றும் தெற்கு மண்டல பகுதிகளில் மூன்று ஆதரவற்றோர் இல்லங்கள் கட்டடப்பட்டுள்ளது. வரும் 2026-27ம் நிதியாண்டில் இம்மூன்று இல்லங்களையும், உரிய தொண்டு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான பராமரிப்பு தொகை ரூ.18.00 இலட்சம் NULM திட்ட நிதியின் மூலம் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



# பொறியியல் பிரிவு

## 1. சாலை மேம்பாட்டு பணிகள் முதற்கட்டம்

★ தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் TURIP I, II 2025–26 திட்டத்தின் கீழ் ரூ.67.53 கோடி மதிப்பீட்டில் மொத்தமாக 170.02 கி.மீ நீளத்திற்கு 1166 எண்ணிக்கையிலான சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ மாநில நிதி குழு சிறப்பு நிதி திட்டம் SFC Devolution Fund, SFC 2025–26 திட்டத்தின் கீழ் ரூ.28.33 கோடி மதிப்பீட்டில் 66.98 கி.மீ நீளத்திற்கு 457 எண்ணிக்கையிலான மண் சாலைகள் தார் சாலையாக மாற்றப்பட்டுள்ளது.

★ உள்ளூர் திட்டக் குழும நிதி (LPA Fund 25– 26) திட்டத்தின் கீழ் ரூ.40.03 கோடி மதிப்பீட்டில் 101.49 கி.மீ நீளத்திற்கு 624 எண்ணிக்கையிலான சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



★ பொது நிதியின் கீழ் ரூ.45.89 கோடி மதிப்பீட்டில் 118.59 கி.மீ நீளத்திற்கு 887 எண்ணிக்கையிலான சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ சிறப்பு நிதியின் கீழ் ரூ.20.50 கோடி மதிப்பீட்டில் 47.66 கி.மீ நீளத்திற்கு 322 எண்ணிக்கையிலான சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 2. சாலை மேம்பாட்டு பணிகள் இரண்டாம் கட்டம்

இரண்டாம் கட்டமாக ரூ.123.05 கோடி மதிப்பீட்டில் 289.09 கி.மீ நீளத்திற்கு 2112 எண்ணிக்கையிலான சாலைப் பணிகள் நடைபெற்று வருகிறது.

### 3. புதிய சாலை மேம்பாட்டு பணிகள்

இம்மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் 24x7 குடிநீர் திட்டம் ஆகிய பணிகள் நடைபெற்று வருவதால் இத்திட்டத்தில் பழுதடையும் சாலைகள் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ள ரூ.200 கோடி மதிப்பீட்டில் வரும் நிதியாண்டில் அரசு நிதி உதவி பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



4. அவிநாசி சாலை சந்திப்பில் மேல்மட்ட நடைபாதை (ஸ்கை வாக்) அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்,66 அவிநாசி சாலை மற்றும் லட்சுமி மில் சந்திப்பில் பொதுமக்கள் அதிகமாக சாலையை கடந்து செல்வதால், போக்குவரத்து இடையூறும், விபத்துகளும் ஏற்படுகிறது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி மேற்படி இடத்தில் மேல்மட்ட நடைபாதை மேம்பாலம் அமைக்க ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் தனியார் பங்களிப்புடன் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



5. காந்திபுரம் கிராஸ்கட் சாலை மேல்மட்ட நடைபாதை (ஸ்கை வாக்) அமைத்தல் :

கோயம்புத்தூர் மாநகராட்சியின் முக்கிய சாலைகளில் ஒன்றான காந்திபுரம் நஞ்சப்பா சாலை மற்றும் கிராஸ்கட் சாலை சந்திப்பில் சாதாரண நாட்களை விட முக்கியமான பண்டிகை நாட்களில் பொதுமக்கள் சாலையை கடந்து செல்ல சிரமமாக உள்ளது. எனவே கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த மேல்மட்ட நடைபாதை (ஸ்கை வாக்) ரூ.8.41 கோடி மதிப்பீட்டில் தனியார் பங்களிப்புடன் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



### 6. உக்கடம் பேருந்து நிலையம் பகுதியில் மேல்மட்ட நடைபாதை (ஸ்கை வாக்) அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சியின் உக்கடம் பகுதி பிரதான சாலையில் இருபுறமும் பேருந்து நிலையம் அமைந்துள்ளதால் பொதுமக்கள் சாலையை கடந்து செல்ல மிகவும் சிரமமாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதியும் போக்குவரத்தினை கருத்தில் கொண்டு மேல்மட்ட நடைபாதை (ஸ்கை வாக்) ரூ.6.31 கோடி மதிப்பீட்டில் தனியார் பங்களிப்புடன் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 7. சாலை ஓர வாகன நிறுத்துமிடம்

### அ) K.G. தியேட்டர் சாலையில் பல அடுக்கு வாகனம் நிறுத்துமிடம் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் மாநகரின் மையப் பகுதியாக விளங்கும் K.G. தியேட்டர் சாலையில் எழில்மிகு பூங்காக்கள், வணிக வளாகங்கள், திரையரங்குகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் நடைபயிற்சி மேற்கொள்ளும் பகுதியாக உள்ளதால் வாகனங்களை நிறுத்துவதற்கு ஏதுவாக வாகன நிறுத்துமிடம் அமைக்க ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் தனியார் பங்களிப்புடன் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.



### ஆ) கிராஸ்கட் சாலையில் பல அடுக்கு வாகனம் நிறுத்துமிடம் அமைத்தல்

காந்திபுரம் கிராஸ்கட் சாலை பண்டிகை காலம் மற்றும் அனைத்து நாட்களிலும் கூட்ட நெரிசல் அதிகமாக உள்ள பகுதியாகும். இங்கு உள்ள வணிக வளாகங்கள் மற்றும் அங்காடிகளுக்கு நாளொன்றுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்லும் இடமாகவும் உள்ளது. இதனால் சாலை ஓரங்களில் வாகனங்கள் அதிகமாக நிற்பதால் பொதுமக்கள் நடந்து செல்ல வழியில்லாமல் நெரிசல் அதிகமாகிறது. எனவே ஒரே சமயத்தில் 200 எண்ணிக்கையிலான நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 100 எண்ணிக்கையிலான இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு ஏதுவாக பலஅடுக்கு வாகன நிறுத்துமிடம் கட்டுதல் பணிக்கு ரூ.20.00 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு உரிய அரசு நிதி ஒதுக்கீடு பெற்று இந்நிதியாண்டில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### இ) கோணியம்மன் கோவில் எதிர்புறம் தரைத்தள வாகனம் நிறுத்துமிடம்

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.82–க்குட்பட்ட கோணியம்மன் கோவில் எதிர்புறம் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் வருவாய் ஈட்டும் வகையில் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் தரைத்தள வாகன நிறுத்துமிடம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஊ) உக்கடம் பேருந்து நிலையத்திற்கு எதிரில் தரைத்தள வாகனம் நிறுத்துமிடம்

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம் வார்டு எண்.86–க்குட்பட்ட உக்கடம் பேருந்து நிலையத்திற்கு எதிரில் தரைத்தள வாகனம் நிறுத்துமிடம் அமைக்க ரூ 2.00 கோடி மதிப்பீட்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

உ) லங்கா கார்னர் பகுதியில் மேம்பாட்டுப் பணிகள்

கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண்.83–க்குட்பட்ட லங்கா கார்னர் பகுதியில் இரயில் நிலையம், மாவட்ட மருத்துவமனை, மத்திய மாநில அரசு அலுவலகங்கள், வணிக வளாகங்கள் உள்ளதால் போக்குவரத்து நெரிசல் மற்றும் பொதுமக்கள் கூட்டம் அதிகமாக உள்ளதால் மேற்படி இடத்தில் வாகனங்கள் நிறுத்துமிடம், சாலை மையப்பகுதி மேம்பாடு, வடிகாலுடன் கூடிய நடைபாதை மற்றும் கழிப்பிட வசதி போன்ற பணிகளுக்கு ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 8. பேருந்து நிலையம்

### அ) உக்கடம் பேருந்து நிலையம் மறு சீரமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட உக்கடம் பகுதியில் தற்போதுள்ள பேருந்து நிலையத்தை நகரின் மையப்பபகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்களை குறைக்கும் பொருட்டு பொள்ளாச்சி, பழனி, உடுமலைப்பேட்டை மற்றும் பாலக்காடு வழியாக கேரளா மாநிலத்திற்கு இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் பொதுமக்களின் நலன் மற்றும் வசதிக்கேற்றவாறு நகர மற்றும் புறநகர் பேருந்து முனையங்கள் என அனைத்து நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய இரண்டு பேருந்து முனையம் சுமார் 3.00 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.21.55 கோடிகள் மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது.



### ஆ) காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் மறுசீரமைத்தல்

கோயம்புத்தூர் காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு (1974–ஆம் ஆண்டு) கட்டப்பட்டது. தற்போது இப்பேருந்து நிலையத்தின் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்துள்ளது. பொதுமக்களின் பாதுகாப்பு கருதியும் மற்றும் வாகன போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு மேற்படி வளாகத்தில் உள்ள பழுதடைந்த கட்டடங்களை இடித்து விட்டு புதியதாக நவீன வசதிகளுடன் கூடிய தரை தளம் மற்றும் முதல் தளம் ஆகிய இரு தளங்களுடன் கூடிய பேருந்து நிலையமாக மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



இப்பேருந்து நிலையத்தில் தினசரி 998 எண்ணிக்கையிலான பேருந்துகள் நாள் ஒன்றுக்கு 1416 முறை வந்து செல்கிறது. மேலும் உத்தேசமாக 1,20,000 எண்ணிக்கையிலான பொதுமக்கள் பயன்படுத்துகிறார்கள், வளர்ந்து வரும் மாநகரமாக இருப்பதாலும் பொதுமக்கள் அதிகமாக வெளியூர் சென்று வருவதாலும் புதிய பேருந்து நிலையத்தில் பொதுமக்களின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டும் நவீனப்படுத்துவதன் மூலம் அன்றாட போக்குவரத்திற்கு சுலபமாக இருக்கும் வகையில், இப்பேருந்து நிலையத்தில் பேருந்து நிறுத்துமிடம், காத்திருப்பு அறை, கடைகள், பயணிகளின் பொருட்கள் பாதுகாப்பு அறை, குளியல் அறைகளுடன் கூடிய கழிப்பிட வசதிகள், இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், நேரம் காப்பாளர் அலுவலகம், தகவல் தெரிவிக்கும் அறை, பாலூட்டும் அறை போன்ற நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு ரூ.32.00 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய அரசு நிதி ஒதுக்கீடு பெற்று இந்நிதியாண்டில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### இ) சிங்காநல்லூர் பேருந்து நிலையம் மறுசீரமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்தில் உள்ள சிங்காநல்லூர் பேருந்து நிலையம் 24 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. தற்போது இப்பேருந்து நிலையம்



தாழ்வான பகுதியில் உள்ளதால் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி விடுகிறது. இதனால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே இப்பேருந்து நிலையம் முழுவதும் உயர்த்துவதற்கும், புதியதாக நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையமாக மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்பேருந்து நிலையத்தில் தினசரி 300 எண்ணிக்கையிலான பேருந்துகள் நாள் ஒன்றுக்கு மூன்று மற்றும் நான்கு முறை வந்து செல்கிறது. மேலும் நாள் ஒன்றுக்கு உத்தேசமாக 25,000 எண்ணிக்கையிலான பொதுமக்கள் பயன்படுத்துகிறார்கள். மேலும் வளர்ந்து வரும் மாநகரமாக இருப்பதாலும் பொதுமக்கள் அதிகமாக வெளியூர் சென்று வருவதாலும் புதிய பேருந்து நிலையத்தில் பொதுமக்களின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டும் நவீனப்படுத்துவதன் மூலம் போக்குவரத்திற்கு சுலபமாக இருக்கும் வகையில், இப்பேருந்து நிலையத்தின் முன் பகுதிகளில் வணிக வளாகம் கட்டுவதற்கும், பேருந்துநிலைய சில பகுதிகளில் பராமரிப்பு பணி செய்யவும், கழிப்பறைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கும் பேருந்து நிலையத்தின் மேற்கூரைகளை மாற்றி அமைக்கவும், சிமெண்ட் கான்கிரீட் ஓடுதளம் மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலைய அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள ரூ.10.00 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய அரசு நிதி ஒதுக்கீடு பெற்று இந்நிதியாண்டில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 9. வணிக வளாகம்

### அ) கிராஸ்கட் சாலையில் வணிக வளாகம் கட்டுதல்

காந்திபுரம் கிராஸ்கட் சாலையில் உள்ள லட்சுமி காம்ப்ளக்ஸ் வளாக அருகில் மாநகராட்சிக்கு சொந்தமான காலியாக உள்ள இடத்தில் மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் வணிக வளாகங்கள் அமைப்பதற்கு ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் உரிய அரசு நிதி ஒதுக்கீடு பெற்று இந்நிதியாண்டில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



### ஆ) டி.பி சாலையில் உணவுக்கூடம் கட்டுதல் (Food Court)

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட பகுதியான டி.பி.சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான காலியாக உள்ள இடத்தில் பொதுமக்களுக்கு உபயோகமாகவும் மாநகராட்சியின் வருவாயினை பெருக்கும் விதமாகவும், உணவுக்கூடம் கட்டுவதற்கு ரூ.5.50 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தனியார் பங்களிப்புடன் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



### இ) கிருஷ்ணசாமி சாலையில் வணிக வளாகம் அமைத்தல்

மத்திய மண்டலம் வார்டு எண்.70 க்குட்பட்ட கிருஷ்ணசாமி சாலை தேவாங்க பேட்டை பள்ளி அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான காலியாக உள்ள இடத்தில் வணிக வளாகம் அமைக்க ரூ.6.50 கோடி மதிப்பீட்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்து அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு உரிய நிதி ஒதுக்கீடு பெற்று இந்நிதியாண்டில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### 10. இரத்தினபுரி பகுதியிலிருந்து திருச்சி சாலை வரை உள்ள சங்கனூர் பள்ளத்தின் இருபுறமும் தடுப்புச்சுவர் கட்டி மேம்பாட்டுப் பணி செய்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி இரத்தினபுரி பகுதியிலிருந்து திருச்சி சாலை வரை உள்ள சங்கனூர் பள்ளத்தின் இருபுறமும் தடுப்புச்சுவர் கட்டி, 6.90 கி.மீ நீளத்திற்கு கரையை பலப்படுத்தி பணிகள் மேற்கொள்ள ரூ.294.00 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு, பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள ஓடைகளின் கரைகளை பலப்படுத்தி மேம்படுத்த கலந்தாலோசகர் நியமனம் செய்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.5.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

## 11. நமக்கு நாமே திட்டம்

பொது மக்களும் அரசும் இணைந்து தேவையான பணிகளை மேற்கொள்ள தமிழக அரசால் செயல்படுத்தப்படும் "நமக்கு நாமே" திட்டத்தில், மாநிலத்திலேயே முதல் இடமாக கோயம்புத்தூர் மாநகராட்சி உள்ளது.

2024–2025–ம் ஆண்டில் "நமக்கு நாமே" திட்டத்தின் கீழ் மதிப்பீட்டுத் தொகை ரூ.10.60 கோடியில் அரசின் பங்களிப்பாக ரூ.3.49 கோடியும் மற்றும் தனியார் பங்களிப்பாக ரூ. 7.11 கோடியில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட 83–மாநகராட்சி பள்ளிகள், 45–நகர்ப்புற நல்வாழ்வு மையங்கள் மற்றும் மாநகராட்சியின் 5 மண்டலங்கள் மற்றும் பிரதான அலுவலகத்தில் (MLN) டிஜிட்டல் ஆப்டிகல் நெட்வொர்க் தளம் மற்றும் உட்கட்டமைப்பு பணிகள் ரூ.3.85 கோடியில் நடைபெற்று வருகிறது.



கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட 60–சிக்னல்கள், 716–முக்கிய பகுதிகள் மற்றும் கோயம்புத்தூர் மாநகர காவல்துறை அலுவலகங்களில் டிஜிட்டல் ஆப்டிகல் நெட்வொர்க் தளம் மற்றும் உட்கட்டமைப்பு பணிகள் ரூ.6.75 கோடியில் நடைபெற்று வருகிறது.

2025–2026–ம் ஆண்டில் நமக்கு நாமே" திட்டத்தின் கீழ் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.52 கோடியில் அரசின் பங்களிப்பாக ரூ.1.95 கோடியும் மற்றும் தனியார் பங்களிப்பாக ரூ.1.56 கோடியில் மொத்தம் 16 பணிகள் எடுக்கப்பட்டு 12 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 4 பணிகள் நடைபெற்று வருகிறது. வரும் நிதியாண்டில் அரசின் நிதி ஒதுக்கீட்டிற்க்கு ஏற்ப தனியார் பங்களிப்பு தொகை திரட்டப்பட்டு முக்கியமான பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 12. நீர் நிலைகளை பராமரித்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள 9 குளங்களில் கழிவு நீர் கலப்பதை தடுக்க 8 இடங்களில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. சமீபத்திய ஆய்வில் மேலும் 4 (குறிச்சி குளம், சிங்காநல்லூர் குளம், வாலாங்குளம், பெரியகுளம்) இடங்களில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டியுள்ளது. இதற்கான தோராய செலவினம் ரூ. 20.00 கோடிக்கு பணிகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், மேற்கு மண்டலத்தில் வார்டு எண்.38க்குட்பட்ட சுப்பிரமணிய நகர், வார்டு எண்.39க்குட்பட்ட கீர்த்தி நகர் மற்றும் வார்டு எண்.41 க்குட்பட்ட மடத்தூர் குட்டை ஆகிய நீர் நிலைகளை புனரமைத்தல் பணிகளுக்கு ரூ.4.35 கோடி மதிப்பீட்டில், வரும் நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படும். தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குறிச்சி குளம் மேற்கு மற்றும் தெற்கு கரையோற பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த கம்பிவேலிகள் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் பாதுகாப்பு கருதி கம்பிவேலியுடன்

கூடிய சுற்றுச்சுவர் அமைக்க ரூபாய் 1.82 கோடியும் மற்றும் சுண்டக்காமுத்தூர் குளத்திற்கு செங்குளம் செல்லும் வாய்காலிலிருந்து மழைகாலங்களில் உபரிநீரை சுண்டக்காமுத்தூர் குளத்திற்கு எடுத்துச்செல்ல கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. வடக்கு மண்டலம் வார்டு எண்.12-க்குட்பட்ட பள்ள வாய்க்காலில் உடையாம்பாளையம் கந்தசாமி நகர் முதல் வயல் தோட்டம் வரை 600 மீட்டர் நீளத்தில் இருபுறமும் தடுப்பு சுவர் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். மேலும் மேற்கண்ட குளத்தின் கரையை பலப்படுத்தி பசுமைபரப்பு ஏற்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு ரூ.2.00 கோடியும்,, ஆக மொத்தம் ரூ.31.17 கோடி மதிப்பீட்டிற்கு அரசு நிதி ஒதுக்கீடு பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 13. நொய்யல் ஆற்றினை மேம்படுத்துதல்

கோயம்புத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட மேற்கு தொடர்ச்சி மலையில் கோவை குற்றாலத்தில் துவங்கும் நொய்யல் ஆறு திருப்பூர், ஈரோடு, கரூர், திருச்சி ஆகிய மாவட்டங்கள் வழியாக 158.35 கி.மீ நீளத்திற்கு சென்று நொய்யல் என்னும் கிராமத்தில் காவேரி ஆற்றுடன் கலக்கிறது. மேற்கண்ட ஆறு கோவை மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 67.71 கி.மீ நீளத்திற்கும், கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நொய்யல் ஆறு பேரூர் செட்டிபாளையம் முதல் மேற்கிலிருந்து கிழக்காக பட்டணம் இட்டேரி சாலை வரை 18.56 கி.மீ நீளத்திற்கு அமைந்துள்ளது. இவற்றில் தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் 9.25 கி.மீ நீளத்திற்கும், மத்திய மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் 5.00 கி.மீ நீளத்திற்கு மற்றும் கிழக்கு மண்டலத்திற் குட்பட்ட பகுதியில் 4.31 கி.மீ நீளத்திற்கும் மேற்கண்ட ஆறு அமைந்துள்ளது.



மேலும், இந்நொய்யல் ஆற்றின் கரையில் அருகாமையில் உள்ள குடியிருப்பு பகுதியிலிருந்து வரும் கழிவு நீர் கலப்பதால், ஆற்று நீர் மாசடைந்து வருகிறது. இதனை தடுக்கும் வகையில் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 18.56 கி.மீ நீளத்திற்கு நொய்யல் ஆற்றில் மாசு குறைப்பு பணிகள் மற்றும் ஆத்துப்பாலம் சந்திப்பு முதல் நஞ்சுண்டாபுரம் சந்திப்பு வரை 4.30 கி.மீ நீளத்திற்கு ஆற்றின் இரு கரைகளிலும் ரூ.178.48 கோடி மதிப்பீட்டில் பல்வேறு மேம்பாட்டு பணிகள் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு கட்டமைப்புகள் மேற்கொள்வதற்காக அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும், இந்த மேம்பாட்டு பணிகளின் கீழ் கழிவுநீர் கலப்பதை தடுத்தல் மற்றும் 10.80 கி.மீ நீளத்திற்கு அருகிலுள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு கழிவுநீர் கொண்டு செல்லுதல் (I&D), கல்லாமேடு, என்.பி.இட்டேரி, பட்டணம் சாலை ஆகிய 3 இடங்களில் கழிவுநீர் உந்து நிலையம் அமைத்தல், 5.205 கி.மீ நீளத்திற்கு கழிவுநீர் எடுத்து செல்லும் பிரதான குழாய் அமைத்தல், முத்து காலனி பகுதியில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 4.00 MLD சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல். வார்டு எண். 95–என்.பி. இட்டேரி UHC அருகில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 3.00 MLD சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், பெருமாள் கோவில் தெரு அருகில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 3.00 MLD சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

மேலும், ஆத்துப்பாலம் சந்திப்பு முதல் நஞ்சுண்டாபுரம் சந்திப்பு வரை 4.30 கி.மீ நீளத்திற்கு நொய்யல் ஆற்றின் கரை மேம்பாட்டு பணிகளான நொய்யல் ஆற்றின் நுழைவுவாயில் பகுதியில் 7மீ x 6மீ அளவில் வளைவு அமைத்தல், 4 எண்ணிக்கையிலான இழுவை அமைப்புகள் (Tensile Structures), ஆற்றின் கரையோரத்தில் 60461 சதுர மீட்டர் நீளத்திற்கு ஜியோ–செல் அமைப்பு அமைத்தல்,

ஆற்றின் கரையோரத்தில் 1950 மீட்டர் நீளத்திற்கு படிக்கட்டு வடிவ காபியன் சுவர் அமைத்தல், கரையோரம் 2380 சதுர மீட்டர் பரப்பளவு மற்றும் பாலத்தில் தாங்கு சுவரில் காபியன் கல் பதித்தல் பணி, 11 எண்ணிக்கையிலான மரம் மற்றும் 50 எண்ணிக்கையிலான கற்களாலான அமர்விடங்கள் அமைத்தல், படிநிலை அமர்விடங்கள் மற்றும் தோட்ட அமைப்பு 250 ச.மீ பரப்பளவில் அமைத்தல், 1270 மீட்டர் நீளத்திற்கு தடுப்பு சுவர் அமைத்தல், 660 மீட்டர் நீளத்திற்கு கருங்கல் சுவர் அமைத்தல், 600 மீட்டர் நீளத்திற்கு மிதிவண்டி பாதை மற்றும் நடைபாதை அமைத்தல், 4 எண்ணிக்கையில் மிதிவண்டி நிலையங்கள் அமைத்தல், 115x2.4 மீ ஆற்று படித்துறை அமைத்தல் (அணைக்கு அருகில்), 50 x 10 மீ ஆற்று படித்துறை அமைத்தல் (இட்டேரி பகுதியில் அமைந்துள்ளது), 4 இடங்களில் 420 மீட்டர் நீளத்தில், குப்பைத் தடுப்பு மிதவை அமைப்புகள் (Trash Booms) அமைத்தல், 550 ச.மீ பரப்பளவில் பார்வை மேடை (Viewing Deck) அமைத்தல், ஆற்றங்கரையில் 307 எண்ணிக்கையிலான சூரிய ஆற்றல் விளக்குகள் அமைத்தல், 8 எண்ணிக்கையில் சூரிய ஆற்றல் மர விளக்குகள் (Solar Trees) அமைத்தல், 160 எண்ணிக்கையில் பாதுகாப்புத் தூண்கள் (Bollards) அமைத்தல், 3717 ச.மீ பரப்பளவில் ஓய்வு பகுதி (Leisure Space) அமைத்தல், ஆற்றங் கரையில் 11.75கி.மீ நீளத்திற்கு வேலி அமைத்தல், 8 எண்ணிக்கையில் சுழலும் கதவுகள் (Revolving Gate) அமைத்தல், 25 மீ நீளம் மற்றும் 45 மீ நீளத்திற்கு 2 எண்ணிக்கையில் இரும்பு பாலம் அமைத்தல், 2 எண்ணிக்கையில் சிறு பாலங்கள் அமைத்தல், மேலும், நொய்யல் ஆற்றங்கரையில் ஆசாத் நகர், ராஜீவ் காந்தி நகர், வெள்ளலூர், போத்தனூர் ஆகிய 4 இடங்களில் பூங்காக்கள் அமைத்தல், 55 எண்ணிக்கையில் குப்பை சேகரிப்பு தொட்டிகள் அமைத்தல், 30 எண்ணிக்கையில் திட்ட விளக்க தகவல் பலகைகள் (Interpretative Signage Boards) அமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. மேலும் மேம்பாட்டு பணிகள் முடிக்கப்பட்டு பின்பு 5 வருட காலத்திற்கு ரூ.24.26 கோடி மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

இதன் மொத்த மதிப்பீடு ரூ.202.74 கோடி ஆகும். உரிய அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளபடவுள்ளது.

வரும் நிதியாண்டில் நொய்யல் ஆற்றின் ஆத்துப்பாலம் முதல் நஞ்சுண்டாபுரம் சாலை வரை உள்ள 4.30 கி.மீ நீளம் போக விடுபட்ட பகுதிகளை புனரமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரித்து உரிய அரசு நிதி உதவி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 14. முனிசிபல் பத்திரம் (Municipal Bond)

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்தில் பாதாள சாக்கடை பணி மற்றும் செம்மொழி பூங்கா பணி ஆகிய பணிகளுக்குண்டான மாநகராட்சியின் பொது நிதி பங்களிப்பான ரூ.150.85 கோடியினை முனிசிபல் பத்திரங்கள் மூலம் நிதி உதவி பெற்று பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தொகையும் பெறப்பட்டது.

மேற்கண்ட நடவடிக்கையினை ஊக்குவிக்கும் விதமாக மத்திய, மாநில அரசுகள் மானியம் வழங்குகின்றன. 100 கோடி ரூபாய் நிதி திரட்டினால் ரூ.13.00 கோடி மானியம் கிடைக்கும். முதல் கட்டமாக இம்மானியம் கிடைக்க உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்நிதியாண்டில் முக்கிய பணிகள் மேற்கொள்ள கடன் பத்திரங்கள் மூலம் நிதியுதவி திரட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



## 15. சுய உதவி குழுக்கள் மூலம் பூங்காக்கள் பராமரித்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள பூங்காக்களை சுய உதவி குழுக்கள் மூலம் பராமரிக்க முதற்கட்டமாக 11 எண்ணிக்கையிலான பூங்காக்கள் 2024–2025 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் இரண்டாம் கட்டமாக 10 எண்ணிக்கையிலான பூங்காக்கள் 2025–26 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் அம்ருத் மித்ரா திட்டத்தின் மூலம் அரசின் நிதி உதவி பெற்று இந்நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் அனைத்தும் வரும் நிதியாண்டிலும் சுய உதவி குழுக்கள் மூலமாக தொடர்ந்து பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் இந்நிதியாண்டில் கூடுதலாக பூங்காக்கள் சுய உதவி குழுக்கள் மூலம் பராமரிப்பு பணிகள் இத்திட்டத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 16. பராமரிப்பு பணிகள்

### அ) பிரதான அலுவலகம் மற்றும் மண்டலம்/வார்டு அலுவலக வளாகங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்

பிரதான அலுவலகத்தில் நூலகம், கழிப்பறை வசதிகளை மேம்படுத்துதல், அனைத்து பிரிவுகளிலும் கணிப்பொறி, நகல் எடுக்கும் இயந்திரம், கணினிகளுக்கு Anti–Virus கொண்டு பராமரித்தல், மேல் நிலை நீர் தேக்க தொட்டி அமைத்தல் மற்றும் அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ள ரூ. 1.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

மாநகராட்சிக்கு உட்பட்ட ஐந்து மண்டலங்கள் மற்றும் வார்டு அலுவலகங்களில் உள்ள கட்டிடங்களில் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### ஆ) இயக்குதல் மற்றும் பராமரித்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 5 மண்டலங்களில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி மற்றும் பள்ளிகளில் ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணியாளர்கள் மற்றும் காவலர்கள் ஒரு வருட காலத்திற்கு நியமனம் செய்து பராமரித்தல் பணிக்கு மொத்தம் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### இ) தெரு விளக்குகள் புதிதாக அமைத்தல் மற்றும் பராமரித்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மனைப்பிரிவுகள், மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளிலும் மற்றும் தெருவிளக்குகளில் உள்ள இடைவெளியினை சரிசெய்யும் பொருட்டு 3879 புதிய மின்விளக்குகள் 386 மின்கம்பத்துடன் கூடிய மின்விளக்குகள் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் அரசு நிதி பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

| வ.எண். | மண்டலம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கிழக்கு | 603 |
| 2 | வடக்கு | 957 |
| 3 | மேற்கு | 1082 |
| 4 | தெற்கு | 792 |
| 5 | மத்தியம் | 831 |
| | மொத்தம் | 4265 |

மாநகராட்சி பகுதியில் இரவு நேரங்களில் முக்கிய சாலை சந்திப்புகளில் நடைபாதை மற்றும் சாலை சந்திப்புகள் தெளிவாக தெரியும் படியும் விபத்துகளை குறைக்கும் வகையிலும் சாலை பாதுகாப்பு நடவடிக்கையாக கீழ்கண்ட இடங்களில் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் உயர் கோபுர மின்விளக்குகள் அமைக்க உரிய அரசு நிதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



| வ. எண் | மண்டலம் | இடம் |
|---|---|---|
| 1 | வடக்கு | 1. வடக்கு மண்டலம் வார்டு எண். 1–க்குட்பட்ட விஸ்வநாதபுரம் அப்பநாயக்கன் பாளையம் கலைஞர் நகர், ருக்கம்மாள் காலனி, ஆகிய இடங்களில் உயர் மின் கோபுர விளக்குகள் அமைத்தல்<br>2. வடக்கு மண்டலம் வார்டு எண். 12–க்குட்பட்ட காந்தி நகர் மற்றும் கந்தசாமி நகர் பகுதிகளில் உயர் கோபுர மின் விளக்குகள் அமைத்தல்<br>3. வார்டு எண். 15–க்குட்பட்ட சாய்ஸ்ரீ நகர் பகுதியில் அமைந்துள்ள மயானம் அருகில் உயர் கோபுர மின் விளக்குகள் அமைத்தல் |

| வ. எண் | மண்டலம் | இடம் |
|---|---|---|
| 2 | கிழக்கு | 1. வார்டு எண். 8-க்குட்பட்ட காளப்பட்டி சந்திப்பு<br>2. வார்டு எண். 9-க்குட்பட்ட விளாங்குறிச்சி சாலை சந்திப்பு<br>3. வார்டு எண். 23-க்குட்பட்ட சிட்ரா காளப்பட்டி சந்திப்பு<br>4. வார்டு எண். 24-க்குட்பட்ட கொடிசியா சந்திப்பு<br>5. வார்டு எண். 24-க்குட்பட்ட ஹோப் காலேஜ் சந்திப்பு<br>6. வார்டு எண். 24-க்குட்பட்ட டைடல் பார்க் சந்திப்பு<br>7. வார்டு எண். 24-க்குட்பட்ட S பென்ட் சந்திப்பு<br>8. வார்டு எண் .55 க்குட்பட்ட புது இட்டேரி சாலை சந்திப்பு<br>9. வார்டு எண். 60-க்குட்பட்ட உழவர் சந்தை சந்திப்பு<br>10. வார்டு எண். 60-க்குட்பட்ட பெர்க்ஸ் பள்ளி அருகில்<br>11. வார்டு எண். 60-க்குட்பட்ட ஜீவி ரெசிடென்சி சந்திப்பு<br>12. வார்டு எண். 60 -க்குட்பட்ட உப்பிலிபாளையம் சந்திப்பு<br>13. வார்டு எண். 61-க்குட்பட்ட சிங்காநல்லூர் பேருந்து நிலையம் சந்திப்பு<br>14. வார்டு எண். 61-க்குட்பட்ட கள்ளிமடை பள்ளி அருகில் |

| வ. எண் | மண்டலம் | இடம் |
|---|---|---|
| 3 | மேற்கு | 1. வார்டு எண்.36–க்குட்பட்ட வடவள்ளி சாலை மற்றும் இடையர்பாளையம் சாலை சந்திப்பு<br>2. வார்டு எண் .38–க்குட்பட்ட பொம்மணம்பாளையம் மற்றும் அஜ்ஜனூர் சந்திப்பு<br>3. வார்டு எண் .16–க்குட்பட்ட கே.என்.ஜி.புதூர் சந்திப்பு<br>4. வார்டு எண் .33–க்குட்பட்ட இடையர்பாளையம் சாலை மற்றும் கவுண்டம்பாளையம் சந்திப்பு<br>5. வார்டு எண் .37–க்குட்பட்ட மருதமலை சாலை நவாவூர் சந்திப்பு<br>6. வார்டு எண் .37–க்குட்பட்ட மருதமலை சாலை மௌத்தி மருத்துவமனை சந்திப்பு |

| வ. எண் | மண்டலம் | இடம் |
|---|---|---|
| 4 | தெற்கு | 1. வார்டு எண். 76–ல் தெலுங்குபாளையம் சந்திப்பு<br>2. வார்டு எண். 77–ல் சுப்பிரமணியம் உடையார் வீதி (மாசாணியம்மன் கோவில் அருகில் )<br>3. வார்டு எண். 86–ல் புல்லுக்காடு சோலார் பிளான்ட் சாலை<br>4. வார்டு எண். 87–ல் பாலக்காடு சாலை ஆத்துப்பாலம் நுளைவில்<br>5. வார்டு எண். 97–ல் மதுக்கரை சாலை பிள்ளையார்புரம் சந்திப்பு<br>6. வார்டு எண். 97–ல் மதுக்கரை சாலை கே.வி.கே. சந்திப்பு<br>7. வார்டு எண். 98–ல் பொள்ளாச்சி சாலை ஹவுசிங் யூனிட் பிரதான சாலை சாந்திப்பு (LIC காலனி)<br>8. வார்டு எண். 97–ல் மதுக்கரை பிரதான சாலை VSN கார்டன் சந்திப்பு (ரயில்வே மேம்பாலம் )<br>9. வார்டு எண். 99–ல் செட்டிபாளையம் சாலை ஈச்சனாரி சாலை சந்திப்பு (வெள்ளலூர் உரக்கிடங்கு சாலையின் எதிர்புறம்)<br>10. வார்டு எண். 79–ல் புட்டுவிக்கி சாலை கல்லாமேடு சாலை சந்திப்பு<br>11. வார்டு எண். 89–ல் புட்டுவிக்கி சாலை வையாபுரிபுதூர் சாலை<br>12. வார்டு எண். 89–ல் புட்டுவிக்கி சாலை பேரூர் குளக்கரை அருகில் (பேரூர் குளக்கரை சாலை செல்வபுரம் சாலை சந்திப்பு) |

| வ. எண் | மண்டலம் | இடம் |
|---|---|---|
| 5 | மத்தியம் | 1. வார்டு எண் 84.சுங்கம் பைபாஸ்<br>2. வார்டு எண் 83.சுங்கம் ரோடு , கோர்ட் ஜங்க்ஷன்<br>3. வார்டு எண் . 68 அழகேசன் ரோடு காந்திபுரம்<br>4. 7வது வீதி சந்திப்பு<br>5. ராதாகிருஷ்ணன் ரோடு ராஜு ரோடு சந்திப்பு<br>6. TNEB பவர் ஹவுஸ் சந்திப்பு<br>7. கிராஸ்கட் ரோடு கிழக்கு பவர் ஹவுஸ் ரோடு சந்திப்பு<br>8. வார்டு எண் . 69 பாரதி பார்க் 1வது வீதி மேட்டு பாளையம் ரோடு சந்திப்பு<br>9. அழகேசன் மெயின் ரோடு பாரதி பார்க் 4வது வீதி சந்திப்பு<br>10. பாரதி பார்க் 1வது வீதி ராஜா அண்ணாமலை ரோடு சந்திப்பு<br>11. அழகேசன் மெயின் ரோடு மேட்டுபாளையம் ரோடு சந்திப்பு<br>12. வார்டு எண் 81 உக்கடம் மற்றும் பேரூர் சாலை சந்திப்பு<br>13. வார்டு எண் 48 சக்தி ரோடு ராதாகிருஷ்ணன் சந்திப்பு<br>14. சக்தி ரோடு 100 அடி ரோடு சந்திப்பு |

| வ. எண் | மண்டலம் | இடம் |
|---|---|---|
| 5 | மத்தியம் | 15. சரோஜினி ரோடு மற்றும் சின்னசாமி சாலை சந்திப்பு<br>16. வார்டு எண். 67 வி கே கே மேனன் ரோடு மற்றும் பி கே ஆர் வீதி சந்திப்பு<br>17. வார்டு எண். 67 நஞ்சப்பா சாலை நூலகம்<br>18. வார்டு எண். 49 சின்னசாமி சாலை சங்கனூர் பாலத்திற்கு அருகில்<br>19. வார்டு எண் .31 சங்கனூர் ரோடு , ராஜிவ் காந்தி ரோடு விநாயகர் கோவில் சந்திப்பு மற்றும் சம்பத் வீதி சந்திப்பு<br>20. வார்டு எண். 32 கண்ணப்பர் நகர் சந்திப்பு<br>21. வார்டு எண். 47 பிளம் சாமி காலனி<br>22. வார்டு எண். 82 வி எச் ரோடு<br>23. வார்டு எண். 83 சுங்கம் சந்திப்பு |

### ஈ) தெருவிளக்கு பராமரித்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி ஐந்து மண்டலங்களிலும் உள்ள எரியாத தெருவிளக்குகளை உடனடியாக பழுதுகளை சரி செய்தல் மற்றும் சுவிட்ச் On/Off பணிகளை மேற்கொள்ளவும் தெருவிளக்குகளை பராமரிக்கவும் ரூ.12.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### 17. மழைநீர் வடிகால்களை தூர்வாருதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி ஐந்து மண்டலங்களில் உள்ள வார்டு பகுதிகளில் மழைக்காலங்களில் வெள்ளநீர் சாலைகளில் தேங்குவதை தடுக்கவும் தாழ்வான பகுதிகளில் மழைநீர் செல்வதை கட்டுபடுத்தவும் மழைநீர் வடிகால்களில் உள்ள குப்பை மற்றும் மண்களை ஒப்பந்தப்பணியாளர்கள் மூலம் அகற்ற ரூ.12.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### 18. மரக்கன்று நடுதல்

நகரின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முன்னிறுத்தி சென்ற ஆண்டு மரக்கன்றுகள் நடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு பூங்காக்கள், சாலையோர பகுதிகள் என சுமார் 150 இடங்களை பசுமை பகுதியாக மாற்ற ஒரு இலட்சம் மரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டுள்ளது.



## 19. மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலங்கள் திரும்பக் கட்டுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த மழைநீர் வடிகால்கள் மற்றும் சிறுபாலங்கள் ஆகியவற்றினை புதுப்பித்தல் பணிக்கு

★ கிழக்கு மண்டலத்தில் 5 எண்ணிக்கையிலான பணிகளுக்கு ரூ.1.15 கோடி,

★ வடக்கு மண்டலத்தில் 11 எண்ணிக்கையிலான பணிகளுக்கு ரூ.4.95 கோடி,

★ மத்திய மண்டலத்தில் 11 எண்ணிக்கையிலான பணிகளுக்கு ரூ.12.50 கோடி,

★ தெற்கு மண்டலத்தில் 6 எண்ணிக்கையிலான பணிகளுக்கு ரூ.7.50 கோடி.

★ மேற்கு மண்டலத்தில் 9 எண்ணிக்கையிலான பணிகளுக்கு ரூ.6.79 கோடி.

★ வடக்கு மண்டலம் வார்டு எண்.12-க்குட்பட்ட காந்திநகர் பிரதான சாலையில் மழைநீர் வடிகால் 250 மீட்டர் நீளத்தில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

ஆகமொத்தம் 42 எண்ணிக்கையிலான பணிகளை ரூ.33.19 கோடி மதிப்பீட்டில் இந்நிதியாண்டில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 20. கட்டட மேம்பாட்டுப்பணிகள்

கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலத்திற்குட்பட்ட 4 எண்ணிக்கையிலான நகர்ப்புற நல்வாழ்வு மையம் மற்றும் சுகாதார மையங்களுக்கு கூடுதல் மேம்பாட்டு பணிகள் ரூ.1.55 கோடி மதிப்பீட்டில் உரிய அரசு நிதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட 18 எண்ணிக்கையிலான நகர்புற நல்வாழ்வு மையம் மற்றும் சுகாதார மையங்களுக்கு கூடுதல் மேம்பாட்டு பணிகள் ரூ.3.05 கோடி மதிப்பீட்டில் உரிய அரசு நிதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும், வார்டு எண்.97–க்குட்பட்ட பிள்ளையார்புரம் பகுதியில் புதியதாக நகர்புற நல்வாழ்வு மையம் அமைக்க ரூ.0.30 கோடி மதிப்பீட்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட 6 (1. வார்டு எண்.22, அம்பாள் நகர், 2. வார்டு எண்.51–க்குட்பட்ட இந்திரா நகர், 3. வார்டு எண்.54, நீலிக்கோணம்பாளையம், 4. வார்டு எண்.57, சிங்காநல்லூர் நெசவாளர் காலனியில் 5.வார்டு எண்.61–க்குட்பட்ட கள்ளி மடை, 6. வார்டு எண்.61, சிங்காநல்லூர்) எண்ணிக்கையிலான நகர்புற நல்வாழ்வு மையம் மற்றும் சுகாதார மையங்களுக்கு கூடுதல் மேம்பாட்டு பணிகள் ரூ.2.63 கோடி மதிப்பீட்டில் உரிய அரசு நிதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்குட்பட்ட 9 எண்ணிக்கையிலான நகர்புற நல்வாழ்வு மையம் மற்றும் சுகாதார மையங்களுக்கு கூடுதல் மேம்பாட்டு பணிகள் ரூ.2.45 கோடி மதிப்பீட்டில் உரிய அரசு நிதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட 6 எண்ணிக்கையிலான (1. வார்டு எண்.20–க்குட்பட்ட கணபதி மாநகர் 4 வது பிளாக், 2 வார்டு எண்.26–க்குட்பட்ட பீளமேடு, 3. வார்டு எண்.26–க்குட்பட்ட விளாங்குறிச்சி, 4. வார்டு எண்.27–க்குட்பட்ட மாநகராட்சி பாரதி காலனி, 5. வார்டு எண்.26–க்குட்பட்ட விளாங்குறிச்சி) நகர்புற நல்வாழ்வு மையங்களுக்கு கூடுதல் மேம்பாட்டு பணிகள் ரூ.1.28 கோடி மதிப்பீட்டில் உரிய அரசு நிதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆக மொத்தம் 44 எண்ணிக்கையிலான நகர்புற நல்வாழ்வு மையங்களுக்கு கூடுதல் மேம்பாட்டு பணிகள் ரூ.11.26 கோடி மதிப்பீட்டில் உரிய அரசு நிதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### 21. குடிநீர் குழாய்களை பராமரித்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய்களில் ஏற்படும் கசிவுகளை சரிசெய்யவும், பழுதடைந்த குழாயினை மாற்றவும் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 22. குழந்தைகளுக்கான நம்ம சிறப்பு பூங்கா

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் மாற்றுத்திறன் மற்றும் சிறப்பு தேவையுள்ள குழந்தைகள் உடல், மன மற்றும் சமூக வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் விளையாடுவதற்கு சிறப்பு வடிவமைப்புடன் நம்ம சிறப்பு பூங்கா அமைக்கப்படவுள்ளது.

கிழக்கு மண்டலம் வார்டு எண்.52–க்குட்பட்ட பீளமேடு , மேற்கு மண்டலம் வார்டு எண்.36–க்குட்பட்ட முத்தம்மாள் அவென்யூ மற்றும் தெற்கு மண்டலம் வார்டு எண்.100–க்குட்பட்ட மேட்டூர் வடக்கு மண்டலம் வார்டு எண்.15–க்குட்பட்ட சாய்ஸ்ரீ கார்டன் ஆகிய 4 இடங்களில் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 23. குழந்தைகள் விளையாட்டு மைதானம்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் குழந்தைகளுக்கென பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் விளையாடுவதற்கு **குழந்தைகள் விளையாட்டு பூங்கா** அமைக்கப்படவுள்ளது.

கிழக்கு மண்டலம் வார்டு எண்.9–க்குட்பட்ட விளாங்குறிச்சி விளையாட்டு மைதானம், மேற்கு மண்டலம் வார்டு எண்.73–க்குட்பட்ட A.K.S. நகர் வார்டு எண். 38–க்குட்பட்ட ஐஓபி காலனி மற்றும் மத்திய மண்டலம் வார்டு எண்.31–க்குட்பட்ட காமராஜர்புரம் வடக்கு மண்டலம் வார்டு எண்.28–க்குட்பட்ட விஜி ராவ் நகர் தெற்கு மண்டலம் வார்டு எண்.94–க்குட்பட்ட செங்கப்பகோணார் நகர் ஆகிய 6 இடங்களில் மொத்தம் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 24. தெரு பெயர் பலகைகள் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி ஐந்து மண்டலங்களிலும் எந்த தெரு, எந்த பகுதி என்பதை மக்கள் எளிதில் அறியவும், புதியவர்களுக்கும், பயணிகளுக்கும் சரியான பாதையைத் தெரிந்து கொள்ளவும் வீடு, கடை, அலுவலக முகவரிகளை சரியாக குறிப்பிடவும் ஆம்புலன்ஸ், தீயணைப்பு, காவல் துறை போன்ற சேவைகள் விரைவாக இடத்தை அடையவும், வரிவிதிப்பு மற்றும் கட்டிட அனுமதி விண்ணப்பபிக்க, தெருக்களின் பெயர் பலகைகைள் இல்லாததால் பொது மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

எனவே மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் தெரு பெயர் பலகைகள் அமைக்கவும், மாநகர எல்லை பெயர் பலகைகள் அமைக்கவும் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 25. பேருந்து நிழற்குடை அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் சென்ற ஆண்டு 118 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகள் எடுக்கப்பட்டு 42 எண்ணிக்கையிலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. 76 எண்ணிக்கையிலான பணிகள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கூடுதலாக 3 மண்டலங்களிலும் 42 எண்ணிக்கை (மேற்கு–8, வடக்கு–12, தெற்கு–22) பேருந்து நிறுத்தங்களில் புதிய பேருந்து நிழற்குடை அமைத்தல் பணிக்கு ரூ.4.20 கோடி மதிப்பீட்டில் பெரு நிறுவனங்களின் சமூக பாதுகாப்பு நிதியில் இந்நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 26. புதியதாக வணிக வளாகம் கட்டுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி ஐந்து மண்டலங்களுக்குட்பட்ட கீழ்கண்ட 12 இடங்களில் மாநகராட்சியின் வருவாயினை பெருக்கும் வகையில் புதியதாக வணிக வளாகம் கட்டுதல் பணிக்கு ரூ.73.50 கோடி மதிப்பீட்டில் அரசு நிதி/பொது நிதி பெற்று ,இந்நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

| வ. எண் | மண்டலம் | இடம் | மதிப்பீட்டுத் தொகை ரூ.கோடியில் |
|---|---|---|---|
| 1 | தெற்கு | 1. தெற்கு மண்டல வார்டு எண் 86 ல் புல்லுக்காடு | 2.50 |
| | | 2. வார்டு எண். 96 ல் சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் பகுதியில் வாகன நிறுத்தும் இடமுடன் கூடிய வணிக வளாகம் | 5.00 |
| | | 3. வார்டு எண். 86 ல் உக்கடம் பகுதியில் ஒருங்கிணைந்த வணிக வளாகம் | 30.00 |
| | | 4. வார்டு எண். 78 செல்வபுரம் நார்த் ஹவுஸிங் யூனிட் பிரதான சாலை | 2.00 |
| 2 | கிழக்கு | 1. வார்டு எண். 61–க்குட்பட்ட திருச்சி சாலையில் கிழக்கு மண்டல வளாகத்தில் உள்ள பழுதடைந்த வணிக வளாக கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி புதிய வணிக வளாகம் | 5.00 |
| 3 | மேற்கு | 1. வார்டு எண். 37– க்குட்பட்ட ஆர் கே ஜி நகர் மருதமலைசாலை | 0.50 |
| | | 2. வார்டு எண். 45– க்குட்பட்ட எம் ஜி ஆர் மார்க்கெட் | 3.00 |
| | | 3. வார்டு எண். 33– க்குட்பட்ட உரக்கிடங்கு வளாக தக்காளி மார்க்கெட் | 1.50 |
| 4 | வடக்கு | 1. வார்டு எண் 01க்குட்பட்ட துடியலூர் வார சந்தை பகுதியில் வணிக வளாகம் மற்றும் வாகன நிறுத்துமிடம் | 15.00 |
| | | 2. வார்டு எண். 4 க்குட்பட்ட சரவணம்பட்டி பகுதியில் சத்தி சாலையில் உள்ள வணிக வளாகம் (முதல் தளம்) | 1.00 |
| 5 | மத்தியம் | 1. வார்டு எண் 47 க்குட்பட்ட முத்து குமார் நகர் பகுதி. | 1.00 |
| | | 2. வார்டு எண். 83. உப்பிலிபாளையம் மாநகராட்சி வணிக வளாகம் | 4.00 |
| | | 3. வார்டு எண் .67 பட்டேல் சாலை | 5.00 |

### 27. சமுதாயக் கூடம் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண். 57-க்குட்பட்ட நெசவாளர் காலனி காமராஜர் நகர் பகுதியில் ரூ.1.00 கோடி மற்றும் தெற்கு மண்டலம் வார்டு எண். 85-க்குட்ப்பட்ட காந்திஜீ சாலை கருணாநிதி நகர் பகுதியில் ரூ 1.00 கோடி ஆக மொத்தம் இரண்டு சமுதாயக் கூடங்கள் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் உரிய அரசு நிதி பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.




### 28. STEM பூங்காவில் அறிவியல் சார்ந்த வகையில் கூடுதல் மேம்பாடு

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 10 பூந்தோட்டம் நகரில் உள்ள அறிவியல் தொழில்நுட்ப பொறியியல் கணிதப்பூங்கா (STEM) அறிவியல் சார்ந்த வகையில் கூடுதல் மேம்பாட்டிற்காக ரூ.0.15 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 29. மூங்கில் பூங்கா விரிவாக்கம்

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டல வார்டு எண். 55–க்குட்பட்ட காவேரி நகர் பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டு வரும் மூங்கில் பூங்கா விரிவாக்கம் செய்து கூடுதலாக உடற்பயிற்சி கூடம் மற்றும் குழந்தைகள் பூங்கா பணிகள் மேற்கொள்ள ரூ.3.00 கோடி மதிபீட்டில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 30. பறவைகள் பூங்கா

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.83–க்குட்பட்ட வ.உ.சி. பூங்கா வளாகத்தில், பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பறவைகளை நெருக்கமாக அறிந்து ரசிக்கும் வகையில், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய தனித்துவமான பறவைகள் கண்காட்சி வளாகம் அமைக்கவும், பல்வேறு இனப்பறவைகள் பாதுகாப்பான சூழ்நிலையில் வளர்க்கப்பட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை விழிப்புணர்வை பொதுமக்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படுத்தும் வகையில் பறவைகள் பூங்கா ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் அரசு நிதி மற்றும் தனியார் பங்களிப்புடன் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



### 31. நாய்கள் கருத்தடை மற்றும் பாதுகாப்பு மையம் (ABC)

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு, மேற்கு, மற்றும் வடக்கு மண்டலங்களில் நாய்கள் கருத்தடை மற்றும் பாதுகாப்பு மையம் மூன்று இடங்களில் மொத்தம் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் உரிய அரசு நிதி பெற்று அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் மேலும் வெள்ளலூர் உரக்கிடங்கு வளாகத்தில் தெருநாய்களை பராமரிக்க நவீன பாதுகாப்புடன் கூடிய உட்கட்டமைப்பு எற்படுத்த ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் உரிய அரசு நிதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஏற்கனவே உள்ள நாய்கள் கருத்தடை மற்றும் பாதுகாப்பு மையம் (Animal Birth Control) மையத்தினை இயக்கி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### 32. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள 250 எண்ணிக்கையிலான பழுதடைந்த போர்வெல் மற்றும் கிணறுகளில் மழைநீர் சேகரிக்கும் தொட்டிகள் அமைக்கவும், அலுவலக கட்டடங்கள், பள்ளிகள், மழைக்காலங்களில் மழை நீர் தேங்கும் இடங்கள் மற்றும் வணிக வளாக பகுதிகளில் மழை நீர் தேங்கா வண்ணம் மழைநீர் சேகரிக்கும் தொட்டிகள் அமைக்கவும் ரூ. 20.00 கோடிக்கு உரிய அரசு நிதி பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



### 33. பணி நிலையம் (Work Station) அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலங்களில் அரசு திட்டங்கள் தொடர்பான பணிகள், தேர்தல் நேரப்பணிகள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான பிற துறை ஒருங்கிணைப்பு தொடர்பான பணிகள் மற்றும் செயல் விளக்கக் கூட்டங்கள் நடத்த கிழக்கு மண்டலம் வார்டு எண்.61-க்குட்பட்ட மண்டல அலுலவக வளாகம், மேற்கு மண்டலம் வார்டு எண்.39-க்குட்பட்ட வேம்பு அவென்யூ, வடக்கு மண்டலம் வார்டு எண்.2-க்குட்பட்ட சந்தைப்பேட்டை அருகில் உள்ள மாநகராட்சி காலியிடம் மற்றும் மத்திய மண்டலம் வார்டு எண்.83-க்குட்பட்ட நஞ்சப்பா சாலை ஆகிய 4 பகுதிகளில் பணி நிலையங்கள் அமைக்க மொத்தம் ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### 34. நீச்சல் குளம் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் காளப்பட்டி பகுதி, மேற்கு மண்டலம் வார்டு எண்.33-க்குட்பட்ட பிரபு நகர் பகுதி, வடக்கு மண்டலம் வார்டு எண். 10-க்குட்பட்ட சரவணம்பட்டி மற்றும் தெற்கு மண்டலம் வார்டு எண்.93-க்குட்பட்ட தென்றல் நகர் பகுதி ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் நான்கு நீச்சல் குளங்கள் ரூ.16.00 கோடி மதிப்பீட்டில் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 35. சந்தை அமைத்தல்

★ கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டல வார்டு எண். 61–க்குட்பட்ட சிங்காநல்லூரில் ஆனையங்காடு பிரதான சாலையில் அமைந்துள்ள வாரசந்தையை ரூ.2.00 கோடி மதிப்பீட்டிலும்,

★ வடக்கு மண்டலத்துக்குட்பட்ட பகுதியில் துடியலூர் மார்க்கெட் வார சந்தை கட்டுதல் ரூ.35.00 கோடி மதிப்பீட்டிலும்,

★ மத்திய மண்டலத்துக்குட்பட்ட மூன்று இடங்களில் (டி.கே. மார்க்கெட், ராமர் கோவில் மார்க்கெட், 8 நம்பர் மார்க்கெட்) தினசரி சந்தை கட்டுதல் ரூ.75.00 கோடி மதிப்பீட்டிலும்,

★ மேற்கு மண்டலம் வார்டு எண்.71–க்குட்பட்ட வாழைக்காய் மண்டியில் ரூ.1.00 கோடி மதிப்பீட்டிலும்,

ஆக மொத்தம் 6 எண்ணிக்கையிலான சந்தைகள் ரூ.113.00 கோடி மதிப்பீட்டில் அரசு நிதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்கு மண்டலத்திற்குட்பட்ட எம்.ஜி.ஆர். மார்க்கெட் விரிவாக்கம் மற்றும் புதியதாக தக்காளி மார்க்கெட் அமைத்தல் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 36. புதிய நூலகம் அமைத்தல்

பொதுமக்கள், மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் அறிவைப் பெறவும், வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்தவும், அமைதியான சூழலில் புத்தகங்கள், பத்திரிக்கைகள், மின்னணு வளங்கள் ஆகியவற்றை பயன்படுத்தும் வசதியுடன் நூலகம் அமைக்கப்படும்.

- ★ கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண்.55–க்குட்பட்ட SIHS காலனி பகுதி,
- ★ மத்திய மண்டலம் வார்டு எண்.47–க்குட்பட்ட முத்துக்குமார் நகர் பகுதி,
- ★ வடக்கு மண்டலம் வார்டு எண்.13–க்குட்பட்ட உடையாம்பாளையம் சாலை நட்சத்திரா நகர் சந்திப்பில் உள்ள காலியிடத்தில்,
- ★ மேற்கு மண்டலம் வார்டு எண்.40–க்குட்பட்ட ராஜயோகா நகர் பகுதி மற்றும் தெற்கு மண்டலம் வார்டு எண்.98–க்குட்பட்ட சாய் நகர் பகுதி தலா ஒன்று என மொத்தம் 5 எண்ணிக்கையிலான புதிய நூலகங்கள் ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் அமைக்க உரிய அரசு நிதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 37. மயானம் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்தில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் ஏழு மயானங்களும் (கவுண்டம்பாளையம் பகுதி, வீரகேரளம் பகுதி மற்றும் வடவள்ளி பகுதி),

- ★ தெற்கு மண்டலத்தில் ஏழு மயானங்கள் அமைக்க (வார்டு எண்.79–க்குட்ட சுண்டக்காமுத்தூர் பிரதானசாலை (கல்லாமேடு), வார்டு எண்.77 சொக்கம்புதூர், வார்டு எண்.86 ஆத்துப்பாலம், வார்டு எண்.87 குனியமுத்தூர், வார்டு எண்.100 செட்டிபாளையம் சாலை, வார்டு எண்.96 காந்திஜி சாலை, வார்டு எண்.94 கோகுலபுரம்) ரூ.3.32 கோடி மதிப்பீட்டிலும்,

- ★ கிழக்கு மண்டலத்தில் மூன்று மயானங்கள் அமைக்க (வார்டு எண்.7 ஆர்.ஜி. புதூர், வார்டு எண்.57–நெசவாளர் காலனி, வார்டு எண்.58–திருச்சி சாலை) ரூ.1.55 கோடி மதிப்பீட்டிலும்,

- ★ வடக்கு மண்டலம் வார்டு எண்.19–க்குட்பட்ட மணியகாரன்பாளையம் பகுதி மயானம் ரூ.0.14 கோடி மதிப்பீட்டிலும்,

- ★ மத்திய மண்டலத்திற்குட்பட்ட ஜெயபிரகாஷ் நகர், சங்கனூர் மயானம், சத்தி சாலை மயானம் மேம்பாடு செய்தல் பணி ரூ.1.50 கோடி மதிப்பீட்டிலும்,

ஆக மொத்தம் 17 எண்ணிக்கையிலான மயானங்கள் ரூ.9.01 கோடி மதிப்பீட்டில் உரிய அரசு நிதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 38. புதிய வாகனங்கள்

கோயம்புத்தூர் மாநகராட்சியின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு கூடுதலாக ஐந்து மண்டலங்களிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்காக 200 எண்ணிக்கையிலான வாகனங்கள் வாங்கப்படவுள்ளது, மேலும் பாதாள சாக்கடை மற்றும் ஈப்பு தொடர்பான பணிகளுக்கு சுமார் 39 வாகனங்கள் (ஜெட்ராடிங் வாகனம், மினி ஜெட்ராடிங் வாகனம், தண்ணீர் லாரி, கழிவுநீர் உருஞ்சும் வாகனம், ஜீப், நாய்கள் கொண்டு செல்லும் வாகனம்) ஆகியவை ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் உரிய அரசு நிதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 39. விளையாட்டு மைதானம்

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண்.50-க்குட்பட்ட உடையாம்பாளையம் மற்றும் வார்டு எண்.55-க்குட்பட்ட SIHS காலனி பகுதியில் கூடைப்பந்து மைதானம் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி அனைத்து மண்டலங்களில் இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் மண்டலத்திற்கு 1 வீதம் கபடி மைதானம் ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கு மண்டலம் சாஸ்திரி மைதானத்தில் ரூ. 1.00 கோடி மதிப்பீட்டில் கூடுதல் மேம்பாட்டு பணியும் மற்றும் ஹாக்கி விளையாட்டு மைதானத்தில் ரூ.18.00 கோடி மதிப்பீட்டில் பார்வையாளர் அரங்கம் மற்றும் மேம்பாட்டு பணிகள் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்த இந்நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



## 40. பாரா ஒலிம்பிக் பல்–விளையாட்டு வளாகம் கூடுதல் அபிவிருத்தி பணி (கட்டம் II)

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.33–க்குட்பட்ட மாநகராட்சி காலியிடத்தில் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் பாரா ஒலிம்பிக் பல்–விளையாட்டு வளாகம், கட்டம் 1 பணி ரூ.9.99 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது இப்பணி விரைவில் துவங்கப்பட உள்ளது.

மேலும் கூடுதலாக இந்நிதியாண்டில் பாரா ஒலிம்பிக் விளையாட்டு அரங்கத்தில் கூடுதல் அபிவிருத்தி பணிகளான வெளிப்புற விளையாட்டு பார்வையாளர் கூடம், வெளிப்புற விளையாட்டு மைதானம், வளாகச் சுற்றுச்சுவர் மற்றும் பயன்பாட்டு கட்டிடம் (Utility Building) ஆகிய கூடுதல் வசதிகளை ஏற்படுத்துவது அவசியமாக கருதப்படுகிறது. மேற்கண்ட கூடுதல் பணிகளை நிறைவேற்ற ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்த இந்நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



41. ஸ்பான்ச் பார்க்

ஸ்பாஞ்ச் பார்க் என்பது மழைநீரை சேகரித்து, நிலத்திற்குள் ஊடுருவச் செய்து, வெள்ளத்தை குறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் நட்பு பூங்கா ஆகும். நகர்ப்புறங்களில் நீர் மேலாண்மை மற்றும் பசுமை பாதுகாப்பை ஒருங்கிணைக்கும் சிறந்த தீர்வாக இது செயல்படுகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண்.22–க்குட்பட்ட விஜபி நகர், மேற்கு மண்டலம் வார்டு எண்.16–க்குட்பட்ட மருதா நகர், தெற்கு மண்டலம் வார்டு எண்.87–க்குட்பட்ட பிருந்தாவன் சர்க்கிள், தெற்கு மற்றும் வார்டு எண்.88–க்குட்பட்ட வெற்றித்திரு நகர், மத்திய மண்டலம் வார்டு எண்.49–க்குட்பட்ட காட்டூர் சாலை, வடக்கு மண்டலம் வார்டு எண்.3–க்குட்பட்ட ரமணீஸ் மயூரி பூங்கா, வார்டு எண்.3 மற்றும் வார்டு எண்.4 நமச்சிவாய நகர் சரவணம்பட்டி, ஆகிய ஏழு இடங்களில் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் ஸ்பான்ச் பார்க் அமைக்க உரிய அரசு நிதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

42. சாலை பாதுகாப்பு பூங்கா

சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பூங்கா என்பது பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் வாகன ஓட்டுநர்கள் அனைவருக்கும் சாலை விதிமுறைகள், போக்குவரத்து ஒழுங்குகள் மற்றும் பாதுகாப்பான பயணம் குறித்து நடைமுறை அனுபவத்துடன் கற்றுத்தரும் வகையில் அமைக்கப்படும் சிறப்பு பூங்காவாகும்.



கோயம்புத்தூர் மாநகராட்சி செம்மொழிப்பூங்கா வளாகத்தில் போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பூங்கா அமைக்க உரிய அரசு நிதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 43. நடைபாதை

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் நஞ்சப்பா சாலை, ஆபிசர்ஸ் கிளப் சாலை, அரசு கலைக்கல்லூரி சாலை, ஸ்டேட் பேங்க் சாலை – 3.50 கிமீ, தெற்கு மண்டலம் போத்தனூர் பிரதான சாலை, பேரூர் பிரதான சாலை, தெலுங்குபாளையம் பிரதான சாலை, பாலக்காடு சாலை – 8.00 கிமீ, கிழக்கு மண்டலம் கொடிசியா சாலை, சிங்காநல்லூர் காமராஜர் சாலை, ஃபன்மால் சாலை, ஹோப்காலேஜ், – 6.00 கிமீ, மேற்கு மண்டலம் கவுண்டம்பாளையம் சாலை, காந்திபார்க் சாலை, மேட்டுப்பாளையம் சாலை, மற்றும் தடாகம் சாலை – 5.00 கிமீ, வடக்கு மண்டலம் காந்திமாநகர், நவஇந்தியா சாலை, பயனீர் மில் சாலை, கேஎன்ஜி புதூர் சாலை, – 3.60 கிமீ ஆக மொத்தம் 26.10 கிமீ நீளத்திற்கு பிரதான சாலைகளில் உள்ள வடிகால்களின் மேல் சாலையோரங்களில் பாதசாரிகள் பாதுகாப்பாக நடந்து செல்ல பயன்படுத்தும் வகையில் நடைபாதை அமைக்க ரூ.60.00 கோடி மதிப்பீட்டில் உரிய அரசு சிறப்பு நிதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



### 44. மின்வாகன சார்ஜ் நிலையம்

மின்சார வாகனங்களின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், EV சார்ஜிங் நிலையங்கள் மிக முக்கியமான அடிப்படை வசதியாக மாறியுள்ளது. சுற்றுச்சூழல் மாசு குறைப்பு, எரிபொருள் செலவு சேமிப்பு மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவற்றை ஆதரிக்க EV சார்ஜிங் நிலையங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நகரப்பகுதிகள், நெடுஞ்சாலைகள், பார்க்கிங் பகுதிகளில் இந்நிலையங்களை அமைப்பது மக்கள் மின்சார வாகனங்களை எளிதில் பயன்படுத்த உதவுகிறது. எதிர்காலத்தில் மின்சார போக்குவரத்து வளர்ச்சிக்கு EV சார்ஜிங் நிலையங்கள் அவசியமான அடித்தளமாக இருக்கும்.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் வருவாயினை பெருக்கும் வகையில் முதற்கட்டமாக 25 எண்ணிக்கைகள் மின்சார சார்ஜ் நிலையம் அமைக்க ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் அமைக்கப்படும்.

### 45. போக்குவரத்து தீவு (Traffic Island)

போக்குவரத்து தீவு என்பது சாலைகளில் வாகனங்களின் இயக்கத்தை ஒழுங்குபடுத்தவும், பாதுகாப்பை மேம்படுத்தவும் அமைக்கப்படும் உயர்ந்த அல்லது பிரிக்கப்பட்ட பகுதி ஆகும். இது பொதுவாக சந்திப்புகள், வளைவுகள் மற்றும் அதிக போக்குவரத்து உள்ள இடங்களில் அமைக்கப்படுகிறது. போக்குவரத்து தீவுகள் விபத்துகளை குறைத்து, போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தி, சாலையின் ஒழுங்கை மேம்படுத்துகின்றன.



கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.32–க்குட்பட்ட சங்கனூர் பிரதான சாலை மற்றும் கண்ணப்பா நகர் சந்திப்பு, வார்டு எண்.49 புதிய திட்ட சாலை மற்றும் பாரதியார் சாலை சந்திப்பு, வார்டு எண்.82–க்குட்பட்ட உக்கடம் பேருந்து நிலையம்,

- ★ கிழக்கு மண்டலம் வார்டு எண்.24 க்குட்பட்ட தண்ணீர் பந்தல் சாலையில் S Bend பகுதியில்,
- ★ மேற்கு மண்டலம் வார்டு எண்.35க்குட்பட்ட இடையர்பாளையம் சந்திப்பு,
- ★ வடக்கு மண்டலம் வார்டு எண்.19–க்குட்பட்ட சத்தி சாலை சூர்யா மருத்துவமனை, வார்டு எண். 12–க்குட்பட்ட தாகூர் வீதி அத்திபாளையம் சந்திப்பு, வார்டு எண். 20–க்குட்பட்ட விளாங்குறிச்சி சாலை புதிய எம்.எஸ்.ஆர். சந்திப்பு,
- ★ தெற்கு மண்டலம் பொள்ளாச்சி பிரதான சாலை, சந்திப்பு மற்றும் சாரதா மில் சாலை சந்திப்பு, பேரூர் சாலை செல்வபுரம் சந்திப்பு, புட்டுவிக்கி சாலை பேரூர் சாலை சந்திப்பு, ஆகிய பகுதிகளில் உள்ள பிரதான சாலை சந்திப்புகளில் சீரான போக்குவரத்தினை கருத்தில் கொண்டு தேவைப்படும் இடங்களில் போக்குவரத்து தீவு (Traffic Island) ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 46. இறைச்சி கூடம்

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வெள்ளலூர் பகுதியில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்துள்ள இறைச்சிக் கூடம் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் புதியதாக நவீன முறையில் கட்டுவதற்கும், உக்கடம் பகுதியில் ரூ.2.00 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் மத்திய மண்டலத்திற்குட்பட்ட சக்தி சாலை பகுதியில் அமைந்துள்ள இறைச்சிக் கூடம் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளவும். மொத்தம் மூன்று பணிகள் ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் உரிய அரசு நிதி பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 47. நீர்நிலைகள் மேம்பாடு

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குனியமுத்தூர் பகுதியில் 586.00 ஏக்கர் பரப்பளவில் செங்குளம் அமைந்துள்ளது. இக்குளத்தின் கரையை பலப்படுத்தி மேற்கூரையுடன் கூடிய மிதிவண்டி பாதை, நடைபாதை, குழந்தைகள் விளையாடும் இடம், திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் மற்றும் கரைப் பகுதிகளில் பசுமை பரப்பு ஆகிய பணிகள் மேற்கொள்ள ரூ. 50.00 கோடியில் அரசு நிதி உதவி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட செல்வசிந்தாமணி குளத்தில் இருந்து வெளியேறும் சுத்திகரிக்கப்பட்ட அபரிமிதமான உபரி நீரை 2.20 கி.மீ. நீளத்திற்கு ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் குழாய் அமைத்து வாலாங்குளத்தில் இணைத்தல் பணி இந்நிதியாண்டில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.15–க்குட்பட்ட கே.என்.ஜி புதூர் கார குட்டையை நீர்நிலையாக மாற்றி மேம்படுத்துதல் மற்றும் நடைபாதை, மின்கம்பங்கள் அமைத்தல் பணிக்கு ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

### 48. மையத் திட்டு (Centre Median) அமைத்தல்

மத்திய பிரிப்பு பகுதி அல்லது 'சென்டர் மீடியன்' என்பது சாலையின் நடுப்பகுதியில் அமைக்கப்படும் பிரிப்பு அமைப்பாகும். இது இரு திசைகளில் செல்லும் வாகன போக்குவரத்தைப் பிரித்து, பாதுகாப்பான மற்றும் ஒழுங்கான இயக்கத்தை உறுதி செய்ய உதவுகிறது. இதனால் போக்குவரத்து ஒழுங்கு மேம்பட்டு, சாலை பாதுகாப்பு அதிகரிக்கிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம், பொள்ளாச்சி பிரதான சாலை ரத்தினம் கல்லூரி முதல் ஈச்சனாரி வரை மையதிட்டு அமைத்து பூங்கா அமைக்கும் பணிக்கு ரூ. 2.50 கோடி மதிப்பீட்டிலும்,



வடக்கு மண்டலம் சத்தி சாலை சிஎம்எஸ் பள்ளி முதல் புரோஜோன் மால் வரை மையத்திட்டு பூங்கா அமைக்கும் பணிக்கு ரூ.2.00 கோடி மதிப்பீட்டிலும்,

மத்திய மண்டலம் பாரதியார் சாலையில் காந்திபுரம் நகரப்பேருந்து நிலையம் முதல் அவிநாசி சாலை வரை மையத்திட்டு பூங்கா அமைக்கும் பணிக்கு ரூ.2.00 கோடி, சரோஜினி சாலையில் சின்னசாமி சாலை முதல் சங்கனூர் பாலம் வரை ரூ.1.00 கோடி, பாலசுந்தரம் சாலையில் வடக்கு வட்டாச்சியர் அலுவலகம் முதல் அவிநாசி சாலை வரை ரூ.1.00 கோடி மதிப்பீட்டிலும்,

கிழக்கு மண்டலம் வார்டு எண்.24–க்குட்பட்ட விளாங்குறிச்சி சாலையில் S Bend முதல் காந்தி மாநகர் பாலம் வரை மையத்திட்டு பூங்கா ரூ.2.00 கோடி மதிப்பீட்டிலும்

மேற்கு மண்டலம் லாலிரோடு முதல் மருதமலை வரை மையத்திட்டு பூங்கா ரூ.2.00 கோடி மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் 7 இடங்களில் ரூ.12.50 கோடி மதிப்பீட்டில் மையத்திட்டு பூங்கா அமைக்க சாலைபாதுகாப்பு நிதி/அரசு மற்றும் தனியார் பங்களிப்பு நிதி பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 49. அங்கன்வாடி மையம்

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின்கீழ் அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் பழுதடைந்த அங்கன்வாடி மையங்கள் தெற்கு மண்டலம் – 20 எண்ணிக்கையிலும், மத்திய மண்டலம் – 3 எண்ணிக்கையிலும், மேற்கு மண்டலம் – 7 எண்ணிக்கையிலும், கிழக்கு மண்டலம் – 20 எண்ணிக்கையிலும், வடக்கு மண்டலம் – 4 எண்ணிக்கையிலும், மொத்தம் 50 எண்ணிக்கையிலான அங்கன்வாடி மையங்களை இடித்து புதியதாக ரூ.9.15 கோடி மதிப்பீட்டில் அமைக்க உரிய அரசுநிதி, மக்கள் பிரதிநிதி நிதி மற்றும் தனியார் பங்களிப்பு நிதி பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 50. புதிய பூங்காக்கள்

பூங்கா அமைத்தல் என்பது பொதுமக்கள் ஓய்வு எடுக்க, உடற்பயிற்சி செய்ய மற்றும் இயற்கையை ரசிக்க உருவாக்கப்படும் ஒரு முக்கியமான சமூக வளமாகும். நகரப்பகுதிகளில் அதிகரித்து வரும் மாசு மற்றும் மனஅழுத்தத்தை குறைக்கும் வகையில் பசுமை வளங்களை அதிகரிப்பது அவசியமாகும். மேலும், பூங்காக்கள் சமூக ஒற்றுமையை மேம்படுத்துவதோடு, முதியோர், குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கான ஆரோக்கியமான சூழலை வழங்குகின்றன. இதனால் நகர வாழ்க்கையில் அமைதியும், ஆரோக்கியமும், பசுமையும் வளர்ச்சியடைகின்றன.

★ கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட 20 வார்டு பகுதிகளில் 23 எண்ணிக்கையிலான புதிய பூங்காக்கள் அமைப்பதற்கு ரூ. 13.94 கோடி மதிப்பீட்டிலும்,

★ கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட 20 வார்டு பகுதிகளில் 22 எண்ணிக்கையிலான புதிய பூங்காக்கள் அமைப்பதற்கு ரூ.12.80 கோடி மதிப்பீட்டிலும்,

★ வடக்கு மண்டலத்திற்குட்பட்ட 20 வார்டு பகுதிகளில் 20 எண்ணிக்கையிலான புதிய பூங்காக்கள் அமைப்பதற்கு ரூ.11.80 கோடி மதிப்பீட்டிலும்,

★ மத்திய மண்டலத்திற்குட்பட்ட 20 வார்டு பகுதிகளில் 23 எண்ணிக்கையிலான புதிய பூங்காக்கள் அமைப்பதற்கு ரூ.12.60 கோடி மதிப்பீட்டிலும்,

★ மேற்கு மண்டலத்திற்குட்பட்ட 20 வார்டு பகுதிகளில் 20 எண்ணிக்கையிலான புதிய பூங்காக்கள் அமைப்பதற்கு ரூ.12.50 கோடி மதிப்பீட்டிலும்,

மொத்தமுள்ள 100 வார்டுகளில் 108 எண்ணிக்கையிலான புதிய பூங்காக்கள் ரூ.63.64 கோடி மதிப்பீட்டில் உரிய அரசு நிதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 51. மகளிர் பூங்கா (Pink Park)

இப்பூங்கா பெண்கள் சுதந்திரமாக நடைபயிற்சி, யோகா, உடற்பயிற்சி, விளையாட்டு மற்றும் ஓய்வு மேற்கொள்ள ஏற்றதாக வடிவமைக்கப்படுகிறது. பெண்கள் சமூக தொடர்புகளை வளர்க்கவும், மனஅழுத்தத்தை குறைக்கவும், ஆரோக்கியமான வாழ்க்கை முறையை கடைப்பிடிக்கவும் இத்தகைய பூங்காக்கள் உதவுகின்றன. நகரங்களில் பெண்களுக்கு பாதுகாப்பான பொது இடங்களை உருவாக்குவது சமூக முன்னேற்றத்திற்கும், சமத்துவத்திற்கும் முக்கிய பங்களிப்பாகும்.

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட தெற்கு மண்டலம் வார்டு எண்.77 சௌடேஸ்வரி காலனி, மேற்கு மண்டலம் வார்டு எண்.17–க்குட்பட்ட லட்சுமி நகர், கிழக்கு மண்டலம் வார்டு எண்.52–க்குட்பட்ட கல்லூரி நகர், மத்திய மண்டலம் வார்டு எண்.49–க்குட்பட்ட செங்காடு பகுதி, வடக்கு மண்டலம் வார்டு எண்.4–க்குட்பட்ட விசுவாசபுரம் பகுதி ஆகிய 5 இடங்களில் தலா ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் ரூ.3.75 கோடி மதிப்பீட்டில் மகளிர் பூங்காக்கள் அமைப்பதற்கு உரிய அரசு மற்றும் தனியார் பங்களிப்பு நிதி பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 52. புதிய கழிப்பிடங்கள் மற்றும் பராமரித்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி ஐந்து மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் புதிய கழிப்பிடங்கள் கட்டவும், ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள கழிப்பிடங்களை பராமரிப்பு பணிகள் செய்யவும், மண்டலத்திற்கு ரூ.1.00 கோடி வீதம் மொத்தம் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் உரிய அரசு நிதி பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 53. உடற்பயிற்சி கூடம்

உடல் ஆரோக்கியத்தையும் மனஉறுதியையும் மேம்படுத்துவதற்காக அமைக்கப்படும் சிறப்பு பயிற்சி மையமே உடற்பயிற்சி கூடம். தினசரி உடற்பயிற்சி செய்வதன் மூலம் மனஅழுத்தம் குறைந்து, உடல் சுறுசுறுப்பு அதிகரித்து, நல்ல வாழ்க்கை முறையை கடைப்பிடிக்க உதவுகிறது. எனவே, உடற்பயிற்சி கூடம் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.76 டெக்ஸ்டூல் காலனி, வார்டு எண்.79 செல்வபுரம், வார்டு எண்.87 சாய்கார்டன், பை–பை நகர், வார்டு எண்.92 மாருதி சிட்டி, வார்டு எண் 94 துளசி கார்டன், மற்றும் வார்டு எண்.95 என்.பி இட்டேரி ஆகிய இடங்களில் உடற்பயிற்சி கூடங்கள் அமைக்க ரூ. 2.74 கோடி மதிப்பீட்டிலும்,



மத்திய மண்டலம் வார்டு எண்.63–க்குட்பட்ட ராமலிங்க ஜோதி நகர் மற்றும் வார்டு எண்.80–க்குட்பட்ட தர்மராஜா கோவில் வீதி ஆகிய இடங்களில் உடற்பயிற்சி கூடங்கள் அமைக்க ரூ.1.00 கோடி மதிப்பீட்டிலும்,

மேற்கு மண்டலம் வார்டு எண்.17–க்குட்பட்ட சேரன் நகர் பகுதி மற்றும் வார்டு எண். 33–க்குட்பட்ட மாநகராட்சி உரக்கிடங்கு வளாகம் ஆகிய இடங்களில் உடற்பயிற்சி கூடங்கள் அமைக்க ரூ.1.65 கோடி மதிப்பீட்டிலும்.

கிழக்கு மண்டலம் வார்டு எண்.50–க்குட்பட்ட உடையாம்பாளையம் பகுதியில் வார்டு எண்.52–க்குட்பட்ட தாமோதர சாமி நகர், பெரியார் நகர், வார்டு எண்.58–க்குட்பட்ட கோத்தாரி நகர் ஆகிய இடங்களில் உடற்பயிற்சி கூடங்கள் அமைக்க ரூ. 1.40 கோடி மதிப்பீட்டிலும்.

வடக்கு மண்டலம் வார்டு எண்.25–க்குட்பட்ட காந்தி மாநகர் மற்றும் வார்டு எண்.28–க்குட்பட்ட திரு.வீ.க. நகர் ஆகிய இடங்களில் உடற்பயிற்சி கூடங்கள் அமைக்க ரூ.1.00 கோடி மதிப்பீட்டிலும்.

ஆக மொத்தம் 17 எண்ணிகையிலான உடற்பயிற்சி கூடங்கள் ரூ.7.79 கோடி மதிப்பீட்டில் உரிய அரசு நிதி பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 54. உயர்மட்ட பாலங்களின் கீழ்ப்பகுதியில் மேம்பாடு பணிகள்

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம், வார்டு எண்.100–க்குட்பட்ட பொள்ளாச்சி பிரதான சாலை சிட்கோ உயர்மட்ட பாலம் மற்றும் ஈச்சனாரி உயர்மட்ட பாலம், வார்டு எண்.99–க்குட்பட்ட போத்தனூர் ரயில்வே உயர்மட்ட பாலம், வார்டு எண்.97–க்குட்பட்ட மதுக்கரை சாலை ரயில்வே உயர்மட்ட பாலம், ஆகிய பாலத்தின் கீழ்ப்பகுதியில் பூங்கா மேம்பாட்டு பணிகள் ரூ.3.00 கோடி மதிப்பீட்டிலும்,

கிழக்கு மண்டலம் வார்டு எண்.55–க்குட்பட்ட எஸ்.ஐ.எச்.எஸ். காலனி மற்றும் வார்டு எண்.57–க்குட்பட்ட ஒண்டிப்புதூர் மேம்பாலத்தின் கீழ் பகுதிகளில் பூங்கா மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள ரூ.1.75 கோடி மதிப்பீட்டிலும்,



மத்திய மண்டலம் வார்டு எண்.31–க்குட்பட்ட டெக்ஸ்டூல் மேம்பாலம், வார்டு எண்.62–க்குட்பட்ட நஞ்சுண்டாபுரம் மேம்பாலம், வார்டு எண்.48 சின்னசாமி சாலை மேம்பாலம், வார்டு எண். 48, 67–நஞ்சப்பா சாலை, சத்தி சாலை, மேம்பாலத்தின் கீழ் பகுதிகளில் பூங்கா மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள ரூ.3.00 கோடி மதிப்பீட்டிலும்,

வடக்கு மண்டலம் வார்டு எண். 29–க்குட்பட்ட டெக்ஸ்டூல், மேம்பாலம், வார்டு எண்.15–க்குட்பட்ட மேட்டுப்பாளையம் சாலை ஜி.என் மில்ஸ் மேம்பாலம், வார்டு எண்.28 மற்றும் 29–க்குட்பட்ட ஆவாரம்பாளையம் மேம்பாலத்தின் கீழ் பகுதிகளில் பூங்கா மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள ரூ.3.60 கோடி மதிப்பீட்டிலும்,

மேற்கு மண்டலம் வார்டு எண்.45–க்குட்பட்ட சாய்பாபா காலனி மேம்பாலம் மற்றும் வார்டு எண்.17–க்குட்பட்ட கவுண்டம்பாளையம் மேம்பாலத்தின் கீழ் பகுதிகளில் பூங்கா மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள ரூ.2.75 கோடி மதிப்பீட்டிலும்,

ஆக மொத்தம் 15 எண்ணிக்கையிலான பூங்கா மேம்பாட்டு பணிகளுக்கு ரூ.14.10 கோடி மதிப்பீட்டில் உரிய அரசு நிதி பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 55. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான பாதுகாப்பான பாதை அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யப்பட வேண்டும். மாநகராட்சி பள்ளியை ஒட்டியுள்ள சாலைகளில் நடைபாதை வசதி, பாதை கடக்கும் வசதி, வழிகாட்டி பலகை பொருத்துதல், பள்ளி நுழைவாயில் அருகில் வேகத்தை குறைக்க வேகத்தடை , எச்சரிக்கை பலகை, எல்லைக்கோடு வரைதல், ஆகிய பணிகளை கீழ்கண்ட பள்ளிகளில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக காமராஜ் சாலையில் ஆரம்பித்து சுங்கம் திருச்சி சாலையில் சங்கனூர் பள்ளம் வரை உள்ள சாலையில் தேசிய நெடுஞ்சாலையில் பாதுகாப்பு வசதிகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சாலையில் 4 மாநகராட்சி பள்ளிகள் உள்ளிட்ட 6 தனியார் பள்ளிகளும் , ஒரு மகளிர் கல்லூரியும் உள்ளது.

1. வார்டு எண்.65 , இராமநாதபுரம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி
2. வார்டு எண்.63 , இராமநாதபுரம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி
3. வார்டு எண்.63 , இராமநாதபுரம் ஆரம்பப்பள்ளி
4. வார்டு எண்.63 , கணேசபுரம் ஆரம்பப்பள்ளி

இதனால் பள்ளிகளின் முன்பு ஏற்படும் விபத்தினை வெகுவாக குறைக்க இயலும். மேற்கண்ட வசதிகளை செய்தால் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதோடு செயல்திறனையும் அதிகரிக்க இயலும். எனவே மாநகராட்சி பள்ளி மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இந்த நிதியாண்டில் ரூ.10.00 கோடி அரசு மற்றும் பொதுநிதி பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 56. ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள்

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு 71க்குட்பட்ட திருவேங்கடம் சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் ரூ. 1.50 கோடி மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 57. பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் – இயக்குதல் மற்றும் பராமரித்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.72–க்குட்பட்ட திவான் பகதூர் சாலையில் உள்ள பலஅடுக்கு வாகன நிறுத்துமிடத்தினை தொழில்நுட்ப வல்லுனர்களைக் கொண்டு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு ரூ. 48.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 58. அறிவுசார் மையம் திறன் மேம்பாட்டு பயிற்சி

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் ஆடிஸ் வீதியில் உள்ள அறிவுசார் மையத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சியினை தனியார் நிறுவனத்தின் மூலம் 30 நாட்களுக்கு ஒரு பயிற்சி வீதம் 12 பயிற்சி திட்டங்கள் வழங்குவதோடு பயிற்சியின் போது பங்கேற்பாளர்களுக்கு மதிப்புமிக்க வேலை வாய்ப்புகளையும் வழங்குகின்றனர். இந்த பயிற்சியின் நோக்கம் நவீன காலத்தில் வேகமாக மாறும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தனிநபர்கள் திறன் மேம்படும். எனவே இப்பணிகள் வருகிற நிதியாண்டிலும் மேற்கொள்ள ரூ.90.00 இலட்சத்திற்கு பயிற்சிகள் நடத்தப்படும்.

மேலும் அறிவுசார் மையத்திற்கு நாளுக்கு நாள் படிக்க வரும் இளைஞர்கள் மற்றும் மாணாக்கர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதால் அவர்களுக்காக பயிற்சி தேர்வு நடத்த ரூ. 95.00 இலட்சத்திற்கு பயிற்சிகள் நடத்தப்படும்.

அறிவுசார் மையத்திற்கு நாளுக்கு நாள் படிக்க வரும் இளைஞர்கள் மற்றும் மாணாக்கர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதால் கூடுதலாக புத்தகங்கள் தேவைப்படுகிறது. இதற்கான பணிகள் மேற்கொள்ள தோராயமாக ரூ. 8.00 இலட்சம் செலவினம் ஆகும். உரிய நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



### 59. செம்மொழி பூங்கா – மலர் கண்காட்சி

கோயம்புத்தூர் மாநகராட்சி சார்பில் உருவாக்கப்பட்ட செம்மொழி பூங்காவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. நாள்தோறும் பார்வையாளர்கள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அருகிலுள்ள மாவட்டங்கள் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்தும் பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் குடும்பத்தினர் பெருமளவில் வருகை தருகின்றனர். குறிப்பாக வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வருகையாளர்கள் அதிக அளவில் காணப்படுகின்றனர். இப்பூங்கா சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இயற்கை அழகு மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களைக் கொண்ட முக்கிய பொதுமக்கள் ஓய்வு மையமாக உருவெடுத்துள்ளது. மாணவர்களுக்கு இயற்கை மற்றும் தாவரவியல் அறிவை மேம்படுத்தும் கல்வி சார்ந்த வாய்ப்புகளையும் வழங்குகிறது.



இதனை கருத்தில் கொண்டு, பொதுமக்கள் ஈர்ப்பை மேலும் உயர்த்தும் வகையில் ஆண்டுதோறும் மலர் கண்காட்சி நடத்துவது சிறப்பான முயற்சியாக இருக்கும். மலர் கண்காட்சி நகரின் சுற்றுலா வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் துணைபுரியும். மேலும், உள்ளூர் தோட்டக்கலை ஆர்வலர்கள் மற்றும் விவசாயிகளுக்கு தங்கள் திறமைகளை வெளிப்படுத்த மேடையாக அமையும். ஆகையால், செம்மொழி பூங்காவில் ஆண்டுதோறும் மலர் கண்காட்சி நடத்த மாநகராட்சி மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 60. மூத்த குடிமக்களுக்கு புத்துணர்ச்சி மையம் (Recreation Centre)

மூத்த குடிமக்களுக்கு பொழுதுபோக்கு மற்றும் புத்துணர்ச்சி அளிக்கும் வகையில், புதிய புத்துணர்ச்சி மையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த புத்துணர்ச்சி மையம், மூத்த குடிமக்கள் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும், நேரத்தை கழிக்க உதவும் வகையில் இந்நிதியாண்டில் இரண்டு இடங்களில் புத்துணர்ச்சி மையம் அமைக்கப்படவுள்ளது. இதற்காக இந்நிதியாண்டில் தலா ரூ.4.00 கோடி வீதம் மொத்தம் ரூ.8.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

## 61. வெள்ளலூர் குப்பை கிடங்கு மேம்பாட்டு பணி

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட வெள்ளலூர் பகுதியில் 654 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உரக்கிடங்கு வளாகத்தில் மாநகரின் 100 வார்டு பகுதிகளில் சேகரமாகும் குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு பல்வேறு பயன்பாடுகளுக்கு மறுசுழற்சி முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட உரக்கிடங்கு வளாகத்தின் பசுமை பரப்பினை அதிகப்படுத்தவும் மற்றும் சுற்றுச்சூழலை மேம்படுத்தவும் கட்டமைப்புகள் உருவாக்க ரூ.5.00 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.



## 62. முதல்வர் படைப்பகம் கூடுதல் அபிவிருத்தி பணி மேற்கொள்ளுதல்

மேற்கு மண்டலம் வார்டு எண்.33–க்குட்பட்ட ஜீவா நகர் சாலையில் வடக்கு பகுதியில் மாநகராட்சி காலி இடத்தில் மாணவர்கள், போட்டித் தேர்வு ஆர்வலர்கள் மற்றும் இளம் தொழில் முனைவோர்கள் ஆகியோரை ஊக்குவிக்கும் நோக்கில் முதல்வர் படைப்பகம் அமைக்கும் பணி ரூ.3.36 கோடியில் நடைபெற்று வருகிறது. இப்படைப்பகத்திற்கு கூடுதல் அபிவிருத்திப் பணிகள் கல்வி நிதி மூலம் மேற்கொள்ள ரூ.1.60 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

வடக்கு மண்டலம் வார்டு எண்.20–க்குட்பட்ட கணபதி மாநகர் நாளாவது பிளாக்கில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகள் வாசிப்பு திறனை மேம்படுத்த நோக்கில் முதல்வர் படைப்பகம் ரூ.3.36 கோடி மதிப்பீட்டில் கட்டடப்பட்டு வருகிறது. இப்படைப்பகத்திற்கு கூடுதல் அபிவிருத்திப் பணிகள் கல்வி நிதி மூலம் மேற்கொள்ள ரூ.1.60 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.



## 63. நூலகத்தில் உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்துதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்துக்குட்பட்ட வார்டு எண்.86 உக்கடம் புல்லுக்காடு பகுதியில் மாநகராட்சி மூலம் 2620 சதுர அடி பரப்பளவில் நூலக கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. இந்நூலகத்தில் மாணவ, மாணவியர்கள் போட்டி தேர்வுகள் எழுத, பயிற்சி வகுப்புகள் நடத்த, தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் பணிக்கு ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



## பாதாள சாக்கடை பணிகள்

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மொத்தப் பரப்பளவு 257.04 சதுர கிலோ மீட்டர், 100 வார்டுகள் உள்ளடக்கிய மக்கள் தொகை 22,89,000 ஆகும். தற்போது மாநகராட்சியிலுள்ள நான்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மொத்த கொள்ளளவு 200.53 எம்.எல்.டி ஆகும். கூடுதலாக அமைக்கப்படவுள்ள மூன்று கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மொத்த கொள்ளளவு 44.82 எம்.எல்.டி ஆகும். தற்போது மாநகராட்சியில் உற்பத்தியாகும் தினசரி கழிவுநீரின் கொள்ளளவு 246.24 எம்.எல்.டி ஆகும்.

தற்போது மாநகராட்சியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டப் பணிகளின் விவரம்:

### 1. குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (அம்ருத் திட்டம்)

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட குறிச்சி மற்றும் குனியமுத்தூர் வார்டு 87–100 பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசு ஆணை ரூ.591.14 கோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.



கழிவுநீர் சேகரிப்பு அமைக்கும் பணிகள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (30.53 எம்.எல்.டி) அமைக்கும் பணிகள் 100 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டு 05.02.2026 அன்று காணொலி மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

2. வடவள்ளி, வீரகேரளம், கவுண்டம்பாளையம் மற்றும் துடியலூர் பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம். (மண்டலம் 5 ,7)

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட வடவள்ளி, வீரகேரளம், கவுண்டம்பாளையம் மற்றும் துடியலூர் பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு மொத்தம் ரூ.922.16 கோடிகளில், 90 விழுக்காடு ஆசிய வளர்ச்சி வங்கியின் பங்காக மானியம் ரூ.645.54 கோடியும் மற்றும் கடன் ரூ.184.40 கோடியும், 10 விழுக்காடு மாநகராட்சியின் பங்காக ரூ.92.22 கோடியும் பெறப்பட்டு திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.

வடவள்ளி, வீரகேரளம், கவுண்டம்பாளையம் மற்றும் துடியலூர் ஆகிய பகுதிகளில் உள்ள 12 வார்டுகள் முழுமையாகவும் மற்றும் 2 வார்டுகள் பகுதியாகவும் இத்திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது.

இத்திட்டம் முடிவடைந்து பயன்பாட்டிற்கு வரும் பட்சத்தில் முழு சுகாதாரமான தூய்மையான மாநகராட்சியின் வடவள்ளி, வீரகேரளம் கவுண்டம்பாளையம், மற்றும் துடியலூர் பகுதிகள் பயன்பெறும், இதனால் பயன்பெறுவோர் எண்ணிக்கை 3,16,155 ஆகும்.

கழிவுநீர் சேகரிப்பு அமைக்கும் பணிகள் மற்றும் இரண்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் (கவுண்டம்பாளையம் மற்றும் சொக்கம்புதூர்) பணிகள் தற்போது 53 சதவீதம் மற்றும் 33 சதவீதம் முறையே முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டம் 9/2026 இல் முடிக்க இலக்கிடப்பட்டுள்ளது.

இந்த நிதி ஆண்டில் மீதம் பெறப்பட வேண்டிய தொகை ரூ.300.00 கோடி ADB நிதியினை பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3. கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதியான சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி (பகுதி) மற்றும் வெள்ளக்கிணறு உள்ளடக்கிய ஒன்பது வார்டுகளில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் (மண்டலம் 6)

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி பகுதி மற்றும் வெள்ளக்கிணறு பகுதிகளுக்கான (ஒன்பது வார்டுகள் 2, 3, 10, 11, 12, 13, 14 பகுதிகள் மற்றும் 21 பகுதி) பாதாள சாக்கடை திட்டத்திற்கான அரசாணை பெற்று ரூ.318.90 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் முடிவடைந்து பயன்படும் பட்சத்தில் முழு சுகாதாரமான தூய்மையான பகுதியாக மாநகராட்சி வார்டுகள் 2, 3, 10, 11, 12, 13, 14 மற்றும் 21 உள்ளடக்கிய சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி பகுதி) மற்றும் வெள்ளக்கிணறு பகுதிகள் பயன்பெறும் என்பதில் ஐயமில்லை. இதன் மூலம் பயன்பெறுவோர் எண்ணிக்கை 1,11,865 ஆகும். கழிவு நீர் சேகரிப்பு அமைக்கும் பணிகள் தற்போது 55 சதவீதம் முடிக்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

இத்திட்டத்தில் சின்ன வேடம்பட்டி ஏரியின் அருகாமையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஒப்பந்தப் புள்ளிகள் கூறப்பட்டு பணி ஆணை 22.11.2024 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த நிதி ஆண்டில் மீதம் பெறப்பட வேண்டிய தொகை ரூ.180.00 கோடி அம்ருத் 2.0 திட்ட நிதியினை பெற்று வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 4. ஒண்டிப்புதூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குட்பட்ட விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம்

**பணியின் பெயர் :** ஒண்டிப்புதூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குட்பட்ட விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் பணி.

மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி ரூ.185.00 கோடிக்கு அரசாணை எண்.143, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 08.11.2023–ல் பெறப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| சிப்பம் – 1 | கணபதி, காந்திமாநகர் மற்றும் விளாங்குறிச்சி சாலை ஆகிய இடங்களில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை அமைத்தல் |
| சிப்பம் – 2 | தண்ணீர் பந்தல், SIHS காலனி மற்றும் ஒண்டிப்புதூர் ஆகிய இடங்களில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை அமைத்தல் |



சிப்பம் 1–ல் 96 % பணிகளும், சிப்பம் – 2ல் 97% பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி ஆண்டில் தொகை ரூ.20.73 கோடி அம்ருத் 2.0 நிதியினை அரசிடம் பெற்று வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 5. புதிய திட்ட பணிகளின் விவரம்

### திட்டம் I

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பாதாள சாக்கடை திட்டம் விடுபட்ட காளப்பட்டி, விளாங்குறிச்சி (பகுதி) மற்றும் சரவணம்பட்டி (பகுதி) பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் விரிவான திட்ட அறிக்கை ரூ.750.00 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு வருகிறது. அரசு நிதி பெற்று இத்திட்டப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

### திட்டம் II

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 1966ம் ஆண்டிற்கு முன்பே சில பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் முடிவு பெற்று தற்போது வரை 70 வருடங்களாக இயக்கத்திலுள்ளது. இப்பணிகள் மேற்கொள்ளப்பட்ட பகுதிகள் களஆய்வு செய்யப்பட்டு அதன் பிரதான பகிர்மான குழாய்கள் பழுதடைந்துள்ளதால் சுமார் 900 கி.மீட்டர் தூரம் உள்ள பாதாள சாக்கடை பிரதான மற்றும் பகிர்மான குழாய்களின் மராமத்து பணிக்காக ஏற்படும் செலவினம் ரூ. 850.00 கோடி ஆகும்.

### திட்டம் III

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் தற்போது பயன்பாட்டில் உள்ள உக்கடம் நஞ்சுண்டாபுரம் மற்றும் ஒண்டிப்புதூர் பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையங்களை அபிவிருத்தி செய்ய மத்திய அரசு குழுவின் ஆய்வுக்குப் பின் வழங்கிய தரச்சான்று அடிப்படையில் Jal Hi Amrit திட்டத்தில் வழங்கப்பட்ட ஊக்குவிப்பு மானியத்திற்கும் மதிப்பீடு ரூ. 4.11 கோடிக்கு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் நிர்வாக அனுமதிக்காக நடவடிக்கையில் உள்ளது. ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அரசு நிதியில் (JHA) தொழில்நுட்ப அனுமதி பெற்று விரைவில் பணிகள் துவங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, வரும் நிதி ஆண்டில் (2026 – 2027) கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விடுபட்ட மற்றும் பாதாள சாக்கடை அபிவிருத்தி பணிகளுக்காக (திட்டம் I, திட்டம் II மற்றும் திட்டம் III) மொத்தமாக ரூ.1604.11 கோடி மதிப்பீட்டில் அரசு நிதி உதவி பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

# குடிநீர் விநியோக பணிகள்

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மொத்தப் பரப்பளவு 257.04 சதுர கிலோ மீட்டர், 100 வார்டுகள் உள்ளடக்கி மக்கள் தொகை 22,89,000 ஆகும். மாநகரின் மொத்த குடிநீர் தேவை 135 LPCD என்ற அளவில் வழங்க – 308.89 எம்.எல்.டி ஆகும். கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு, குடிநீர் வழங்க பயன்படும் 6 குடிநீர் திட்டங்களுக்கு, குடிநீர் சேகரிக்கும் ஆதாராமான சிறுவாணி ஆறு, பவானி ஆறு, ஆழியாறு மற்றும் பில்லூர் அணைகளில் போதிய அளவு தண்ணீர் உள்ளது.

தற்போது மாநகராட்சியில் நடைபெற்று வரும் குடிநீர் திட்டப் பணிகளின் விவரம்

## 1. 24 மணி நேர குடிநீர் திட்டம்



பழைய மாநகராட்சி பகுதிகள் 24x7 குடிநீர் திட்டப்பணிகள் ரூ.646.71 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. மொத்தமுள்ள 99 DMAகளில் (District Metered Area) 36 DMAல் 24 மணி நேர குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. 18 DMAல் பகுதி நேர விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது 94 சதவீத பணிகள் முடிவுற்ற நிலையில் மொத்த திட்ட நிதியில் 68 சதவீத நிதி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகளை முடிக்கவும் மற்றும் பராமரிப்பு பணிக்காகவும் ரூ.282.66 கோடி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 2. துடியலூர், சரவணம்பட்டி, சின்னவேடம்பட்டி, வெள்ளக்கிணறு, விளாங்குறிச்சி, காளப்பட்டி, குறிச்சி மற்றும் குனியமுத்தூர் ஆகிய எட்டு பகுதிகளுக்கு குடிநீர் பகிர்மான அபிவிருத்தி பணி

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட எட்டு பகுதிகளுக்கான குடிநீர் பகிர்மான அபிவிருத்தி திட்டப்பணிகள் திருத்தியமைக்கப்பட்ட அரசாணை எண். 38 நாள்.12.04.2018 ல் ரூ.487.71 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இரண்டு எண்ணிக்கையிலான சமநிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் 43 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் பணிகள் முடிக்கப்பட்டு 95440 எண்ணிக்கையிலான வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து புதியதாக பதிக்கப்பட்டுள்ள பகிர்மானக் குழாய்களை இணைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதற்காக இந்நிதியாண்டில் ரூ.30.08 கோடி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

## 3. புதிய குடிநீர் திட்ட பணிகளின் விவரம்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் தோற்றுவிக்கப்பட்ட மனைப்பிரிவுகள் மற்றும் குடிநீர் விநியோகம் விடுபட்ட பகுதிகளுக்கு 24x7 குடிநீர் விநியோகம் செய்வதற்காக பழுதடைந்த குடிநீர் குழாய்களை மாற்றியமைக்கவும், புதிய குடிநீர் குழாய்களை பதிக்கவும், விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணிகள் மேற்கொள்ள மண்டலம் ஒன்றுக்கு ரூ.300.00 கோடி மதிப்பீட்டில் மொத்தம் நான்கு மண்டலத்திற்கு (கிழக்கு, மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு) ரூ.1200.00 கோடி அரசு நிதி பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

4. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD) – குடிநீர் கட்டணம்

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு குடிநீர் ஆதாரமான சிறுவாணி அணை, பவானி ஆறு, ஆழியாறு மற்றும் பில்லூர் அணைகளில் இருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பெறப்படுகிறது. அதற்கான குடிநீர் கட்டணம் ரூ.65.00 கோடி வழங்க வரும் நிதியாண்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## பருவநிலை நிதிஅறிக்கை (City – Climate Budget) – திட்ட வரைவு

கோயம்புத்தூர் மாநகரத்தின் சுற்றுச்சூழல் சமநிலையை மீட்டெடுக்கவும், நீண்டகால பருவநிலை பின்னடைவை உருவாக்கவும் "பருவநிலை நிதிநிலை அறிக்கை 2026–27" (Climate Budget 2026–27) தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் நகரின் நீர்வள மேலாண்மை, பசுமைப் போர்வை விரிவாக்கம் மற்றும் வெப்பத் தணிப்பு ஆகியவற்றை ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்த இலக்கு கொண்டுள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள முக்கிய திட்டங்கள் மற்றும் நிதி விவரங்கள்

1. நீர் வள மேலாண்மை மற்றும் புத்துயிரூட்டுதல் (மொத்த ஒதுக்கீடு: ரூ.518.68 கோடி)

★ சங்கனூர் பள்ளம் புனரமைப்பு : வெள்ளத் தடுப்பு மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக சுமார் 6.90 கி.மீ தூரத்திற்கு ரூ.294.00 கோடி மதிப்பீட்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. அரசு நிதி பெற மேல்நடவடிக்கை தொடரப்பட்டுள்ளது.

★ நொய்யல் ஆறு பாதுகாப்பு : கழிவுநீர் கலப்பதைத் தடுக்க சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கவும் ஆற்றங்கரை மேம்பாட்டிற்கு ரூ.202.74 கோடிக்கு அரசிடம் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

★ **ஏரி மற்றும் கிணறு புனரமைப்பு** : சிங்காநல்லூர் மற்றும் செங்குளம் ஏரிகளை மீட்டெடுக்க ரூ.37.84 கோடிக்கும், 836 பாரம்பரிய திறந்தவெளி கிணறுகளைப் புதுப்பிக்க ரூ.8.36 கோடிக்கும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

**2. நகர்ப்புற பசுமையாக்குதல் மற்றும் பல்லுயிர் பெருக்கம் (மொத்த ஒதுக்கீடு: ரூ.122.50 கோடி)**

★ **பசுமை நகர் திட்டம்** : 100 பூங்காக்களில் மியாவாக்கி காடுகள் மற்றும் பூர்வீக மரங்களை வளர்க்க ரூ.120.00 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

★ **மாடித் தோட்டம்** : கட்டிட வெப்பத்தைக் குறைக்கவும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும் மாடித் தோட்டத் திட்டத்திற்கு ரூ.2.50 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

**3. பருவநிலை தழுவல் மற்றும் வெப்பத்தைத் தணித்தல் (மொத்த ஒதுக்கீடு: ரூ.7.50 கோடி)**

★ **மழைநீர் சேகரிப்பு** : 2026-க்குள் மாநகராட்சி கட்டிடங்களில் 100% மழைநீர் சேகரிப்பை உறுதி செய்ய ரூ.5.00 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

★ **கூல் ரூஃப் (Cool Roof) திட்டம்** : மாநகராட்சி கட்டிடங்களில் வெப்பப் பிரதிபலிப்பு பூச்சு மூலம் உட்புற வெப்பத்தை 2–5°C வரை குறைக்க ரூ.2.50 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

## திடக்கழிவு மேலாண்மை திட்டம்

ஒருங்கிணைந்த கழிவு மேலாண்மைக்கு ரூ.4.74 கோடியும், உக்கடம் மிதக்கும் சூரியசக்தி திட்ட பராமரிப்பிற்கு ரூ.9.00 இலட்சம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

மேற்கூறிய திட்டத்தின்படி கோயம்புத்தூர் மாநகராட்சியை ஒரு நீடித்த மற்றும் பருவநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய நகரமாக மாற்றும் நோக்கில் 2026–27 ஆம் நிதியாண்டிற்கான மொத்த பருவநிலை திட்ட மதிப்பீடு ரூ.653.51 கோடிக்கு அரசு நிதி பெற்று பணிகள் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 1. இயற்கை எரிவாயு மையம் (Bio CNG)

பயோ–சிஎன்ஜி என்பது உயிரியல் கழிவுகள், உணவு கழிவுகள் மற்றும் வேளாண்மை எச்சங்கள் போன்ற கரிமப் பொருட்களிலிருந்து உயிரி செரிமான முறையின் மூலம் தயாரிக்கப்படும் புதுப்பிக்கத்தக்க எரிவாயுவாகும். இவ்வாயு சுத்திகரிக்கப்பட்டு, சுருக்கப்பட்ட இயற்கை எரிவாயுவிற்கு இணையான தரத்தில்



மாற்றப்பட்டு வாகன எரிபொருளாகவும் தொழில்துறை தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. எனவே, பயோ–சிஎன்ஜி நிலைத்த வளர்ச்சிக்கும் பசுமை ஆற்றல் உற்பத்திக்கும் ஒரு திறன் வாய்ந்த மாற்றுப் பொருளாதாரமான தீர்வாகக் கருதப்படுகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் தினந்தோறும் சேகரமாகும் மக்கும் கழிவுகளை அகற்றுவதற்கு ரூ.69.20 கோடி மதிப்பீட்டில் 250 மெட்ரிக் டன் அளவுள்ள இயற்கை எரிவாயு மையம் (Bio CNG) உட்கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

2. குப்பையிலிருந்து மின் உற்பத்தி செய்தல் (Waste to Energy)

Waste to Energy என்பது நகர்ப்புறப் பகுதிகளில் உருவாகும் திடக்கழிவுகள், உயிரியல் கழிவுகள் மற்றும் உணவுக் கழிவுகள் போன்றவற்றை அறிவியல் முறையில் செயலாக்கி மின்சாரம் அல்லது வெப்ப சக்தி உருவாக்கும் தொழில்நுட்பமாகும்.

வெள்ளலூர் உரக்கிடங்கில் Bio – Mining முறையில் மீட்கப்பட்ட 54 ஏக்கர் நிலத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் சேகரமாகும் தினசரி 600 டன் திடக்கழிவுகளில் இருந்து 20 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய (Waste to Energy Plant) உரிய திட்ட மதிப்பீடுகளை பெற்று அரசு உதவியுடன் செயலாக்கத்திற்கு கொண்டு வர சுமார் ரூ. 466.00 கோடிக்கு பணிகள் மேற்கொள்ள திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசு அனுமதி பெற நடவடிக்கையில் உள்ளது.

### 3. Bio–Mining திட்டம்

வெள்ளலூர் உரக்கிடங்கு மேம்பாட்டு பணிக்காக ஏற்கனவே உள்ள பழைய கழிவுகளை அறிவியல் ரீதியாக அகற்றுவதற்கு ரூ.60.00 கோடி மதிப்பீட்டில் Bio–Mining திட்டம் (Phase–1) செயல்படுத்தி முடிக்கப்பட்டு 54 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டு உள்ளது.

மேலும் மீதமுள்ள அனைத்து பழைய குப்பைகளை அகற்றுவதற்கு ரூ.58.54 கோடி (Phase–2) திட்டம் தயாரிக்கப்பட்டு 7,94,139 மெட்ரிக் டன் கொண்ட குப்பைகளை Bio–Mining முறையில் அகற்றும் பணி தற்போது நடைபெற்று வருகிறது, மேலும் வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் எஞ்சியுள்ள பழைய குப்பைகளும் கவுண்டம்பாளையம் பகுதியில் ஏற்கனவே மூடப்பட்டுள்ள பழைய குப்பைகளையும் சேர்த்து 3,50,000 மெட்ரிக் டன் குப்பைகளை Bio –Mining செய்ய ரூ.19.25 கோடிக்கு SBM 2.o திட்டத்தில் நிதி உதவி கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.



## 4. வெள்ளலூர் குப்பைக் கிடங்கு சுற்றுச்சுவர் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வெள்ளலூர் பகுதியில் 646 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உரக்கிடங்கு வளாகத்தில் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு பகுதியில் சுற்றுச்சுவர் இல்லாத நிலையிலும், வட மேற்கு பகுதியில் ஏற்கனவே உள்ள சுற்றுச்சுவர் உயரம் குறைவாக உள்ளதாலும் அருகிலுள்ள மக்கள் அத்துமீறி நுழைவதை தடுக்க புதியதாக சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் ஏற்கனவே உள்ள சுற்றுச்சுவர் உயர்த்தி கட்டுதல் ஆகிய பணிகள் ரூ. 8.67 கோடியில் உரிய அரசு நிதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 5. குப்பை மாற்று நிலையங்கள்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பீளமேடு, உக்கடம் மற்றும் சக்தி ரோடு பகுதியில் தினசரி 350 TPD அளவு குப்பை மாற்று நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. மேலும் மாநகராட்சியில் புதியதாக கோவைபுதூர், கவுண்டம்பாளையம் மற்றும் பீளமேடு பகுதியில்



தினசரி 200 TPD மூன்று குப்பை மாற்று நிலையம் அமைக்க ரூ.29.93 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்போது, கவுண்டம்பாளையம் பணி முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் இந்நிதியாண்டில் முடிக்கப்படும்.

### 6. திடக்கழிவு வாகனங்கள் நிறுத்துமிடம்

மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் திடக்கழிவு மேலாண்மைக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் நிறுத்தும் இடம், பணிமனை, EV Charger, வடிகால் வசதி, குடிநீர் வசதி மின்சார வசதி பாதுகாவலர்களுடன் கூடிய கட்டமைப்பு ரூ.28.00 கோடி மதிப்பீட்டில் (வடக்கு – வார்டு எண்.12–க்குட்ப்பட்ட சின்னவேடம்பட்டி சாலை மயானம் அருகில் மற்றும் வார்டு எண்.26–க்குட்ப்பட்ட விளாங்குறிச்சி NULM கட்டிடம் அருகில், கிழக்கு – வார்டு எண்.9–க்குட்பட்ட அம்பேத்கார் நகர் மற்றும் வார்டு எண்,54க்குட்பட்ட ஜோதி நகர், மத்தியம் – வார்டு எண்.48–க்குட்பட்ட சத்தி சாலை மற்றும் வார்டு எண்.84 புல்லுக்காடு, தெற்கு – வெள்ளலூர் உரக்கிடங்கு வளாகம், மேற்கு – வார்டு எண்.75 சீரநாயக்கன்பாளையம் மற்றும் வார்டு எண்.36 ஈ.பி. காலனி) மொத்தம் 9 இடங்களில் அமைக்கப்படும்.

## புவியியல் தகவல் பிரிவு பணிகள்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள மாநகராட்சியின் பொறியியல், நகரமைப்பு, வருவாய், பொதுநலம், கல்வி ஆகிய பிரிவுகளில் உள்ள சொத்துக்கள் அனைத்தையும் பராமரிக்கவும் அபிவிருத்தி செய்யவும் தேவையான நிதிகளை ஆய்வு செய்யவும், முடிவெடுக்கவும், அமையப்பட்டுள்ள இடத்தில் உள்ளதை GIS புவியியல் தகவல் மென்பொருள் உதவியுடன் தனித்தனி அடுக்கு வரைபடங்களாக பதிவேற்றம் செய்ய போதுமான தளவாடங்கள் பெறப்பட்டு தனி பிரிவாக இயங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் முறையே புதிய குடிநீர் இணைப்பு, பாதாள சாக்கடை இணைப்பு, புதிய வரி விதிப்புகள் அனைத்தையும் கண்காணித்து பதிவேற்றம் செய்யவும் தேவையான பணியாளர்கள் அடங்கிய பிரிவு அபிவிருத்தி செய்யவும் வரும் நிதி ஆண்டில் (2026 – 2027) புவியியல் தரவு அபிவிருத்தி பணிகளுக்காக மொத்தமாக ரூ. 5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## நகரமைப்பு பிரிவு

### 1. மாநகராட்சிக்கு சொந்தமான பொது ஒதுக்கீடு இடங்கள், நிலங்கள் மற்றும் நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கைகள்.

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2025 – 26 ஆண்டில் 38 எண்ணிக்கையிலான பொது ஒதுக்கீடு இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு சுற்று வேலி அமைத்து பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பு மீட்கப்பட்ட இடத்தின் மொத்த பரப்பளவு 10 ஏக்கர் மற்றும் இதன் மொத்த மதிப்பு ரூ.118.14 கோடி ஆகும். வரும் நிதி ஆண்டிலும் தொடர்ந்து மாநகராட்சிக்கு சொந்தமான பொது ஒதுக்கீடு இடங்கள், நிலங்கள் மற்றும் நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட இடங்களை சுத்தம் செய்து சுற்றுவேலி அமைத்து பாதுகாப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள 2702 பொது ஒதுக்கீடு இடங்களில் 1856 எண்ணிக்கையிலான பொது ஒதுக்கீடு இடங்கள் மாநகராட்சியின் பெயருக்கு வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள இனங்களுக்கும் வரும் நிதியாண்டில் பெயர் மாற்றம் செய்து முடிக்க ரூ. 5.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2. பொது ஒதுக்கீடு இடங்களில் பசுமை தோட்டம் ஏற்படுத்துதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள பொது ஒதுக்கீடு இடங்களில் 2025–26ஆம் ஆண்டில் 64073 எண்ணிக்கையிலான மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு பசுமை தோட்டம் ஏற்படுத்தி பராமரிக்கப்பட்டு வருகிறது, வரும் நிதியாண்டில் மாநகராட்சிக்கு சொந்தமான பொது ஒதுக்கீடு இடங்களில் மரக்கன்றுகள் நட்டு பசுமை தோட்டம் ஏற்படுத்த பணியாளர்களை நியமித்து மரங்களை வளர்க்கவும் மரக்கன்றுகளுக்கான பாதுகாப்பு கூண்டு ஏற்படுத்தவும் ரூ. 1.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



### 3. அனுமதியற்ற விளம்பரங்களை அகற்றுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2025-26 ஆம் ஆண்டில் 1391 எண்ணிக்கையிலான அனுமதியற்ற விளம்பரங்கள், விளம்பர பலகைகள் மற்றும் விளம்பர பதாதைகள் அகற்றப்பட்டுள்ளது. தொடர் நடவடிக்கையாக வரும் நிதியாண்டில் மாநகராட்சியின் அனுமதி இல்லாமலும், சட்ட விதிமுறைகளுக்கு மாறாகவும் அமைக்கப்பட்டுள்ள விளம்பரங்களை அகற்ற பிரத்யேகமான வாகனம், விளம்பர பலகை சட்டங்களை அகற்றும் வகையிலான அறுவை இயந்திரங்கள் மற்றும் இதற்கான தொழில்நுட்ப பணியாளர்களை பயன்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ள ரூ. 1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 4. சாலையோர ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள், தெருக்கள் மற்றும் நடைபாதை ஆகியவற்றில் பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ள தற்காலிக ஆக்கிரமிப்புகளை அகற்ற ஆக்கிரமிப்பு அகற்றும் வாகனம் மற்றும் ஐந்து பணியாட்களை கொண்டு "தீவிர பறக்கும் படை" அமைத்து செயல்பட ரூ. 1.05 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 5. அனுமதியற்ற / விதிமீறல் கட்டுமானங்களை டிரோன் மூலம் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியில்லாமலும், விதிமீறி கட்டப்படும் கட்டுமானங்களை டிரோன் மூலம் கண்டறிந்து தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம், 1998-ன் படி நடவடிக்கைகள் மேற்கொள்ள ரூ. 2.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

## மாமன்ற பிரிவு

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் வார்டு பகுதியில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள வார்டு ஒன்றுக்கு ரூ.55.00 இலட்சத்திலிருந்து ரூ.60.00 இலட்சமாக உயர்வு செய்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வருவாய் பிரிவு

### 1. புதிய மார்க்கெட் மற்றும் வணிக வளாகம் அமைத்தல்

- ★ வடக்கு மண்டலம் வார்டு எண்.2-க்குட்பட்ட துடியலூர் பஸ் நிறுத்தத்தின் அருகில் சுமார் 1 ஏக்கர் பரப்பளவில் புதியதாக மார்க்கெட் கட்டும் பணி துவங்கப்படவுள்ளது. இதில் RCC கூரையுடன் கட்டப்படவுள்ள 132 கடைகள் மற்றும் GI Sheet கூரையுடன் கட்டப்படவுள்ள 350 சிறிய மேடை கடைகளை ஏலம் விடுவதன் மூலம் தோராயமாக, ரூ.96.00 இலட்சம் வருவாய் ஈட்டலாம்.

- ★ மத்திய மண்டலம் வார்டு எண்.70 கிருஷ்ணசாமி சாலையில் வணிக வளாக கடைகள் அமைத்து ஏலம் விடுவதன் மூலம் தோராயமாக ரூ.40.00 இலட்சம் வருவாய் ஈட்டலாம்.

- ★ கிழக்கு மண்டலம் வார்டு எண்.24 கொடிசியா சாலை விளாங்குறிச்சி பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள 11 கடைகள் சேர்த்து ஒரே இனமாக ஏலம் விடுவதன் மூலம் தோராயமாக ரூ.7.52 இலட்சம் வருவாய் ஈட்டலாம்.

- ★ கிழக்கு மண்டலம் வார்டு எண்.61 கிழக்கு மண்டல அலுவலகத்தில் உள்ள வணிக கட்டிடத்தை புனரமைப்பு செய்து, ஏலம் விடுவதன் மூலம் தோராயமாக ரூ.16.80 இலட்சம் வருவாய் ஈட்டலாம்.

- ★ கிழக்கு மண்டலம் வார்டு எண்.61 போயர் வீதியில் அமைந்துள்ள பழைய கட்டிடத்தை அகற்றி 8 கடைகள் கட்டப்படவுள்ளது. ஏலம் விடுவதன் மூலம் ரூ.7.68 இலட்சம் வருவாய் ஈட்டலாம்.

## 2. ஒரு வார்டுக்கு ஒரு வரிவசூல் மையம் அமைத்தல்

ஐந்து மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் 44 எண்ணிக்கையில் வரிவசூல் மையங்கள் செயல்பட்டு வருகின்றது. தற்போது ஒரு வார்டுக்கு ஒரு வரிவசூல் மையம் வீதம் மீதமுள்ள 56 வார்டுகளில் புதியதாக வரிவசூல் மையங்கள் கட்டவும், இதன்மூலம் ஒவ்வொரு வார்டிலும் வரிவசூல் செய்வதுடன் சொத்துவரி புத்தகம், குடிநீர் கட்டண புத்தகம் வழங்குதல், பெயர்களில் உள்ள எழுத்துப்பிழை திருத்தம் மற்றும் கதவு எண் திருத்தம் ஆகிய குறைபாடுகள் சரி செய்வதற்கான விண்ணப்பங்கள் பெறுதல் ஆகியவற்றை செயல்படுத்துவதன் மூலம் பொதுமக்கள் மண்டல அலுவலகத்திற்கு செல்வதால் ஏற்படும் கால விரயத்தை தவிர்க்க முடியும்.

## 3. உணவு அரங்கு (Food Court )

மத்திய மண்டலம் வார்டு எண்.82 க்குட்பட்ட உக்கடம் பேருந்து நிலையத்தில் கட்டப்படும் உணவு அரங்குடன் 10 கடைகள் மற்றும் கழிப்பிடம் கட்டி ஏலம் விடுவதன் மூலம் தோராயமாக ரூ.40 இலட்சம் வருவாய் ஈட்டலாம்.

## 4. உணவு வழங்கும் திட்டத்திற்கு சமையல் அறை கட்டி வாடகைக்கு விடுதல்

மேற்கு மண்டலம் வார்டு எண்.36 வி.என்.ஆர் நகரில் காலை உணவு திட்டத்திற்கான சமையல் அறை வாடகைக்கு விடுவதன் மூலம் தோராயமாக ரூ.10.80 இலட்சம் வருவாய் ஈட்டலாம்.

## 5. வாகனம் நிறுத்துமிட வசதியுடன் பேருந்து நிழற்குடை அமைத்தல்

வடக்கு மண்டலம் வார்டு எண்.01 க்கு உட்பட்ட துடியலூரில் புதியதாக கட்டப்படவுள்ள பேருந்து நிழற்குடை மற்றும் 50 எண்ணிக்கையிலான இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் ஏலம் விடுவதன் மூலம் தோராயமாக ரூ.1.50 இலட்சம் வருவாய் ஈட்டலாம்.

## 6. வாகனம் நிறுத்துமிடம்

வடக்கு மண்டலம் வார்டு எண். 2–க்குட்பட்ட துடியலூர் பஸ் நிறுத்தம் காய்கறிகள் விற்பனை செய்யும் கடைகளின் கட்டிடத்திற்கு அருகில் 350 எண்ணிக்கையிலான இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடமும். 100 எண்ணிக்கையிலான நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடமும் கட்டப்படவுள்ளது, ஏலம் விடுவதன் மூலம் ரூ.10 இலட்சம் வருவாய் ஈட்டலாம்.

மத்திய மண்டலம் வார்டு எண்.82 கோணியம்மன் கோவில் எதிர்புறம் மற்றும் உக்கடம் பேருந்து நிலையம் அருகில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் அமைத்து ஏலம் விடுவதன் மூலம் தோராயமாக ரூ.33 இலட்சம் வருவாய் ஈட்டலாம்.

மத்திய மண்டலம் வார்டு எண்.82 உக்கடம் பேருந்து நிலையம் அருகில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் அமைத்து ஏலம் விடுவதன் மூலம் தோராயமாக ரூ.30 இலட்சம் வருவாய் ஈட்டலாம்.

மத்திய மண்டலம் வார்டு எண்.82 லங்கா கார்னர் பகுதியில் வாகன நிறுத்துமிடம் அமைத்து ஏலம் விடுவதன் மூலம் தோராயமாக ரூ.15 இலட்சம் வருவாய் ஈட்டலாம்.

மத்திய மண்டலம் வார்டு எண்.82 உக்கடம் பேருந்து நிலையம் எதிர்புறத்தில் வாகன நிறுத்துமிடம் ஏலம் விடுவதன் மூலம் தோராயமாக ரூ.8.82 இலட்சம் வருவாய் ஈட்டலாம்.

7. பல அடுக்கு வாகனங்கள் நிறுத்துமிடம் (Multi level Car Parking)

மத்திய மண்டலம் வார்டு எண்.67–க்குட்பட்ட கிராஸ்கட் சாலையில் 200 எண்ணிக்கையிலான நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்த பல அடுக்கு வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் 100 எண்ணிக்கையிலான இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் அமைத்து ஏலம் விடுவதன் மூலம் ரூ.30 இலட்சம் வருவாய் ஈட்டலாம்.

